விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
Valampurii

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 14 செவ்வாய்க்கிழமை (30.07.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 223

கல்யான மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

19 ஆவது அரசியல் சீர்திருத்தம்

எமது குடும்ப அரசியல் வரவை தடுக்க உருவாக்கப்பட்டது

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த

(கொழும்பு)

அரசியலமைப்புசீர்திருத்தமானது நாட்டுக்குத் தேவையான விடயங்களை கருத்திற்கொண்டு உருவாக்கப்பட வேண்டும். எனினும் 19 ஆவது திருத்தமானது ஒரு குடும்பத்தின் அரசியல் வரவினை தடுக்க வேண்டும் என்ற குறுகிய நோக்கத்திலே மேற்கொள்ளப்பட்டது என்று எதிர்க்கட்சித் தலைவர் 23

யாழ் நோக்கி பயணித்த சொகுசு பேருந்து மதவாச்சியில் லொறியுடன் மோதி விபத்து

யாழைச் சேர்ந்த மூவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மதவாச்சி - அனுராதபுரம் பிரதான வீதியின் வஹமலு கொல்லேவ் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் யாழைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் அதிசொகுசு பஸ் ஒன்றும் தம்புள்ளை நோக்கிப் பயணித்த 24

அநுராதபுர புற்றுநோய் வைத்தியசாலை கழிவுகள்

வலிகாமம் வடக்கில் கொட்டப்படுகின்றது

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(அநுராதபுரம்)

அநுராதபுர புற்றுநோய் வைத்தியசாலையின் புற்றுநோய்க்கழிவுகள் வலிகாமம் வடக்கின் தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் கொட்டப்படுவதால் எதிர்காலச் சந்ததியினர் பாரிய பின் விளைவுகளை சந்திக்க நேரிடும் என யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. (23ஆம் பக்கம் பார்க்க)

தெரிவுக்குழுவில் சாட்சியமளிக்கத் தயார்

சாகல ரத்னாயக்க

24

ஊடகங்கள் நாட்டை மோசமாக சித்திரிக்கின்றன

ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

தாம் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும், அபிவிருத்தியை நோக்கிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் மாலையில்தொலைக் காட்சிச் செய்தியைப் பார்த் 23

10 மாத இரட்டைக் குழந்தைகள் கழுத்தறுத்துப் படுகொலை

நிந்தவூரில் பரபரப்பு

(அம்பாறை)

சம்மாந்துறை - நிந்தவூரில் 10 மாத இரட்டைக் குழந்தைகள் கழுத்தறுத்து படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வீட்டின் குளியலறையில் நேற்று திங்கட்கிழமை குறித்த 10 மாத இரட்டையர்கள்வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ள நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். குறித்த கொலையை புரிந்ததாக சந்தேகிக்கப்படும் 24

தமக்காக அரசுடன் பேசும் கூட்டமைப்பு

மக்களின் பிரச்சினை தொடர்பில் பேசுவதில்லை

கூட்டமைப்பை யாழில் சாடினார் நாமல்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமக்கு வாகனங்கள் வேண்டும், வீடு வேண்டும், சம்பளம் வேண்டும் என்றால் அப்பவே அரசாங்கத்துடன் பேசுவார்கள் ஆனால் அவர்களிற்கு இளைஞர்களின் பிரச்சினை குறித்து பேச நேரமில்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை வல்வெட் 24

போதைக்கு எதிராக தனித்து போரிடவில்லை

மக்கள் ஆதரவு உண்டு – ஜனாதிபதி

(கொழும்பு)

போதைப்பொருளுக்கு எதிரான போரில் தான் தனிமைப்பட வில்லை என்றும் 90 சதவீதமான நாட்டு மக்கள் அப்போராட்டத்தில் தன்னுடன் இணைந்திருப்பதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால 23

நகுலேஸ்வரத்து நந்தி இறையடி சேர்ந்தது

(கீரிமலை)

கீரிமலை நகுலேஸ்வரத்தில் வைத்து பராமரிக்கப்பட்டுவந்த நந்தி (காளை மாடு) நேற்று முன்தினம் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இப் பூவுலகு விட்டேகியது.

நல்லின மாட்டின் இனப் 23

தமிழ் மக்களின் வாழ்வுக்காக

கட்சி பேதங்களை மறந்து பேரணியில் அணிதிரளுங்கள்

தமிழ் மக்கள் பேரவை பகிரங்க அறைகூவல் 17

மீண்டும் பதவியை ஏற்ற முஸ்லிம் உறுப்பினர்கள்

(கொழும்பு)

அமைச்சுப் பதவிகளிலிருந்து விலகிக் கொண்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும், தமது பதவிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் ஏற்றுக்கொண்டனர். ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று திங்கட்கிழமை இரவு 7 அமைச்சர் 24

மாகாணசபைத் தேர்தல் நடத்துவதால்

அரசியல் அதிகார பிரச்சினைக்கு தீர்வாகாது - ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

மாகாண சபை தேர்தலை நடத்துவதால் நடைமுறையில் உள்ள அரசியல் அதிகார பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ், மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு தடையாக உள்ள காரணிகளுக்கு தீர்வை பெறாமல் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

பெற்றத்தைப் பேணிப் பேறுபெற்றோம்

சிவபூமி எனத் திருமூலரால் இயம்பப் பெற்ற இலங்கை திருநாட்டின் வடபால், பல வருடங்களுக்கு முன் பகிரங்கப்படுத்திக் கொள்ள இருந்த இடபம் பல சைவச் சான்றோர்களாலும் பல ஊடகங்களின் அனுசரணையாலும் இறைவனின் பெருங் கருணையாலும் தடுக்கப் பெற்று பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான நகுலேஸ்வரப் பெருமான் திருத்தலத்தில் தெய்வீகச் சூழலில் நந்தியெம்பெருமான் திருக் கைலாயத்தில் வீற்றிருப்பது போல யாழ்.வணிகப் பெருமக்களின் அனுசரணையுடனும் சைவ பக்த சிரோன்மணிகளின் அனுசரணையுடனும் நல்ல ஆரோக்கியமான நிலையில், எவ்வித குறையுமின்றி ஆலய ஆதீனகர்த்தா பிரம்மஶ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களால் பேணப்பெற்றும் புலம்பெயர் மக்களாலும் மற்றும் அனைத்து மக்களாலும் தரிசிக்கப் பெற்றும் வணங்கிப் போற்றப் பெற்ற இடபம் அம்மாவினால் செல்லமாக **'றங்கன்'** என அழைக்கப் பெற்று, றங்கனின் விரத நாளான ஏகாதசியில் 28.07.2019 ஞாயிற்றுக்கிழமை வீடு பேறு அடைந்தது. நாமும் பிரதோச நாளில் நினைவுகூரும் பாக்கியம் பெற்றோம்.

எமது கொடியில் விடை
எம் பெருமாள் வாகனம் விடை

முதலாவது திருமுறையில் முதலாவது தேவாரத்தில் 'விடையேறியொர் வெண்மதி சூடி' என திருஞானசம்பந்தர்.

ஏழாம் திருமுறையில் 'எருதேறிப் பூதம் ஆழப் பொலிய வருவார் புலியின் உரிதோலர் என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இவ்வாறு பல அருளாளர்களால் போற்றப்பட்ட இடபமாகிய நந்திபெருமானாக, யாழ்ப்பாண சைவ மக்கள் இப்பிரதோச நன்நாளில் 'பெற்றத்தைப் பேணினோம்' அதனால் பேறுபெற்றோம் என்றும் பெருமகிழ்வோடு 'யாவர்க்குமாம் பசுவுக்கேர் வாயுறை' என்று நாமும் 'ஓம் நமசிவாய' என்று கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானை போற்றி சைவநெறியில் வாழ்வோமாக!

ஓம் நமசிவாய
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்

க.கு.கு.சிவபாலன் (K.K)
திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயம் போசகர்
அகில இலங்கைத் திருமுறை மன்றம்
யாழ்.வணிகர் சங்க உறுப்பினர்

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வை வல்லரசு நாடுகள் ஏற்க வேண்டும்

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

வல்லரசு நாடுகள் தமிழ்மக்களின் அடையாளத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கின்ற, தமிழ்த் தேசத்தின் தனித்துவமான இறைமையை அங்கீகரிக்கின்ற தமிழ்மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டத்தை முழுமையாக அமுல் படுத்துவதற்கு வல்லரசு நாடுகள் முதற்கட்ட மாக இணங்க வேண்டும். அவ்வாறு இணங்குவது மட்டுமல்லாமல் இந்தத் தீர்வுத் திட்டத்தை இலங்கை அரசாங் கத்தை அமுல்படுத்துமாறு கூற முன்னர் அந்த வல்லரசுகள் தமிழ்மக்களை ஒரு தேசமாக அங்கீகரிக்க வேண்டும். அப்படி யானால்தான் தமிழ்மக்களுக்கு வல்லரசு நாடுகள் மீது நம்பிக்கை வரும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித் தார்.

கொக்குவிலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் ஊடகவியலாளர் சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்த ஊடக வியலாளர் சந்திப்பில் இந்தியா அல்லது சர்வதேச நாடொன்று மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமாக வந்து எழுத்துமூலமான உறுதிமொழியை வழங்கும் பட்சத்தில் தாம் அவர்கள் கூறும் புதிய ஜனாதிபதி வேட் பாளருக்கு ஆதரவு வழங்கத் தயாரெனத் தமிழ் மக்கள் கூட்டணி தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக உங்கள் கருத்தென்ன? என ஊடகவியலாளரொருவர் கேள்வி எழுப்பி னார்.

குறித்த கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர்மேலும்தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றீ டாக இந்தியா கணித்துள்ள புதிய தரப்பு நாங்கள் சொல்லிவரும் விடயங்களுக்கு மேலதிகமாகப் புதிதாக ஒன்றையும் சொல்ல வில்லை. ஒப்பந்தம் என்பது இலங்கை அரசுடனோ அல்லது சிங்களக் கட்சிகளு டனோ அல்ல. இவ்வாறான ஒப்பந்தங்கள் ஒருபோதும் நடைமுறைப்படுத்தப்படாதெனக் கடந்த எழுபது வருடகால அனுபவம் சொல் லுகிறது.

தமிழ் அரசியலைத் தங்களுடைய தேவைகளுக்காகப் பயன்படுத்த நினைக்கும் தரப்புக்களுடன் தான் குறித்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படல் வேண்டும். ஆனால், அந்த ஒப்பந்தங்கள் என்ன அடிப்படையில் அமைய வேண்டுமென்பதைக் கூறாதது ஏன்? இங்கு தான் பிரச்சினையே காணப் படுகிறது எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-3)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐ.தே.கட்சிக்கே ஆதரவளிக்கும்

சந்திம கமகே எம்.பி தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தலின் போது தமது வேட் பாளருக்கே தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவளிக்கும் என்று, ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

அதன் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம கமகே இதனை கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து கூறியுள் ளார்.

தற்போது ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில், பிரதமர் ரணில், அமைச்சர் சஜித் பிரே மதாஸ, சபாநாயகர் கரு ஜெயசூரிய மற்றும் அமைச்சர் லக்ஸ் மன் கிரியல்ல ஆகி யோரின் பெயர்கள் ஜனாதிபதி வேட் பாளருக்காக பரிந்துரைக் கப்பட் டுள்ளன.

எதிர்கட்சி அறி விக்கவுள்ள ஜனாதி பதி வேட்பாளரைப் பொறுத்து குறித்த நான்கு பேரில் ஒரு வர் ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாள ராக தெரிவு செய் யப் படுவார் என்று அவர் குறிப்பிட் டுள் ளார்.

அதேநேரம் அடுத்தமாதம் ஐக் கிய தேசிய கட்சியின் தலை மையிலான புதிய கூட்டணி அடு த்த மாதம் அறி விக் கப்படவுள்ள நிலை யில், அதில் இணை வது குறித்து தமிழ் தேசிய கூட் டமைப்பு இன்னும் தங்க ளுக்கு எந்த நிலைப் பாட்டையும் அறி விக்கவில்லை.

எனினும் ஜனாதி பதி தேர்தலில் கூட்ட மைப்பு தங்களுக்கு ஆதரவளிக்கும் என் றும் சந்திம கமகே கூறியுள்ளார். (ம-3)

சேல்ஸ்மன் தேவை
O/L, A/L படித்த புடைவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள அல்லது பழக விரும்பும் ஆர்வமுள்ள பயிலுநர் தேவை (ஆண்/பெண்)
சிவகணேசன் TEX
41, பெரியகடை, யாழ்ப்பாணம்.





கீரிமலை நகுலேஸ்வரத்தில்

இறையடி சேர்ந்த நந்திக்கு இறுதிக்கிரியை



கீரிமலை நகுலேஸ்வரத்தில் கடந்த ஏழு வருடங்களாக பராமரிக்கப்பட்டு நேற்று முன்தினம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இறைவனடி சேர்ந்த "நந்தி"க்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று அன்றையதினம் இரவு 7 மணியளவில் கீரிமலை புண்ணிய பூமியில் அடக்கம் செய்யப்பட்டது. அதன் படங்களை இங்கே காணலாம்.

"தீவிரவாதத்திற்கு அடிபணிந்த அரசு"

தாக்குதலுக்கு காரணமானவர்கள் பாகுபாடின்றி தண்டிக்கப்படுவர்

கம்மன்பில திட்டவட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் காலத்தில் அமையவுள்ள எமது அரசாங்கத்தில், தொடர் குண்டுத் தாக்குதலுக்கு காரணமானவர்கள் அனைவரும் பாகுபாடின்றி தண்டிக்கப்படுவார்கள் என பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குருநாகலில். அடிப்படைவாதத்துக்கு எதிராக நடத்தப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "திருமணச் சட்டம் நிச்சயம் மாற்றப்படுமென நாம் கூறியவுடன் அசாத் சாலி. உங்களது சட்டத்தை நீங்கள் பாருங்கள் எங்களது சட்டத்தை நாங்கள் பார்த்துக்கொள்கின்றோம் என்கிறார். நாம் அசாத் சாலிக்கு ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். முஸ்லிம்கள் வியாபாரத்துக்காக இலங்கைக்கு வருகை தந்து. இங்குள்ள சிங்களவர்களைத் திருமணம் செய்துள்ளனர்.

ஆகையாலேயே ஒரு ஆண் ஒரு பெண்ணை மாத்திரமே திருமணம் செய்ய வேண்டுமென நாம் வலியுறுத்துகின்றோம். 18 வயதுக்கு மேற்பட்ட பின்னரே திருமணம் செய்ய முடியும். அதிலும் மணப்பெண்ணின் சம்மதம் மிகவும் அவசியம்.

நியாயமான காரணமின்றி விவாகரத்துச் செய்ய முடியாது என்பதுடன் பெண்கள் அனைவருக்கும் வேலை செய்யும் உரிமையும் உள்ளது. முஸ்லிம் சமூகம் வஹாப் தீவிரவாதத்திற்கு அடிபணிந்து விட்டது. அதேபோன்று அரசாங் கமும் தீவிரவாதத் திற்கு அடிபணி ந்துள்ளது.

அந்தவகையில் எதிர்வரும் காலத்தில் அமையவுள்ள எமது அரசாங்கத்தில் தொடர் குண்டுத் தாக்குதலுக்கு காரணமானவர்கள் அனைவரும் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள். அதாவது எமது அரசாங்கத்தில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை அமைத்து அதனூடாக முறையான விசாரணையை முன்னெடுப்போம்.

இதனூடாகத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் காயமடைந்தவர்கள் ஆகியோரின் மனக்காயங்களை எமது அரசாங்கம் நிச்சயம் குணப்படுத்தும்" என உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார். (இ-7)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் வெளிவாரிப் பட்டதாரிகளுக்கு நியமனம்

சிறீதரன் எம்.பி.நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனாதிபதித்தேர் தலுக்கு முன்னர் வேலையற்ற பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் பெற்றுத்தர உரிய தரப்பினருடன் கலந்துரையாடி ஆவன செய்வதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தின் முன் நேற்றுக்காலை ஒன்று கூடிய பட்டதாரிகள் முன்னிலையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்வாரி, வெளிவாரி எனப் பாகுபாடின்றி அனைவரும் பட்டதாரிகள் என அழைக்கப்பட வேண்டும்.

மாவட்ட ரீதியாக இடம்பெற்ற நேர்முகத்தேர்வில் நியமனம் கிடைக்காத அனைத்துப் பட்டதாரிகளின் தரவுகளையும் சேகரித்து அனைவருக்கும் நியமனம் வழங்கவேண்டும்.

மேலும் அனைத்துப்பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்குவது தொடர்பில் பாராளுமன்றில் அழுத்தம் கொடுப்பதாகவும் காலதாமதமின்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்துவதோடு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் வேலையற்ற வெளிவாரி பட்டதாரிகளின் நியமனத்தை பெற்றுத் தருவதற்கு ஆவன செய்வதாகவும் தெரிவித்தார். (இ-10-17)

45 அரசியல் கட்சிகளுடன் கூட்டணியமைத்து ஜனாதிபதித்தேர்தலில் களமிறங்குவோம்

மகிந்த அணி மகிந்தானந்த உறுதி

(கொழும்பு)

45 அரசியல் கட்சிகளுடன் பாரிய கூட்டணி அமைத்து, அடுத்து ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன களமிறங்குமென மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பொதுஜன பெரமுனவின் பாரிய கூட்டணி பற்றிய முழு விபரம் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் எதிர்வரும் 11 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக தற்போது செயற்படும் அனைத்து கட்சிகளுக்கும் நிபந்தனைகளுடன் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இதுவரை 25 கட்சிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அந்த வகையில், 45 இற்கும் அதிகமான அரசியல் கட்சிகள் பொது ஜன பெரமுனவுடன் இணையும் என எதிர்பார்க்கின்றோம்.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஜனாதிபதி வேட்பாளர் யார்? என்ற போட்டித்தன்மையே அக்கட்சியைப் பலவீனப்படுத்தும்.

இதனால் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்தவுடன் ஐக்கிய தேசியக் கட்சி மூன்றாகப் பிளவுபடுவது உறுதி' என மகிந்தானந்த அளுத்கமகே மேலும் தெரிவித்தார். (இ-7)

வரலாற்றுக்கு முற்பட்ட (கிமு 2500)

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் "முக உத்தர"

தேர்த் திருவிழா

சிறப்பு மலர் 2019



நல்லை ஆதீன குரு முதல்வரின் ஆசிச் செய்தி

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்ட புர கந்தனுக்கு இன்று முக உத்தர இரதோற்சவ நிகழ்வையொட்டி ஆசி வழங்குவதில் உவகை கொள்கின் றேன்.

மாருதப்புரவீகவல்லியின் வரலாறு களும் மாவைக் கந்தனின் அற்புதங் களும் எண்ணில் அடங்காதவை.

போர்ச்சூழலில் நீண்டகாலமாக இரதோற்சவம் நடைபெறாதிருந்த இவ் வேளையில் முக உத்தர திருத்தேரில் கந்தப் பெருமான் வீதி உலாவரும் காட்சிதனைக் காண பல்லாயிரம் பேர் ஒன்றுகூடுவர். இந்த அரும் பெரும் காட்சியைக்காண ஏங்கிக் கிடந்த பக்தர் இன்று தம் மனக்குறை தீர்த்து அவன் திருவடிகளில் தஞ்ச மடைவர்.

இன்றைய இரதோற்சவத்தின் வடம்பிடிக்க அனைவரும் ஒன்றிணை வோமாக.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,
நல்லை ஆதீனம்.

சித்திரத்தேர் நிர்மாண ஸ்தபதி விஸ்வப்பிரம்மஸ்ரீ கந்தசாமி இளங்கோவன் (கோபு) ஆச்சாரியார் வழங்கியபிரார்த்தனை உரை

கஜவல்லி, மஹாவல்லி சமேத சுப்பிரமணியனாகக் காட்சிதரும் வெள்ளி மயிலேறிவரும் வேலழகனுக்கு புதிய முக உத்தர திருத்தேர் உருவாக்கும் பணி எனக்குக் கிடைத்தமையையிட்டு முருகனின் அடிபணிந்து வணங்குகின் றேன். உலகின் ஒப்பற்ற மஹாரதம் உரு ண்டோடிய சிறப்பிற்குரியது மாவிட்ட புரம் கந்தசுவாமியாரது திருவீதி. பழம் பெரும் தென்னிந்திய சிற்ப ஜாம்பவான்கள் கைவண்ணம் காட்டிய பூசாந்தர மடக் கைகள், மீட்கப்பட்ட முகபத்திர மஹா ரதத் தில் மாவைக்கந்தன் வீதி உலா வந்ததை வரலாறு பகரும். அந்த வரலாற்றுத்தேர் நாட்டின் போர்ச் சூழலால் பழுதடைந்து செல்ல புதிய திருத்தேர் உருவாக்கும் பணி என்னிடம் வழங்கப்பட்டு இன் றையதினம் புதிய திருத்தேர் வெள்ளோட் டம் காண்கின்றது. இதையிட்டு வெளி வரும் வெள்ளோட்ட மலருக்கு ஸ்தபதி யார் என்ற வகையில் பிரார்த்தனை உரை வழங்குவதையிட்டு புளகாங்கிதம் அடைகின்றேன்.

அச்சுத்தலைப்பார், குமிழ்ப்படை வரி வரிசை, கஜங்கள், சிம்மங்கள், மகரங் கள் நிறைந்த வரிவரிசை, அன்னக் கட்டைகள், யாழிக்கட்டைகள், குதி ரைக்கட்டைகள், கடைச்சல் கட்டைகள், அழகிய போதிகைகள், இறைமூர்த்த விக்கிரகங்கள் என்பன அடித்தளத்தை அலங்கரிக்க பூசாந்தர வடிவத்திலே, முகபத்திரம் மீட்கப்பட்டு, எழுதக, கபோதக, திரணை, துவாளிப்பு சேர்க்கப்பட்டு அதி உச்சமான மட்ட வேலை பங்களிப்பும் புகுத்தப்பட்டு புனிதமான முறையிலே அடித் தளம் காட்சிதர, பாகன்களை முதுகிலே தாங்கிய அழகிய யாழிகளும் கடைச்சல் பவளக் கால்களும் உளி அடித்தூண் களும் சொக்கட்டான் பந்தலைத் தாங்கி நிற் கிறது. மேல்விதானம் பிரமாண்ட மாய் வடிவமைக்கப்பட்டு வர்ணச் சேலை களால் போர்த்து. கம்பீரமான பண்டி கையில் கலசம் காட்சி தருகிறது. இரும்பி னாலான சில்லுகள் நான்கும் உறுதி யாய் உருள, 45 அடி உயரத்தில் இலங் கையின் மிக உயர்ந்த தேராக முருக னின் முக உத்தர பெருந்தேர் வெள் ளோட்டம் காண் கின்றது.

சுவர்ண கல்பித இரத்தின இராஜ சிம்மாசனத்து ஆறுமுகப் பெருமான் அழகிய முக உத்தர பெருந்தேரேறி அவனியைக் காத்து அடியவர்க்கு அருள் புரிய அனைவரும் பிரார்த்திப்போம்.

மீளுருவாக்கம் பெறும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மாவிட் டபுரம் கந்தசுவாமி கோயிலின் சிறப்புக் கள் ஒப்பில்லாதவை. இக்கோவில் அங் குள்ள சைவசமயம் சார்ந்த ஆலயங்களில் மிகவும் புராதனமானவற்றில் முதன்மை யானது. இற்றைக்கு 2500 வருடங்களு க்கு மேலான வரலாறுடைய கோயில் இருவேறு யுகங்களில் ஆட்சிபுரிந்த தமி ழரசரின் ஆதரவைப் பெற்ற கோயில். ஆதியான கோயிலை நாகர் அமைத்தனர் என்பது காலங்காலமாக ஆலய பரிபால னம் செய்கின்ற அந்தணர் குலத்தவரி டையில் நிலவி வரும் ஐதீகம். அங்குள்ள சமயச் சின்னங்கள் இதற்கு ஆதார மாகின்றன.

ஆலயத்தின் உள்வீதியின் மேற்குப் புறத்திலே நாகதம்பிரான் கோட்டம் அமைந் துள்ளது. அதில் இரு நாகசிற்பங்கள் உள் ளன. அவற்றிலே நாகரின் வழமைப்படி யான கடவுள் பெயர் தமிழ் மொழியிலும் ஆதியான தமிழ்வரி வடிவங்களிலும் எழு தப்பட்டுள்ளமை ஓர் அதிசயம். எழுத்துக் களைப் பற்றித் தெரிந்தவர்கள் அவற்றை அடையாளங்காணமுடியும். அங்கு இவற் றைப் போன்ற வேறு நான்கு சிற்பங் களும் உள்ளன. அவற்றுக்கும் இன்றும் வழிபாடு நடைபெறுகின்றது. இவற்றை விட வேறுமூன்று பிரதானமான மிகவும் புராதனமாக வழிபாட்டுச் சின னங்கள் உள்ளன. அவற்றிலொன்று பித் தளை வார்ப்பான வேல்வடிவம். மற்றை யது மிகவும் கனதியான, அகலமான, உயரங் குறைந்த செப்புலிங்கம். மூன்றா வது வலக்கரத்திலே பாம்பினைப் பிடித் திருக்கும் வல்லவ கணபதியின் கற்சிற்பம். இவற்றிலும் நாகர் வடிவமைப்புபடியான கடவுள் பெயர் அமைக்கப்பட்டுள்ளது. இவை காட்சிக்கு வைக்கப்படுவதில்லை.

மாருதப்புரவீகவல்லி, திசையுக்கிர சோழன் என்போர் பற்றிய ஐதீகங்கள் சோழ ராட்சியோடு தொடர்புடையவை. யாழ்பாணத் தில் ஆரியச் சக்கரவர்த்தியின் ஆட்சியில் மாவிட்டபுரம் கோயில் உன்னத வளர்ச்சி கண்டது. காசிய கோத்திரத்துக் காத்தியாயன சூத்திரத்து அந்தணரை ஆலய பரிபால கராக அரசர் நியமித்தனர். மன்னர்களும் அதே குலத்தவர் என்பது குறிப்பிடற்குரியது.

ஒரு அமைதியான, சிறப்பான எதிர் காலம் உதயமாவதற்கு இந்த வைபவம் ஓர் அறிகுறியாகும். முருகனின் திருவரு ளும் அதுவேயாகும். இந்நாட்டுச் சைவர் கள் அனைவரும் ஆலயப் புனரமைப்பிலே பங்குகொள்வதற்கு அபிமானம் கொள்ள வேண்டிய காலகட்டம் இதுவாகும்.

பேராசிரியர்
சி.பத்மநாதன்

மாவை ஆதீன கர்த்தாவின் ஆசியுரை

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முக உத்தர திருத்தேரில் இன்று ஷண்முகப் பெருமான் தேரேறி ஆரோகணித்து ஈழநாட்டில் வாழும் இலட்சக்கணக்கான அடியார்களுக்கும் மற்றுமுள்ள எல்லா உயிரினங்களுக்கும் அருள்சொரிந்து அபயம் அளிப்பதற்காக மாவை நகரில் திருவீதி உலாவரும் வரலாற்றுக் காட் சியை நினைவுகூர்ந்து வழங்கியுள்ள "அருள் ஆசிச்செய்தி"

பரம்பொருளாகிய இறைவன் பூலோ கத்தில் எண்பத்து நான்கு நூறாயிரம் உயிரினங்களை அவரவர் தகுதிகளுக் கேற்ப படைத்து, காத்து, அருளி வருகின் றார்கள். இந்த எண்பத்து நான்கு கோடி உயிரினங்களில் ,மனித்தப் பிறவியும் ஒன்று. அப்பிறவி அதி உன்னதமானது. மனிதனுக்கு மாத்திரம் ஆறு அறிவைக் கொடுத்து அலகிலா விளையாட்டை நடாத்தி உய்வளிக்கும் கிருபா சமுத்திர மாகிய இறைவனின் திருவிளையாடல் களை யார்தாம் அறிவார்? படைத்தலுக்கு அதிபதியாகிய பிரம்மாவும் காத்தலுக்கு அதிபதியாகிய மகா விஷ்ணுவும் கூட இறைவனை அறிய முடியவில்லையே!

இன்றைய திருநாளாகிய விகாரி வரு டம் ஆடிமாதம் 14ஆம் நாள் 30.07.2019 செவ்வாய்க்கிழமை மாவிட்டபுரம் என்ற 2500 ஆண்டுகளுக்கும் மேலாக சைவ ப்பாரம்பரியத்தைக்கொண்ட திருநகரில் அதிசிறந்த மகோன்னத மாட்சிமை பொருந்திய முக உத்தர திருத்தேர் காட்சியை நோக்குவோமாக.

சோழநாட்டின் தேவகன்னிகையான இளவரசி மாருதப்புரவீகவல்லி பாளை யம் அமைத்து தம் பரிவாரங்கள் சகிதம் வழிபாடியற்றி அதிநுட்ப விஞ்ஞானிகளா லும் கற்பனை பண்ண முடியாத அருள் சக்தி பெற்று விமோசனம் பெற்றது வரலாறு. அத்தேவகன்னிகையின்வேண்டு தல்படி அவரின் தந்தையார் மன்னன் உக்கிரசிங்க பெருவழுதி ஆறுகோபு ரங்களையும் ஐந்து வீதிகளையும்கொண்ட கந்தசுவாமியார் திருக்கோயிலை இம் மண்ணில் அமைத்ததை எண்ணும் தோறும் எண்ணும் தோறும் மெய் சிலிர்க்கின்றதன்றோ.

16ஆம் நூற்றாண்டில் பறாங்கியரும் பின்னர் 20ஆம் நூற்றாண்டில் மிலேச்சர்களும் இத்திருக்கோயிலை துவம்சம் செய்து விட்டனர். தற்பொழுது திருக்கோயில் மாட்சிமையை நோக்கி மீண்டெழுந்து வருவதைக் காண்கிறீர் கள். எனினும் பயணம் நீண்டது.

இப்புனித பயணத்தில் துவம்சம் செய்யப்பட்ட ஐந்து திருத்தேர்களின் நடு நாயகமாக விளங்கிய முக உத்தர திருத் தேர் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு நேற்று முன்தினம் 28.07.2019 ஞாயிற்றுக் கிழமை வெள்ளோட்டம் கண்டது. இன்று ஷண்முகப்பெருமான் ஆரோகணித்து திருவீதியுலா வருகின்றார்.

1782ஆம் ஆண்டு நிர்மாணிக்கப் பெற்ற முக உத்தர திருத்தேரிலும் பார்க்க மேலும் பெரிதாகவும் சிறப்பான சித்திர வேலைப்பாடுகளுடனும் இத்திருத்தேர் உருவாக்கப்பட்டுள்ளது. எம் தந்தையார் மஹாராஜ ஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக் கள் கண்ட எண்ணற்ற கனவுகளில் ஒன்று இன்று நிறைவேறுகின்றது.

இத்திருத்தேரை மிக அற்புதமாக நிர்மாணித்த தலைமை ஸ்தபதி சிற்ப கலாரத்தினம் கந்தசாமி இளங்கோவன் (கோபி ஆச்சாரியார்) அவர்களுக்கு கந்த வேல் பெருமான் சகல பாக்கியங்களை யும் நல்க பிரார்த்திக்கின்றோம்.

அவ்வாறே பரம்பரை பரம்பரையாக தேர் உபயகாரர்களாக இருந்து வரும் அடியார்கள் இத்தேர் உருவாக்கத்திற்கு எல்லா முயற்சிகளையும் செய்து அனு சரணை வழங்கியுள்ளதையும் பாராட்டி அவர்கள் பணிகள் தொடர ஆசீர்வதிக் கின்றோம். அடியவர்கள் அனைவரும் வடம்பிடித்து வழிபட்டு உய்திபெற என் ஆசிகள்.

மாவை கந்தா போற்றி போற்றி

மஹாராஜஸ்ரீ
து.இரத்தினசபாபதி குருக்கள்,
மாவை ஆதீனகர்த்தாவும்
தலைமை சிவாச்சாரியாரும்

மாவை ஆதீன கர்த்தாவின் செயலாளரும் மாவிட்டபுரம் திருப்பணிச் சபையின் செயலாளருமாகிய திரு.இ.பேரின்பநாயகம் வழங்கிய செய்தி

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பூசைகள், கிரியைகள், திருவிழாக்கள் என்பன என்றென்றும் வேத சிவாகமங்களுக்கு உட்பட்டு நடப்பன- நாவலர் பெருமான்

சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லி யால் நிர்மாணிக்கப்பெற்று தில்லை தீட் சதர் பரம்பரையினரால் நித்திய, நைமித் திய கிரியைகள் நடைபெற்று வரும் மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி திருக் கோயி லின் சிறப்புக்கள் பற்றியும் அதன் அள விடற்கரிய மகிமைகள் பற்றியும் சென்ற நூற்றாண்டுகளில் எண்ணற்ற பிரபந்தங் கள் வெளிவந்துள்ளன.

ஈழநாட்டில் இவ்வாறு தொகையான பிரபந்தங்கள்வெளிவந்ததைவேறெங்கும் காணக்கூடியதாக இல்லை. இத்திருக் கோயிலின் மாட்சிமைக்கும் சான்னியத்திற் கும் வேறென்ன சாட்சிகள் வேண்டும்?

மாவைக்கந்தன் மேல் பற்றுக் கொண்ட புலவர் பெருமக்கள் பாடிய பிரபந்தங்கள் வரிசையில் மிக அண்மை யில் தகைசார் பேராசிரியர் அ.சண்முக தாஸ் ஒரு அரிய பொக்கிஷத்தை கண்டு பிடித்துள்ளார். கொக்குவில் மா. காசிநாத புலவர் பாடிய "மாவை புராணம்" 1500 பாடல்கள் கொண்ட தல புராணம். இது அண்மையில் எமது கைகளுக்கு கிடைப் பதாக.

அனைவரும் வடம்பிடித்து மாவைக் கந்தன் அருள் பெறுவோம். ஆதீன கர்த்தாவின் அயரா முயற்சிகளுக்கு முக உத்தர திருத்தேர் ஒரு சான்றாகும். ஆதீன கர்த்தாவின் புனித பயணத்தில் நாங்க ளும் இணைவோம். கந்தப் பெருமான் மாட்சிமையைக் கண்டு இன்புறுவோம். யாழ்ப்பாணம் சிவபூமி என்பதை நிலை நிறுத்துவோம்.

மாவைக்கந்தா போற்றி போற்றி

Sri Murugan
Communication & Agency Post Office
No.303, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel:0094212222670/5392
Fax:0094212223214 Email: srimurugan09@gmail.com, Srimurugan303@gmail.com

நியூ துரை வெதுப்பகம் & கோஃபி
New Thural Bake House & Coffe
கே.கே.எஸ் றோட், மாவிட்டபுரம், தெல்லிப்பளை.
0779104173, 0775313526

Kings Bakery & Cafe
K.K.S Road, Tellippalai.
T.P:021 321 7920
077 123 5942

Tip Top Hotel
ரிப் ரொப் ஹொட்டல்
K.K.S.Road, Maviddapuram
Tel: 0766678412

AMBAL GARAGE
K.K.S.Road, Mallakam
TeL: 0779122983

S.போஸ்
வெல்டிங் வேக் சொப்
கே.கே.எஸ். றோட், மாவிட்டபுரம், தெல்லிப்பளை
தொ.பே:0778473267

செந்தூரன்
மல்ரி சொப்
கே.கே.எஸ். வீதி, மாவிட்டபுரம்.

K.V. தாசன் பந்தல்
மாவிட்டபுரம், மல்லாகம்
021 224 3074, 077 794 7881

பாரதி.கொம்
PHOTOCOPY CD WRITING
FAX LEMENATING
COLOR PRINT SCANNING
MP3 GIFT ITEMS
மானிப்பாய் வீதி, உரும்பிராய்.

VFT FURNITURE
SALES CENTRE
No.141, K.K.S Road, Chunnakam, Jaffna.
T.P NO: 021 224 2494

Karan
Digital Studio
T.P: +94772502516
+94756150020
K.K.S.Road, Maviddapuram, Jaffna.

EURO POWER LANKA (PVT) LTD
K.K.S Road, 102,Chunnakam, Jaffna.
021 224 3535, 077 399 3535,
077 652 9583

LADCHUMANAN HARDWARE
இலட்சுமணன் ஹார்டவெயர்
சீமெந்து, பெயின்ற், கட்டிடப் பொருட்கள் விற்பனையாளர்
K.K.S.Road, Mallakam
Tel: 0773922317, 0212243374

தம்பி மோட்டோர்ஸ்
Thampy Motors
K.K.S Road, Chunnakam,
Tel: 077 186 4808,
021 224 2599

Jaffna Science Association

26th Annual Scientific Sessions 31 July & 1, 2 August 2019

VENUE
Library Auditorium, University of Jaffna

Session 1: Inauguration
Chairperson: **Dr. P. Iyngaran**

08.00	Registration
08.30	Lighting of the Traditional Oil Lamp
08.50	Welcome Address by Dr.R.Prasanthan
09.00	Chairperson's Address
09.10	Awarding of Professor Kandiah Balasubramaniam Gold Medal

Professor Kandiah Balasubramaniam Gold Medal Lecture:
"Atypical adaptation of mosquitoes: an emerging challenge in the control of mosquito- borne diseases"
Professor S. N. Surendran

10.10.	Release of பிரயோக விஞ்ஞானச் சுடர் *(Pirayoga Vingnana Sudar)* Release of **யாழின் தேடல்** *(Yalin Thedal)* Release of **JSA News letter**

Session 2: Section A
Chairperson: **Prof. P. Ravirajan**

10.30	**Chairperson's Address:** **"Conservation of Nature"** Dr. (Mrs). A. Sivaruban
11.15	**Popular Lecture:** **"Quality life and sustainable development through green concept"** Mr. V. Abhayagunawardena Coordinator, Sri Lanka Campaign to Ban Landmines (SLCBL) Coordinator, Disarmament and Development Forum (FDD)

Session 3: Section B
Chairperson: **Dr. K. Pakeerathan**

13.15	**Chairperson's Address:** **"Crop Production Technology for Quality life and Food Security"** Dr. (Mrs) .L. Pradheeban
14.00	**Popular Lecture:** **"Climate Smart Approaches for Sustainable Agriculture Development of the Dry Zone in Sri Lanka"** Dr. S. J. Arasakesary Additional Director, Regional Agriculture Research and Development Centre, Iranaimadu, Kilinochchi

Session 4: Section C
Chairperson: **Dr. R. Surenthirakumaran**

15.00	**Chairperson's Address:** **"Role of Aromatic plants in the Healthy life"** Dr. (Mrs). T. Thileepan
15.45	**Popular Lecture:** **"Mental health and neoliberalism"** Dr. S. Sivathas Consultant Psychiatrist, J/ Teaching Hospital.

Day 2: Thursday, 1 August 2019

Session 5: Theme Seminar
"Quality life and sustainable development through green concept"
Chairperson: **Prof. (Mrs). T. Mikunthan**

9.00 am	Registration
9.15 am	Opening address by chairperson
9.30 am	**"Challenges for a greener Northern Province; conservation perspective"** Dr. K. Gajapathy Senior Lecturer, Department of Zoology, University of Jaffna **"Green agriculture: Soil and plant nutrition perspective"** Prof. (Mrs). N. Gnanavelrajah Professor in Agricultural Chemistry, Faculty of Agriculture, University of Jaffna
10:45 am	**"Life style modification- The way to healthy life"** Dr. M. Aravinthan Endocrinologist ,Teaching Hospital, Jaffna **"Challenges for the Development of Northern Province in the Post War Context"** Mr. V. Navaneethan Former Management Specialist (UN Mission in Liberia), Programme Analyst (UNDP), Programme Officer (UNDP)
11.45 am	Concluding Remarks
13.00 – 16.30	**Session 6: Presentation of Research Papers**

Day 3: Friday, 2 August 2019

Session 7: Section D
Chairperson: **Prof. T. Velnampy**

08.30	**Chairperson's Address:** **"Sustainable Marketing"** Dr. S. Rajumesh
09.15	**Popular Lecture:** **"Sustainability of School Education in the Northern Province in the Post War Context"** Mr. A. Nithlavarnan Senior Lecturer, Dept. of Education, University of Jaffna.
11.30	**Annual General Meeting**

Session 8: Presidential Address and Awarding Ceremony

14.00	**Presidential Address** **"Climate-smart agriculture through landscape approaches"** Dr. (Mrs). S. Sivachandiran Senior lecturer, Dept. of Agronomy , Faculty of Agriculture and Dean, Faculty of Technology University of Jaffna
15.15	**Professor Kanthia Kunaratnam Gold Medal Oration:** பசுமை எண்ணக்கரு ஊடாகத் தரமான வாழ்க்கையும் நிலைபேண்தகு அபிவிருத்தியும் Velnampy Sathusikan, J/ St. John's College **"Quality life and sustainable development through green concept"** Mathumai Srikaran, J/ Vembady Girls High School • Awarding ceremony of the School Science Programme 2019 • Vote of Thanks - Dr. K. Pakeerathan

ஊடக அனுசரணை வலம்புரி

யாழ்ப்பாணம் வந்த நாமல் எம்.பி. சர்வமதத் தலைவர்களுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனுமான நாமல் ராஜபக்ஷ சர்வமத தலைவர்களைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார். (இ-10-101)

கீரிமலை சிவபூமி விடுதியரங்கில் "மகுட பாங்கம்" இதிகாச நாடகம்

(யாழ்ப்பாணம்)

ஆடி அமாவசையை முன்னிட்டு இன்று இரவு மாலை 7 மணிக்கு கீரிமலை சிவ பூமி மட யாத்திரிகர் விடுதியரங்கில் மானிப்பாய் சாய் பாடசாலை மாணவர்களின் "மகுட பாங்கம்" என்ற இதிகாச நாடகமும் தெல்லிப்பழை தமிழ்ச் சங்கம் நடத்தும் "வள்ளி திருமணம்" என்ற இசை நாடகமும், இசையாசிரியர் திருமதி வடிவாம்பிகையின் இசையரங்கமும் இடம்பெறும்.

நாளை புதன்கிழமை ஆடி அமாவசை நாள் பிதிர்க்கடன் தீர்க்க வரும் அடியவர்களுக்காக கீரிமலை மடத்தில் விசேட வழிபாடுகளும் அன்னதானமும் வழங்கப்படும். (இ-5)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு ஒதுக்கப்பட்ட நிதி மீளப்பெறப்பட்ட நிலையில் மீட்டுத்தருமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப கல்லூரிக்கான கட்டடம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட 450 மில்லியன் ரூபா நிதி மீளப் பெறப்பட்டுள்ளதாகவும், அந்த நிதியை பெற்றுக்கொள்ள ஆவன செய்யுமாறு உயர் தொழில்நுட்ப கல்லூரிப்பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் தலைமையில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் இணைத்தலைவர்களாக கலந்துகொண்டனர்.

கல்வி தொடர்பாக முன்மொழியப்பட்ட திட்டங்கள் தொடர்பில் விவாதிக்கப்பட்டபோது, உயர் தொழில்நுட்ப கல்லூரி பணிப்பாளர் கூட்டத்தில் காணி தொடர்பான பிரச்சினையை எழுப்பினார்.

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப கல்லூரிக்காக யாழ்.பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட காணி ஒன்று ஏற்கனவே, மெல்ரா என்ற வடிசாலைக்கு சொந்தமான காணி குத்தகைக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதனால், கட்டடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி மீளப் பெறப்பட்டுள்ளதாகவும் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

அதன் போது, யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் கருத்து தெரிவிக்கையில், மெல்ரா நிறுவனம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது.

தற்போது வழக்கு நடைபெற்று வரும் நிலையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி வழக்கின் தீர்ப்பு வழங்கப்படவுள்ளது.

தற்போது உயர் தொழில்நுட்பக் கல்லூரிக்கு வழங்கப்பட்ட காணியை மெல்ரா நிறுவனம் யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பக் கல்லூரிக்கு வழங்குவதற்கான ஆதரவை வழங்கியுள்ளது என யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

அதன்பிரகாரம், அந்தக் காணி, உயர் தொழில்நுட்ப கல்லூரிக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நிலையில், உயர் தொழில்நுட்ப கல்லூரிக்கான கட்டடம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட நிதியை மீளப் பெற அனுமதி வழங்குமாறு கோரியிருந்தார்.

அதனடிப்படையில், எதிர் வரும் மாதம் வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர், கட்டடம் அமைப்பதற்கான நிதியை பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார். (5-101)

பப்பறக்கொப்பான் குளவிக் கூடுகள் யாழ்.மாநகர தீயணைப்புப் பிரிவால் அழிப்பு

(கொடிகாமம்)

உயிராபத்தை ஏற்படுத்தும் பப்பறக்கொப்பான் குளவி (மலைக் குளவி) கடந்த சனிக்கிழமை இரவு அழிக்கப்பட்டது. மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் 3 ஆவது மாடியிலும் மத்திய கல்லூரிக்கு பின்பக்கமாக அமைந்திருக்கும் தனியார் வீட்டிலும் குளவிக்கூடு காணப்பட்டது.

இப்பகுதியில் பலர் குளவிக் கொட்டிற்கு ஆளாகியுள்ளனர். அப்பகுதி மக்கள் சாவகச்சேரி பிரதேச சபைக்கு மக்கள் தகவல் வழங்கியதையடுத்து சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன் தலைமையில் யாழ்.மாநகர சபையின் தீயணைப்பு அவசர சேவைப் பிரிவினர் அழைக்கப்பட்டு உயிராபத்தை ஏற்படுத்தும் குளவிகள் அழிக்கப்பட்டன.

ஆபத்து விளைவிக்கும் குள விக்கூடுகள் மக்கள் குடியிருக்கும் பகுதிகளில் காணப்பட்டால் அது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபை அல்லது சாவகச்சேரி பிரதேச செயலகம் அல்லது யாழ்.மாநகரசபை ஆகியவற்றிற்கு தகவல் வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-114)

கோப்பாய் பிரதேச சபைக்கு யாழ்.மாவட்ட தேசோதய தலைவரும் யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினருமான லயன் கலாநிதி நா.தனேந்திரன் தமிழகத்திலிருந்து எடுத்துவரப்பட்ட நூல்களின் ஒரு தொகுதியை கோப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் தி.நிரோஸ் முன்னிலையில் கோப்பாய் நிழல் பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டது.

மதுபோதையில் சாரத்தியம் ரூ.50 ஆயிரம் அபராதம்

(கொடிகாமம்)

மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய இரண்டு நபர்கள் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு கடந்த 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. (இ-5-114)

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவோருக்கு 30 மணித்தியாலங்கள் பயிற்சி

வடக்கு ஆளுநர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சாரதிப் பயிற்சி பாடசாலைகளின் உரிமையாளர்களுக்கும் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த 23 ஆம் திகதி ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

வடமாகாணத்தில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்கள் காரணமாக ஏற்படும் உயிரிழப்புக்கள், உடல் அவயவ இழப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்காக ஆளுநரால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளின் ஒரு அங்கமாகவே சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளின் உரிமையாளர்களுடனான இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள் அனுமதிப்பத்திரத்திற்கான பயிற்சிகளை வழங்கும் போது தரமானதும் முறையானதுமான பயிற்சிகளை வழங்கினால் இவ்வாறான வீதி விபத்துக்களைக் குறைத்துக் கொள்ளலாம் என வும் ஆளுநர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அத்தோடு சாரதி அனுமதிப் பத்திரம் பெற வருபவருக்கு குறைந்தது 30 மணித்தியாலங்கள் செயன்முறைப் பயிற்சியும் 10 மணித்தியாலங்கள் அப்பியாசப் பயிற்சியையும் இந்த செயன் முறை பயிற்சியில் இரவில் வாகனம் ஓட்டுவதற்கான பயிற்சியும் வடமாகாணத்தின் சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள் அனைத்தும் கட்டாயமாக வழங்க வேண்டுமென்றும் ஆளுநர் வலியுறுத்தினார்.

இதேவேளை வைத்திய கலாநிதி ரி.கோபிசங்கரின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள "வடமாகாண வீதி பாதுகாப்புச் சபையின்" ஊடாக சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளானது பயிலுநர்களுக்கு இந்தப் பயிற்சிகள் சரியான முறையில் வழங்கப்படுகின்றதா? என்பதைக் கண்காணிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை யாழில் சாரதிப் பயிற்சிகளை வழங்குவதற்குப் பொருத்தமான இடமொன்று இல்லை என்பதைச் சுட்டிக்காட்டிய உரிமையாளர்கள் பொருத்தமான இடமொன்றை தமக்கு பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர். இதன்போது கருத்துத் தெரிவித்த ஆளுநர், பொருத்தமான இடமொன்றை அதிகாரிகளுடன் கலந்துரையாடி பெற்றுத் தருவதாகத் தெரிவித்தார். (இ-5-7)

கரவெட்டி மாதா கோயிலில் எள்ளம் குள இராணுவத்தினரும் பொதுமக்களும் நேற்றுக்காலை சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (படங்கள்:-மகாலிங்கம்)

கொழும்புத்துறை பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய திருநாள் திருப்பலி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் ஆசீரும் இடம்பெற்றது.

(படங்கள்:- ஈச்சமோட்டை செய்தியாளர்)

இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
மூலம், பூராடம்

ராகு, சந். புத
சூரி, சுக் செவ்
சனி, கேது
குரு

30.07.2019
ஆடி 04, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 1.13 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 3.59 மணிவரை
சுபநேரம் 10.33-12.03 மணிவரை
இராகுகாலம் 3.03-4.33 மணிவரை
இரண்டாம் ஆடிச் செவ்வாய்

வளவன்

மீனம் — எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, உடல் நலன் சீராகும்.

மேடம் — நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

இடபம் — நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், அலங்காரப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும்.

மிதுனம் — மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று உருவாகலாம், அம்பிகை வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

கும்பம் — புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர்கள் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

மகரம் — உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், சுவாரஸ்யமான நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

கடகம் — அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தினர்களை அனுசரித்து செல்வீர்கள், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள்.

சிம்மம் — புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

தனுசு — சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், போசன நன்மையுண்டு.

விருச்சிகம் — எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

துலாம் — சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், வாக்கு மேன்மையுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.

கன்னி — கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர்.

வடமாகாணம் தழுவிய தரம் 11 மாணவர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான (2019) இவ் வருட செயலமர்வு இடம்பெறவுள்ளதென உதவிக்கல்விப் பணிப்பாளரும் கல்வி அபிவிருத்தி ஆலோசனை அமையத்தின் பொதுச் செயலாளருமான க.சக்திதரன் அறிவித்துள்ளார்.

இச் செயலமர்வுகளில் எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை மாணவிகளுக்கும் மறுநாள் 8 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை ஆண் மாணவர்களுக்கும் நடைபெறும்.

9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்திலும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியிலும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்திலும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரையும் முல்லைத்தீவு ஊற்றங்கரை விநாயகர் ஆலய மண்டபத்திலும் 14 ஆம் திகதி புதன் கிழமை காலை 8 மணி-3மணி வரை மாங்குளம் மாகாண தொழில்நுட்ப பயிற்சிக் கல்லூரியிலும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை வவுனியா நகர சபை மண்டபத்திலும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 முதல் பிற்பகல் 3 மணிவரை மன்னார் நகர சபை மண்டபத்திலும் இடம்பெறவுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு 077 070 3360 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளவும். (5-10)

சட்டவிரோத மணல் அகழ்வு இருவர் பொலிஸாரால் கைது



(சாவகச்சேரி)

சாவகச்சேரி - தனங்கிளப்புப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் மணல் மற்றும் உழவியந்திரம் ஆகியனவும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கோணார தலைமையிலான பொலிஸ் குழுவினரின் இரவு நேர சுற்றுக் காவலின் போதே குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-30)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

16.06.2019 அன்று தெல்லிப்பளை இராஜேஸ்வரி மண்டபத்தில்"International Global Peace University USA" வினால் நடாத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் சிறந்த சமூக சேவையை பாராட்டி வள்ளுவன் கழகத்தின் மூத்த உறுப்பினரும் செயலாளருமான லயன் சி.ஆனந்தராசா அவர்களுக்கு கௌரவ கலாநிதி (DOCTOR) பட்டமும், கழகத்தின் இயக்குநர், தலைவருமான திரு.கு.உதயரூபன் மற்றும் கழகத்தின் செயற்பாட்டாளருமான திரு.அ.றம்சன்ராஜ் ஆகியோருக்கு A.P.J. Dr. அப்துல் கலாம் அவர்கள் நினைவால் வழங்கப்படும் உயரிய விருதான "சமூகரத்னா" விருது ஆகிய சர்வதேச விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவர்களது பணிகள் மேலும் தொடர எங்கள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கதிரவேலு-தர்மராசா குடும்பம்.

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

பழமை வாய்ந்த

ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



+ ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
+ பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
+ கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
+ காணி விற்பனையில் பிரச்சினையா?
+ வியாபார முன்னேற்றம்
+ வீட்டில் ஒற்றுமை உண்டாக
+ பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

ரெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

மொறட்டுவைப் பல்கலைக்கழக பொறியியற் பீட தமிழ் மாணவர்களால் நடாத்துப்பட்ட க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான 10வது

முன்னோடிப் பரீட்சை 2019

முன்னிலைப் பெறுபேறுகள்

COMBINED MATHEMATICS STREAM

INDEX NO	NAME	DISTRICT	MATHS	PHYSICS	CHEMISTRY	Z-SCORE	ISLAND RANK
195146	Nagaratnam Thenujan	Jaffna	A	A	A	3.0237	1
195141	Panchalingam Kobinarth	Jaffna	A	A	A	2.8903	2
195318	Raveendra Jathushan	Jaffna	A	A	A	2.8108	3
195150	Thevakumar Jubeerathan	Jaffna	A	A	A	2.8020	4
195199	Ragunathan Athyaraian	Jaffna	A	B	A	2.7599	5
195321	Thevarasa Sangaran	Jaffna	A	A	A	2.6801	6
195154	Pairavi Thanancheyan	Jaffna	A	A	A	2.6144	7
193028	Inuka Asel Ampavila	Colombo	A	A	A	2.5962	8
195933	Nithiyananthan Aathavan	Jaffna	A	A	A	2.5939	9
191012	Kovindharajan Mithushan	Trincomalee	A	A	A	2.5846	10
193457	Vinasirajan Viruthshaan	Colombo	A	A	A	2.5437	11
194245	Rajaeatnam Sanjith	Mullaitivu	A	A	A	2.5219	12
195962	Thiriloganathan Manimohan	Jaffna	A	A	A	2.5152	13
195200	Kanagalingam Lithurshan	Jaffna	A	A	A	2.5067	14
194769	Kuganenthiran Malaban	Jaffna	A	A	A	2.4822	15
194795	Ketharani Pirabaharan	Jaffna	A	A	A	2.4655	16
195269	Sivatheepan Thanikan	Jaffna	A	A	A	2.4305	17
191007	George Sheron Clarance	Trincomalee	A	A	B	2.4300	18
195167	Gnanamathuri Elangognanar	Jaffna	A	A	A	2.4145	19
195395	Premkumar Sanujen	Jaffna	A	A	A	2.3682	20

ICT STREAM

INDEX NO	NAME	DISTRICT	MATHS	PHYSICS	ICT	Z-SCORE	ISLAND RANK
192867	Sivapalasundaram Thanusiyan	Batticaloa	A	A	A	2.2736	1
195175	Thuraisingam Luxshan	Jaffna	A	B	C	1.9562	2
192868	Pakkiyarajah Thareejan	Batticaloa	A	C	B	1.8221	3
192645	Thawfeek Mohamed Sabrin	Batticaloa	A	B	C	1.6240	4
190102	Attanayake Mudiyanselage Sanjana Ishini Attanayake	Kandy	A	C	S	1.5506	5

BIOLOGY STREAM (NEW SYLLABUS)

INDEX NO	NAME	DISTRICT	BIOLOGY	PHYSICS	CHEMISTRY	Z-SCORE	ISLAND RANK
195551	Sivathasan Tharsiken	Jaffna	A	A	A	2.9745	1
195565	Nivetha Mahalingasivam	Jaffna	A	A	A	2.7848	2
194972	Tharani Balandran	Jaffna	A	A	A	2.6659	3
194762	Vasanthakumar Anushan	Jaffna	B	A	A	2.6503	4
194918	Shakirthiya Koneswaran	Jaffna	B	A	A	2.6311	5
194909	Thayaparan Nisan	Jaffna	A	A	A	2.5211	6
195570	Linthuya Kalaithasan	Jaffna	B	B	A	2.4753	7
194610	Viththaky Puvanenthiram	Jaffna	A	A	A	2.4215	8
195525	Arunkalaichelvan Anoshigan	Jaffna	B	A	A	2.3905	9
195662	Sunthareswaran Subangan	Jaffna	B	A	B	2.3809	10
190696	Mohamed AgisMohamed Loreef	Trincomalee	C	A	A	2.3782	11
190599	##########	Vavuniya	B	A	B	2.3500	12
194774	Achchuthan Geerthanan	Jaffna	A	B	A	2.3311	13
190004	Abdullah Haroon Shihab Aagil	Matale	A	B	A	2.2900	14
194971	Abiramy Devanesn	Jaffna	A	B	B	2.2673	15

BIOLOGY STREAM (OLD SYLLABUS)

INDEX NO	NAME	DISTRICT	BIOLOGY	PHYSICS	CHEMISTRY	Z-SCORE	ISLAND RANK
195791	Abinayah Satkunarahjah	Jaffna	A	A	A	2.7660	1
195834	Kannapalan Kanushkar	Kandy	A	A	A	2.7610	2
195054	Edwin Joy Vithushan	Jaffna	A	A	A	2.6552	3
195459	Andriya Shanthana Robert	Jaffna	A	A	A	2.6495	4
195453	Dulasika Kannnathasan	Jaffna	A	A	A	2.6118	5
195795	Rishmee Leslybaskarathevan	Jaffna	A	A	A	2.5740	6
195385	Kiruththika Rvaithas	Jaffna	A	B	A	2.5686	7
195793	Nurmila Thusyanthan	Jaffna	A	A	A	2.5597	8
194986	Abarna Karunakaran	Jaffna	A	A	A	2.5369	9
195624	Abiramy kanagasabai	Jaffna	A	A	A	2.5077	10

POWERED BY INFORMATICS INSTITUTE OF TECHNOLOGY

புகையிலைச் செய்கையைத் தடைசெய்யச் சட்டம் வரவில்லை தீவக மக்களின் வாழ்வாதாரத்தோடு விளையாடாதீர்கள்

சிறீதரன் எம்.பி. சீற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் புகையிலைச் செய்கையைத் தடை செய்வதற்கான சட்டம் இதுவரை பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படவில்லை எனவும் தேவையற்ற வதந்திகளைப்பரப்பி தீவக மக்களின் வாழ்வாதாரத்தை சீரழித்து விட வேண்டாம் என பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் விவசாயத்திணைக்கள அதிகாரிகளிடம் காட்டமாகத் தெரிவித்தார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தீவக மக்களின் வாழ்வாதாரத்தை முன்கொண்டு செல்லும் விவசாய நடவடிக்கையான புகையிலைச் செய்கை தொடர்பில் அப்பிரதேச மக்கள் பல்வேறு ஐயப்பாடுகளுடன் காணப்படுகின்றனர்.

அதாவது புகையிலைச் செய்கை தடை செய்யப்பட்டுள்ளது, தடை செய்யப்படப் போகிறது எனப் பல்வேறு கேள்விகளின் மத்தியில் தமது வாழ்வாதாரத்தை எண்ணிப் பயப்படுகின்றனர்.

புகையிலையால் புற்றுநோய் வருகிறது என்றால் ஏனைய புகைத்தல் பொருட்களை ஏன் இறக்குமதி செய்கிறார்கள் எனக் கேள்வி எழுப்பியதுடன் புகையிலையைக் குறைக்க யாழ்.மாவட்டத்தில் கஞ்சா பெருக்கெடுத்துள்ளதாக



குற்றம் சாட்டினார்.

தீவகப்பகுதிகளான ஊர்காவற்றுறையில் புகையிலைக்கு மாற்றுப் பயிர்ச் செய்கையாக கற்றாழையை அறிமுகப்படுத்தினார்கள். ஆனால் கற்றாழை வளர்வதற்கான நீர் உரிய காலங்களில் கிடைப்பதில்லை.

எனவே விசேட வர்த்தமானியோ அல்லது பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாக அமுல் படுத்தும் வரை அப் பகுதி மக்களுக்கு தேவையற்ற அச்சுறுத்தல்களை விடுக்க வேண்டாம் என சிறீதரன் மேலும் தெரிவித் தார். (இ-10)

மாவைக் கந்தனின் திருத்தேர் தரிசனம்

அபிஷேகக் கந்தனின் திருவடம் பிடித்திடுவோம்

ஈழ அன்னையின் சிவதர்ம பூமியாகிய இலங்கை மாநாட்டின் "வீணாகானபுரம்" என வர்ணிக்கப்படும் இம்யாழ்ப்பாணம் ஆகும். சைவத்தையும் செந்தமிழையும் உயிராய் போற்றுகின்ற யாழ்.மாவட்டத்தின் வலிகாமம் வடக்கில் பல்லாண்டு காலத் தொன்மையும் புதுமையும் பெருமையும் கொண்டு வானுயரக் கோபுரங்களுடன் காட்சி தரும் ஆலயம் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம் ஆகும்.

அலங்காரக் கந்தனாக நல்லூரானும் அபிஷேகக் கந்தனாக மாவைக் கந்தனும் அன்னதானக் கந்தனாக சந்நிதி முருகனும் காவடிக் கந்தனாக கதிர்காமக் கந்தனும் குறிஞ்சி நிலத் தலைவனாகவும் தமிழ்க் கடவுள் எனும் பெருமையுடன் அருள்பாலித்துக் கொண்டு வருகின்றான் வண்ண மயில் வாகனன் (முருகன்).

"என்னை நம்பிக்கையுடன் துதிப்பவரைக் கைவிடேன்" என்று மாவையம்பதியிலே அருள்பாலித்துக் கொண்டிருக்கும் மாவைக் கந்தன் ஆலயமானது இயக்கர் நாகர் ஆரிய சக்கரவர்த்திகள் காலத்தில தோற்றம் பெற்றது எனவும் கி.பி.7 ஆம் நூற்றாண்டளவில் சோழ இளவரசி மாருதப்பு ரவீகவல்லியின் குதிரை முகத்தை நீக்க வேண்டிய சூழ்நிலையிலே சாந்தலிங்க முனிவரின் வழிப்படுத்தலுடன் தீர்த்த யாத்திரை செல்வதற்குக் கேட்டு மாவையம்பதிக்கு வந்து வடிவேலனை மனமுருகி துதித்ததனாலேயே அந்த மாமுகம் மானிட முகமாக மாறியது. இக்காரணத்தினாலேயே மாமுகம் நீங்கிய புரம் "மாவிட்டபுரம்" என பெயர் பெற்றது.

இவ்விதம் ஆகம விதிக்குட்பட்ட ஆலயத்திற்குரிய காங்கேயன் விக்கிரகத்தை இந்தியாவிலேயிருந்து காங்கேசன்துறை வழியாகக் கொண்டு வந்தனர். இவ் விக்கிரகத்தை கொண்டு வந்து இறங்கிய இடம் என்பதனாலேயே "காங்கேசன்துறை" என்று தொன்றுதொட்டு இன்றுவரை அழைக்கப்படுகின்றது.

மேலும் பிரதிஷ்டை செய்யப்பட்ட காங்கேயன் விக்கிரகத்திற்கு சுமார் 1789 ஆம் ஆண்டளவில் கும்பாபிஷேகத்தை சிதம்பர வம்சாவளி திகத்தர் பெரிய மனத்துள்ளார் என்பவரே நடத்தி வைத்து கிரியைவழிபாடுகளை மேற்கொண்டார் என்பதனை மாவைக் கந்தன் திருத்தல வரலாறு கூறுகின்றது.

வேதாகாமக்கிரியைகளுடன் ஆலயமும் மேலும் வளர்ச்சியைக் கண்டது. சிதம்பர தல வம்சாவளி அந்தணர்களே கிரியைகளை நடத்தி வந்தனர். முதலாவது கும்பாபிஷேகமானது சபாபதிக்குருக்கள் தலைமையில் 1789 இல் ஆனி மாத உத்தர நட்சத்திர மன்று நடைபெற்றது. இவ்வாறே இரண்டாவது கும்பாபிஷேகமானது 1927 ஆம் ஆண்டு ஆனி மாத சுவாதி நட்சத்திரமன்று கருங்கல்லினாலான மூலஸ்தான வேலைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு சுப்பிரமணியக்குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. பின் ஆதீன கர்த்தாவாக துரை சாமிக் குருக்களும் அவர் பின் 38 ஆவது பரம்ப ரைக்குரியவரான மஹாராஜ ஸ்ரீஷண்முகநாதக் குருக்கள் தலைமையில் ஆலயம் நிர்வகிக்கப்பட்டது. இவருடைய காலத்திற்கு முன்பிலிருந்து இன்று வரை மாற முடியாத நிகழ்வுகள் இடம்பெற்ற தலம் இதுவாகும். இந்தியாவிலிருந்து கொண்டு வரப்படுகின்ற வாசனைத்திரவியங்களுடன் பஞ்சகௌவியங்களால் அபிஷேகம், வெள்ளியினால் அமைக்கப்பட்ட உயரமான கொடிக்கம்பம், 80 அடி சப்பறம், பூந் தண்டிகை, 38 அடி உயரமான சண்முகப் பெருமானின் தேருடன் பஞ்சரதபவனி என்பவற்றை கொண்டுதான் மஹோற்சவமானது நடைபெறும்.

இத்துடன் சிறப்பாகத் தொன்று தொட்டுவரும் மஹோற்சவமானது ஆனிமாத பூர்வபட்ச சஷ்டிதிதியில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 நாட்களைச் சிறப்பாகக்கொண்டு ஆடி அமாவாசையன்று தீர்த்தத் திருவிழாவுடன் முடிவடைகிறது. இதில் சிறப்பாக 5 ஆம் திருவிழாவன்று சண்முகப் பெருமானின் திருநடனக் காட்சியும் 10 ஆம் திருவிழாவன்று திருமஞ்சக் காட்சியும் கார்த்திகை நட்சத்திரத்தன்று திருக்கார்த்திகைத் திருவிழாவும் 22 ஆம் திருவிழாவன்று மிருகயாத்திரையும் 23 ஆம் திருவிழாவன்று 80 அடி உயர சப்பறத்தில் முருகன் வள்ளி, தெய்வானையுடன் வலம் வரும் காட்சியும் 24 ஆம் திரு விழாவன்று அழித்தல் தொழிலைமுதன்மையாகக்கொண்டு பஞ்ச ரதபவனியும் இடம்பெறும். மறுநாள் அதிகாலை எம்பெருமான் கீரிமலை சாகரசங்கமத்தை நோக்கிச் செல்லும் காசி மிகையானது.

இவ்வாறு 1990 ஆம் ஆண்டளவில் நாட்டில் திடீரென ஏற்பட்ட யுத்தம் காரணமாக உயர் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு சகல ஆவணங்கள், நூல்கள், ஏட்டுச் சுவடிகள், ஆபணாதிகள், பெரிய வாகனங்கள், தேர், சப்பறம் என்பவற்றை அப்படியே விட்டுவிட்டுச் சென்றனர். சுமார் 2010 ஆம் ஆண்டளவில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து ஆலயம் மீள ஒப்படைக்கப்பட்டபோது அனைத்து சொத்துக்களுமே எரிந்து நாசமாக்கப்பட்டு களவாடப்பட்டிருந்தன.

அப்போது ஆதீன கர்த்தாவாகவிருந்த ச.சண்முகநாதக் குருக்களின் ஆன்மீகத்துடன் கலந்த அறப்பணிகளை சொற்களால் வர்ணிக்கப்பட முடியாது. மாவைக் கந்தனின் ஒரு தனி முகாமையாளராக நின்று பல்வேறுபட்ட கட்டுப்பாடுகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் மாவைக்கந்தனின் மீள் கட்டுமானமே எனது உயிரிலும் மேலான பணி என மதித்து எந்தவித வசதிகளுமற்ற மனித நடமாற்ற சூழலில் ஆலயத் திருப்பணியை நோக்கி நகர்ந்தார். ஆனால் அவர் 2011 ஆம் ஆண்டளவில் இறைபதமடைந்தார். அவரது கனவுகளை எல்லாமே நினைவாக்குவேன் என்று மன உறுதியோடு செயற்பட்டு வருகின்றார். தற்போதைய ஆதீன கர்த்தா மஹாராஜ ஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்களாவார். இவரினதும் இன்னும் பலருடைய ஆலோசனையின் இணைந்த வடிவமாக அமைக்கப்பட்டு வெள்ளோட்டம் கண்டு முகப்பெருமானை ஏந்தி வருகிறது இந்தத் திருத்தேராகும்.

சுப்பிரமணிய சுவாமியின் மகாவல்லி கஜாவல்லி சமேத இந்தத் திருத் தேரினை யாழ்ப்பாணம் உடுவிலம்பதி நிதர்சன் சிற்பாலய அதிபர் ஸ்தபதி கந்தசாமி இளங்கோவன் தலைமையிலும் அவரின் பஞ்சாகிர்த்திய பரிவாரங்களின் உதவியுடன் அமைத்தனர். இவர் தனது பரம்பரையில் அதாவது விஸ்வபிரம்ப ஹோத்திரத்தில் 6 ஆவது தலைமுறைக்குரியவனாகதொன்று தொட்டு இவ்வேலையைசெய்துவருகின்றனர். இவருடைய சேவையினைப்பாராட்டிசிற்பகலாமணி, சிற்பகலாரத்தினம், சிற்பக்கலைமாமணி, விஸ்வகுரமயோகி எனும் சிறப்பான பட்டங்களைதன்னகத்தேகொண்டுள்ளார். பொதுவாகதேர்அமைப்பினை தேரின் மூலஸ்தானத்தின் "கால் வாய்ப் பிரமாணம்" என அழைக்கப்படும் இத்தின் அளவைவைத்து தேரினுடைய மொத்த உயரத்தை 5 ஆகவோ 3 ஆகவோ பெருக்கி கணிப்பது முறை ஆகும்.

அந்தந்த கோயில்களின் அளவினை வைத்து கணிப்பிடுவது ஒரு விதி ஆகும். சிவபெருமானின் அயனந்தசயனா சன நிலையையோ அல்லது நின்ற நிலை அளவை வைத்து கணிப்பதை வழக்கமாக வைத்திருக்கின்றனர். இந்த அடிப்படையில் தான் சக்கரத்தின் உயரமும் பூமி யிலிருந்து வியாழ வரி மேல்மட்டமும் பவளக்காலின் உயரமும் அமைகிறது.

மாவையம்பதி நடு நாயகனுக்குரிய தேரினை 45 அடி உயரத்தில் வடிவமைக்கப்பட்டு "முக உத்தர" என்ற பெயருடன் கொண்டு எளிதாக அமைக்கப்பட்டு வருகிறது. ஆனால் 1990 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட தேரின் உயரம் 38 அடி ஆகும். இந்தத் தேரானது இலங்கையிலே பெரிய தேர் என வர்ணிக்கப்படுவதற்கு காரணம் இந்த முக உத்தர என்ற விசேட பெயருடன் இந்தியாவிலேயே அவிநாசி; கள்ளல் என்ற விசேட இடங்களில் மட்டுமே காணப்படுகிறது.

மாவையம்பதி இந்த திருத்தேரானது பல சிறப்புக்களைக் கொண்டுள்ளது. அச்சுத்தலைப்பார், குமிழ்ப்படை வரிவரிசை, கஜங்கள், சிம்மங்கள், மகரங்கள், நிறைந்த வரிவரிசை அன்னங்கட்டைகள், யாழிக்கட்டைகள், குதிரைக் கட்டைகள், கடைச்சல் கட்டைகள், அழகிய போதிகைகள் இறை மூர்த்த விக்கிரகங்கள் பலவற்றைக் கொண்டு அடித்தளம் அலங்கரிக்கப்பட்டு "பூசாந்தர வடிவத்திலே" முகபத்திரம் மீட்கப்பட்டு எழுதக, போதக, திரனை துவாளிப்பு சேர்க்கப்பட்டு அதிஉச்ச மானமட்டவேலை பங்களிப்பும் புகுத்தப்பட்டு புனிதமான முறையில் அடித்தளம் காட்சி தருகின்றது.

பாகன்களை முதுகிலே தாங்கிய அழகிய யாழிகள், கடைச்சல் பவளக்கால்கள், காட்சிதர உளி அடித்து தூண்களும் செக்கட்டான பந்தலைத்தாங்கி நிற்கிறது. மேல விதானம் பிரமாண்டமாக வடிவமைக்கப்பட்டு வர்ணச்சேலைகளால் போர்த்துக் கம்பீரமான பண்டிகையில் கலசம் தாங்கி காட்சி தருகிறது. இரும்பிலான சில்லுகள் நான்கு உறுதியாக உருள 45 அடி உயரத்தில் இலங்கையின் மிகப் பிரமாண்டமான தேராகக் காட்சி தருகின்றது. மருது, தேக்கு, வேம்பு, முதிரை, மலை வேம்பு போன்ற பெறுமதி வாய்ந்த மரங்களைக் கொண்டும் இரும்பை மூலப் பொருட்களாகவும் உபயோகித்து பொழி, கமுத்து வேலைகள் செய்யப்பட்டு அற்புதமான இறுக்கமான சித்திரச் சிற்பத் தேராக பல இலட்சம் கோடி ரூபாய் பெறுமதியில் படைக்கப் பட்டு மாவைக் கந்தனின் திருத்தேர் வெள்ளோட்டம் கண்டு மாவையம்பதி திரு வீதியிலே வள்ளி, தெய்வானை சமேதராக சுப்பிரமணிய சுவாமி வலம் வருகின்றது.

மாவைக் கந்தனின் தேர் வடத்தை பிடித்து இழுக்க ஓடோடி வாருங்கள் மாவைக் கந்தனின் அருளைப் பெறுங்கள். திருப்பணிக்கு மென்மேலும் உதவுங்கள். ஆலயம் மஹாகும்பாபிஷேகம் கண்டு இந்த வையகம் மென்மேலும் சிறக்க கைகொடுங்கள்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்".

ஜெ.ஜெயவினோதனன்
மாணவன்.

"மிக விரைவில் பாரிய அரசியல் மாற்றம்"

கோத்தபாயவை ஜனாதிபதியாக்க முழுமூச்சுடன் செயற்பட வேண்டும்

ஜோன் செனவிரட்ன அறிவுரை

(நிவித்திகல)

மிக விரைவில் பாரிய அரசியல் மாற்றம் ஏற்படப் போவதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரட்ன, கோத்தபாய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக தெரிவு செய்ய முழுமூச்சுடன் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிவித்திகல தொகுதி மாநாடு நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற அரசியல் மாற்றத்தைப் போன்று மற்றுமொரு அரசியல் மாற்றம் இன்னும் ஓரிரு தினங்களில் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

மாகாணசபைத் தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தல் இவற்றில் கூட ஏற்படலாம். ஆனால் மாகாணசபைத் தேர்தலை நடத்தக் கூடிய வாய்ப்பு இல்லை.

ஜனாதிபதித் தேர்தலையும் மாகாணசபைத் தேர்தலையும் அடுத்தடுத்து நடத்த வேண்டும். ஆனால் அவ்வாறான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

ஆகவே எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும்.

அந்தத் தேர்தலில் நாம் தோல்வியடையக் கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

யாழ்.மாநகர சபை அறிவிப்புப் பலகை இருந்தும் ஆரியகுளத்தில் கொட்டப்படும் பிளாஸ்ரிக் கழிவுகள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரியகுளத்தில் பிளாஸ்ரிக் கழிவுகள் குவிந்த வண்ணம் உள்ளன. யாழ்ப்பாணத்தில் உள்ள பொது நீர் நிலைகளில் கழிவுப் பொருட்களை கொட்ட வேண்டாம் என்ற யாழ் மாநகர சபையின் அறிவித்தல் உள்ள போதிலும் இதனை மீறி கண்டபடி வீசப்படும் கழிவுகளினால் பொது நீர் நிலைகள் நிரம்பிக் காணப்படுகின்றது.

யாழ்ப்பாண நகர நடுவில் காணப்படும் ஆரியகுளத்தில் தற்போது பெருமளவு கழிவுப் பொருட்கள் காணப்படுகின்றன.

இதற்குக் காரணம் வெளியிடங்களில் இருந்து வருபவர்கள் ஆரியகுளம் சந்திப் பகுதியில் நாள் தோறும் அதிகளவில் கூடுவதாகும்.

இப்பகுதியில் யாழ். மாநகர சபை கழிவுக் கூடைகளை அதிகளவாக வைப்பதன் காரணமாக வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் கழிவுக் கூடைக்குள் கழிவுப் பொருட்களை இடுவதன் மூலம் குளத்திற்குள் கழிவுப் பொருட்கள் சென்றடையாமல் தவிர்க்கலாம்.

ஆரியகுளம் சுத்தமாக இருப்பதன் மூலமே யாழ்.நகரத்தின் நிலத்தடி நீர் பாதுகாப்பானதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (9-350)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	மருதனார் மடம்	சாவகச்சேரி	கொடிகாமம்	கிளிநொச்சி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	80	100	80	60	80
உருளைக்கிழங்கு	140	120	120	110	120
பச்சைமிளகாய்	250	300	250	250	400
தக்காளி	100	100	100	80	120
மரவள்ளிக்கிழங்கு	160	140	180	140	120
கோவா	100	70	80	60	80
கரட்	80	150	150	120	160
பூசணி	60	50	80	60	80
புடோல்	50	60	60	60	120
வாழைக்காய்	120	140	120	80	140
சின்ன வெங்காயம்	120	100	150	140	120
பெரிய வெங்காயம்	100	120	120	110	120
பாகற்காய்	230	240	300	200	200
வெண்டிக்காய்	80	60	50	70	120
கருணைக்கிழங்கு	80	100	80	60	120
பயற்றங்காய்	160	300	140	220	200
லீக்ஸ்	80	80	80	70	100
பீற்றூட்	60	80	80	60	100
கறிமிளகாய்	200	240	240	220	200
முருங்கைக்காய்	60	60	100	80	80
போஞ்சி	120	220	200	160	200
கத்தரித்தம்புள்ள	60	50	—	50	60
கீரை-1பிடி	40	20	20	20	30
தேசிக்காய்	250	350	240	250	400
தேங்காய் (ஒன்று)	40	30	30	25	20-40
இராசவள்ளி	250	200	150	140	200
வெங்காயப்பூ	200	120	180	170	200
முள்ளங்கி	80	50	80	60	80
பொன்னாங்காணி	40	35	40	20	40
வல்லாரை	15	50	20	20	20
ஈரப்பலா	60	60	50	130	80

குறை'களை' பதிகம் 73

வீதியில் குப்பை கொட்டுதல் ஆறாவது பாதகமாய்ச் சேரும்

பஞ்சமா பாதகம் தனை
பார் பிறந்தார் செய்யாராயின்
புண்ணியம் கோடி பெறுவர் என்றார்
புவனத்தில் அறம் உணர்ந்தோர்

மண்ணேகி மீண்டும் பிறந்தார்
விண்ணுலகம் காணாதார்
என்று பொருள் கொள்வதனால்
ஏதும் பிழை இல்லையன்றோ?

மண்மீதில் பிறந்தார் பெறும் பயன்
விண்சென்று வானோர்
உலகை அடைதல் என்றால்,
பஞ்சமா பாதகம் செய்திட்டால்
பற்றுத் துறந்து பரமனை அடைதல் ஆகுமோ?

அன்று
பஞ்சமா பாதகம்
இன்று
ஐந்தொடு ஒன்று சேர்ந்து
ஆறு பாதகமாய் ஆயிற்று
பஞ்சமா பாதகத்துடன்
ஒன்றாய்ச் சேரும்
பாதகம் எதுவென்று ஏகினீராயின்
வீட்டுக் குப்பை கழிவுகளை
வீதியில் கொட்டுவதே
ஆறாவது பாதகமாம்

உன் வீட்டில் விளைந்த குப்பையை
அடுத்தவர் வீட்டு வாசலில்
கொட்டுதல் முறையாமோ?

நன்றி மறவாமல் தலையாலே
தான் தந்த வாழைக்குலையை
வெட்டியெடுத்து - நல்ல
விலைக்கு விற்றுவிட்டு,
வாழையின் தண்டினை
வீதிவழிதனில் போடுதல்
பஞ்சமா பாதகத்திலும் கொடிதன்றோ!

இன்னும்
புறொயிலர் கோழி உரித்து
செட்டை குடல் எல்லாம் சேர்த்து
உரைப்பையில் கட்டி மூடையாக்கி
கோயில் வீதியில் கொண்டுவந்து போடுகின்ற
ஆறறிவு படைத்த சீவன்கள்...

அந்தோ! வீதியில் நிற்கும் நாய்கள்
கோழிச்செட்டை கொண்ட உரைப்பையை
ஒற்றுமையாய் கூடி இழுத்து
நடுவீதியில் வைத்து
பங்குபோடும் காரியம் காணீரோ?

கடவுளே! ஏன் இந்தக் கொடுமை
கோழிச்செட்டை குடல்
கொண்டேகும் வாகனம் இருக்க,
ஏன் இந்தப் பாதகம் செய்கின்றீர்?

மூன்றுநாள் அடக்கமின்றி
நடுவீதியில் கோழிச்செட்டை குடல்
மிதிபட்டுப் போகிறது
எங்கும் துர்நாற்றம்

ஆத்திசூடி தந்த ஔவைப்பாட்டி
இன்றிருந்தால் ஆறாவது பாதகமாய்
வீதியில் குப்பை கொட்டுவதை
பாடிப் பதிவு செய்திருப்பார்
இப்பாதகம் செய்தார்
ஏழ் பிறப்பிற்கும்
புறொயிலர் கோழியாய்
பிறந்து கொல்பட்டு போவார் என்று
அறம்பாடி இச்செகத்தை திருத்த
திருவாய் மலர்ந்திருப்பார்

அன்னவரே! வீட்டுக் குப்பை கழிவு,
செத்தநாய், உரித்த கோழிச்செட்டை குடல்
பக்குவமாய் அடக்கம் செய்மினே
இதுவே அகிலத்தில் நீவிர்
பாதகம் செய்யா பக்குவமாம்

கூத்தனார்

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமாக மணல் அகழச்சென்ற 15 உழவு இயந்திரங்கள் மடக்கிப்பிடிப்பு

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு பொலிஸ் பரிவிற்கு உட்பட்ட நஞ்சுண்டான் குளப்பகுதியில் நேற்று முன் தினம் மாலை சட்டவிரோதமாக மணல் அகழச்சென்ற 15 உழவு இயந்திரங்களைமடக்கிப்பிடித்த துடன் அதன் சாரதிகளையும் புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர்களை முல்லை த்தீவு மாவட்ட நீதவான் நீதி மன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைய நாட்களாக சட்ட விரோத மணல் அகழ்வு பாரிய அளவில் இடம்பெற்று வருவ தோடு காடழிப்பும் இடம்பெறுவ

தாக ஊடகங்கள் சுட்டிக்காட்டி வந்தன.

இந்த சட்டவிரோத நடவடிக் கைகளை சம்பந்தப்பட்ட அதி காரிகளும் பொலிஸாரும் கண்டு கொள்ளவில்லை எனவும் மக்கள் குற்றம் சுமத்தி வந்தனர்.

குறித்த குற்றச்சாட்டை முறி யடிக்கும் வகையில் ஒருநாளில் 15 பேரை கைது செய்துள்ளார்கள்.

ஆனால் பொலிஸார் தொடர் ச்சியாக இவ்வாறான நடவடிக் கைகளை மேற்கொள்வதன் மூலம் முல்லைத்தீவின் இய ற்கை வளங்கள் அளிக்கப்படுவ தில் இருந்து தடுத்து நிறுத்தலாம் எனவும் மக்கள் கருத்துத் தெரி வித்தனர். (9-281)

கிளி/நூலகத்தில் மின் துண்டிப்பு; வாசகர்கள் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நூலகத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ள மையால் வாசகர்கள் மற்றும் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ள னர். கரைச்சிப் பிரதேச சபையி னால் நிர்வகிக்கப்படும் குறித்த நூலகத்திற்கான மின் கட்டணம் 2 இலட்சத்திற்கு மேல் உள்ள மையால் குறித்த மின் துண்டிப்பு இடம்பெற்றுள்ளது.

இதன் காரணமாக நூலகத் திற்கு வருகைதரும் வாசகர்கள் மற்றும் பரீட்சையில் தோற்ற வுள்ள உயர்தர மாணவர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மூன்று வாரமாக மின் துண் டிக்கப்பட்ட நிலை யில் உள்ள மையால் மலசல கூடத்திற்கான நீர் விநியோகம், மற்றும் வெளிச்சமின்மை, வெப்பத்தை கட்டுப்படுத்துவதற்கான வசதிகள் அனைத்தும் செயலி ழந்துள் ளமையால் பெரும் பாதி ப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

குறித்த விடயம் தொடர்பில் விரைந்து நடவடிக்கை மேற் கொண்டு, வாசகரகள் மற்றும் மாணவர்களின் நூலகப் பயன் பாட்டிற்கு வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறித்த நூலகம் பொருத் தமான வசதிகள் அற்ற நிலை யில், பால் உற்பத்தி தொழிற் சாலை கட்டடம் ஒன்றில் தற் காலிகமாக இயங்கி வருகின் றமையும் குறிப்பிடத்தக்கதா கும். (9)

அக்கராயன் தாழ் பாலத்தை மேம்பாலமாக மாற்றக் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் முக்கிய போக்கு வரத்து பாதையில் அமைந்துள்ள அக்கராயன்குளம் தாழ்பாலம் மேம்பாலமாக மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை கடந்த பத் தாண்டு காலமாக புறக்கணிக் கப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது பெரியகுளமாகிய அக்கராயன் குளம் நிரம்பிவான் பாய்கின்ற முல்லைத்தீவின் திருமுறிகண்டி அக்கராயன் வீதி யில் அமைந்துள்ள தாழ்பாலத் தினை மூடி வெள்ளம் பாய்வதன் காரணமாக மூன்று நாட்க ளுக்கு மேலாக போக்குவரத்து கள் துண்டிக்கப்பட்டிருக்கும். அக்கராயன் பிரதேச வைத்திய சாலையின் அம்புலன்ஸ் கிளி நொச்சி பொது வைத்தியசா லைக்கு செல்ல முடியாத நிலைமை ஏற்படும். அக்கரா யன் கிழக்கு மக்கள் அக்கரா யன் மத்திய பகுதிக்குச் செல்ல முடியாது. அக்கராயன் எரி பொருள் நிலையத்திற்கு எரி பொருள் கொண்டுவர முடியாது.

அக்கராயன் மகாவித்தியா லயம், அக்கராயன் ஆரம்ப வித் தியாலய மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல முடி யாது. இந்நிலையில் கடந்த பத்தாண்டுகளாக கிளிநொச்சி



மாவட்ட செயலகத்தில் நடைபெறு கின்ற கூட்டங்களில் குறித்த பாலத்தை மேம் பாலமாக மாற் றுங்கள் என பொது அமைப்புகள், கோரிக்கை விடுத்தன. 70மில் லியன் ரூபா நிதி தேவைப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. இனி வருங்காலம் மழைகாலம் என்ப தனால் குறித்த பாலம் மேம்பால மாக மாற்ற வேண்டிய அவசியம் உள்ளது.

இப்பாலத்தை நம்பி முல்லைத்தீவு மாவட்டத்தின் அமைதிபுரம், ஆரோக்கியபுரம், அம்பலப்பெருமாள் குளம், கோட்டைக்கட்டியகுளம் ஆகிய கிராமமக்களுடன் கிளிநொச்சி யின் வன்னேரிக்குளம், ஆனை விழுந்தான்குளம், அக்கராயன் குளம், கண்ணகைபுரம், ஸ்கந்த புரம், கோணாவில், யூனியங் குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஐயாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் குறித்தபாலம் மேம் பாலமாக மாற்றமடைவதனால் நன்மையடைவார்கள். கிளி நொச்சி மாவட்ட செயலகத்தின் இடர் முகாமைத்துவப் பிரிவின் பதிவுகளின்படி கிளிநொச்சி மாவ ட்டத்தின் இயற்கை இடர் மிகுந்த இடமாக அக்கராயன் தாழ்பாலம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.(9-350)

கிளி/இந்துக்கல்லூரியில் சிங்கள தினவிழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இந்துக் கல் லூரியின் சிங்கள தினவிழா 30.7.2019 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பொன் சபாபதி மண்டபத்தில் ஆசிரியர் திருமதி.வை.ஜெயகௌரி தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தேசிய மொழிகள் ஒருமைப்பாட்டு சமூகவிருத்தி மற்றும் இந்து கலாசார அமை ச்சின் உதவிச் செயலாளர் திரு மதி டென்சியா கிரிதரன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி பிர தம பொலிஸ் பரிசோதகர் ஈ. டபிள்யூ.ரீ.புஸ்பகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (9)

ஊரகம் நோக்கிய உள்ளூராட்சி சேவைகள்

நாளை மறுதினம் பரந்தனில்

கரைச்சிப் பிரதேச சபையில் எடுக்கப்பட்ட முதலாவது தீர் மானத்திற்கு அமைவாக பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பரந்தன் வட்டாரத்தில் நாளை மறுதினம் "ஊரகம் நோக்கிய உள்ளூராட்சி சேவைகள்" என் னும் தெனிப்பொருளில் மாபெ ரும் நடமாடும் சேவை பரந்தன் வட்டாரத்தில் நடைபெறவுள்ள து.

இதன் ஊடாக பரந்தன் வட் டாரத்தைச் சேர்ந்த மக்களுக் கான வியாபார உரிமைப் பத் திரம், நாய்களுக்கான உரிமைப் பத்திரம், இலவச ஆயுர்வேத சேவைகள், உடனடி அபிவிருத்தி வேலைகள், வீதி விளக்குகள் பொருத்துதல் போன்ற பல உள் ளூராட்சி வேலைத்திட்டங்கள் நடைபெறவுள்ளன. (9-281)

மன்னார் சாந்திபுரம் புனித ஜோசேவாஸ் பாலர் பாடசாலை சிறார்களின் கல்வியியல் கண்காட்சியானது கடந்த வாரம் பாலர் பாடசாலை அதிபர் அருட்சகோதரி எஸ்.சவரிய ம்மாள் தலைமையில் ஆரம்பமாகி இரு நாட்கள் இடம்பெற்றது. புனித அமலோற்பவ மாத சபை (CIC) சபை அருட்சகோதரிகளின் ஏற்பாட்டில் சாந்திபுரம் பாலர் படசாலை சிறுவர்களின் ஆக்கத்திலான பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

(படங்கள்:-மன்னார் செய்தியாளர்)

பயணிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கலந்துரையாடல்

(நெளுக்குளம்)

வவுனியா புதிய பேருந்து நிலை யத்தில் பயணிகள் எதிர்நோக்கும் சோதனை நடவடிக்கைகள் மற்றும் போக்குவரத்து தொடர்பான நடை முறைச் சிக்கல்கள் குறித்து நேற்று இலங்கை தேசிய போக்குவரத்துச் சபை, தனியார் பேருந்து உரிமை யாளர்கள் சங்கம் மற்றும் இல ங்கை போக்குவரத்துச்சபை, சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் இல ங்கை மனித உரிமைகள் ஆணை க்குழுவின் வவுனியா பிராந்திய அலுவலகத்தில் இடம்பெற்ற கலந் துரையாடலின்போது கவனம் செலு த்தப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் இல ங்கை மனித உரிமைகள் ஆணை க்குழு தேசிய போக்கு வரத்து ஆணைக்குழு, தனியார் போக்கு வரத்து பேருந்து உரி மையா ளர்கள், சங்கம் இலங்கை போக்கு வரத்துச்சபை, சிவில் சமூகப் பிரதிநிதிகள், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்ட ங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் பேரு ந்து நிலையத்தில் பொது மக்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிர ச்சினைகள் தொடர்பாகவும் சுட் டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கான பதில்களையும் கல ந்துகொண்ட பிரதிநிதிகள் முன் வைத்திருந்தனர். எனினும் குறித்த கலந்துரையாடலில் வன்னி மாவட்ட பிரதம போக்கு வரத்துப் பணிப்பாளர் கலந்து கொள்ளவில்லை. அத்துடன் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகளும் எட்டப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் வாரத்தில் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகரை சந்தித்து பேருந்து நிலை யத்திலுள்ள பல்வேறுபட்ட பிரச் சினைகள் குறித்து மனித உரிமை ஆணைக்குழு நட வடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அப்பகுதியில் இடம் பெற்றுவரும் வீதி விபத்துக்கள், வெளிமாவட்ட பேருந்துகளை பேருந்து நிலையத்திற்குள் அனு மதிப்பது, பேருந்து நிலை யத்திற்கு முன்பாக வெளிமாவட்ட பேருந்துகளை தரித்து நிற்பது குறித்தும் கலந்து ரையாடலின் போது கவனம் செலுத்தப்பட் டுள்ளது.

பேருந்து நிலையப் பகுதி யிலுள்ள சோதனைச்சாவடியில் பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கவ னம் செலுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய இணைப்பாளர் ரோஹித பிரியதர்ஷன, பிராந்திய அலுவலகத்தின் சட்டத்தரணியும் விசாரணை அதிகாரியுமான ஆர். எல். வசந்தராஜா ஆகியோர் கலந்துகொண்டனர். (9-299)

கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மன்னார் நன்னீர் மீன்பிடி மீனவர்கள்

தற்காலிக நிவாரணத்தையாவது வழங்குமாறு கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த பல மாதங்களாக ஏற்பட்டிருக்கும் கடும் வரட்சி காரணமாக நன்னீர் மீன்பிடியை வாழ்வாதாரமாக கொண்ட பல மீனவர்கள் பாதிக்கப் பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக ஒழுங்கான மழை வீழ்ச்சி இன்மையால் பல இலட்சம் பெறுமதியான நெற் செய்கைகள் அழிவடைந்திருந்தன.

இந்த நிலையில் தொடர்ச்சியான வரண்ட கால நிலை நீடித்து வருவதால் நன்னீர் மீன் பிடி தொழிலில் ஈடுபடும் ஆயிரக் கணக்கான மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வயல் நிலங்கள், சிறு குளங்கள் என்பவற்றிற்கு நீர் வழங்கும்



பிரதான குளங்கள் அனைத்தும் நீர் அற்று வரண்டு காணப்படுவதால் நன்னீர் மீன்களும் இறந்த நிலையில் காணப்படுவதுடன் நன்னீர் குளங்களுக்குள் படகுகளில் பயணிக்க முடியாத நிலையும் காணப்படுகின்றது.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் அதிகம் நீர் கொள்ளவை கொண்ட கட்டுக்கரை, ஈச்சளவாக்கை, சன்னார், கூராய், பெரியமடு குளங்கள் அனைத்தும் வற்றிய நிலையில் காணப்படுவதால் நன்னீர் மீன்பிடிப் பாளர்கள் மீன்பிடியில் ஈடுபட முடியாத நிலையில் உள்ளனர். மேலும் அதிக வெப்பம் காரணமாக முதலைகளும் குளங்களுக்குள்ளும் சிறிய அளவு நீர் நிலை காணப்படும் பகுதிகளுக்குள்ளும் நுழைவதால் உயிருக்கு ஆபத்தான நிலையில் மீன்பிடியை மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

அதிகளவான நீர் நிறைந்து காணப்படும் கட்டுகரை குளப் பகுதியில் தற்போது மாடுகள் மேய்கின்ற அளவுக்கு நீர் வற்றி போய் காணப்படுவதாகவும் நன்னீர் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த விடயம் தொடர்பாக நீரியல் வள திணைக்களம், மீன்பிடி அமைச்சு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எனப் பல தரப்பின ரிடம் தெரிவித்துள்ள போதும் இது வரை எந்தவித நிவாரணமோ மானியங்களோ எங்களுக்கு வழங்கப்படவில்லை எனவும் எனவே தங்களது வாழ் வாதார நிலையைக் கருத்தில் கொண்டு விவசாய மக்களுக்கு வழங்கப்படுவது போன்று எங்களுக்கும் வரட்சி காலங்களில் எங்கள் வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்வதற்கான தற்காலிக நிவாரண உதவிகளையாவது வழங்கி வைக்குமாறு நன்னீர் மீன் பிடிப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-285)

வீட்டுத்திட்டத்தில் முதன்மைப்படுத்தப்பட்டுள்ள கரைதுறைப்பற்று பிரதேசம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றின் கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் வீட்டுத் திட்டங்கள் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி.எம்.உமாமகள் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், மேற்படி பகுதிகள் பாதிப்புகளை கூடுதலாக சந்தித்ததன் காரணமாக மீள்குடியேறி உள்ள மக்களுக்காக வீடுகள் முதன்மைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதேவேளை 1984 ஆம் ஆண்டு மேற்படி கிராமங்களில் வாழ்ந்த குடும்பங்கள் போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்தனர். 2009 ஆம் ஆண்டின் பின்னரே மேற்படி பகுதிகளைச் சேர்ந்த ஆறு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மக்கள் குடியமர்ந்தனர். அடிப்படை வசதிகள் குறைவாகக் காணப்படும் கிராமங்களாக இவை காணப்படுகின்றன. வயல் நிலங்கள் பற்றைக் காடுகளாக இருப்பதன் காரணமாக தற்போது துப்புரவுப் பணிகள் கமநல சேவை நிலையம் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என மேலும் தெரிவித்தார். (9-350)

மாந்தை கிழக்கு மூன்று முறிப்பு கிராமத்துக்கான போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித்தருமாறு கோரிக்கை.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு மூன்றுமுறிப்பு கிராமத்திற்கான போக்குவரத்து வசதிகள் இன்மையால் சுமார் 196 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அன்றாடம்சொல்லொணாத்துன்பங்களை அனுபவித்து வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பகுதியாகக் காணப்படும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பின்தங்கிய கிராமமாக காணப்படும் மூன்று முறிப்பு கிராமத்திற்கான போக்குவரத்து வசதிகள் இன்மையால் குறித்த கிராமத்தில் வாழும் மக்கள் அன்றாடம் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதாவது, மூன்றுமுறிப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவின் கீழுள்ள வீரப்பிராயர்குளம், இளமருதன்குளம், மூன்றுமுறிப்பு கொம்பவைத்தகுளம் உள்ளிட்ட கிராமங்களில் தற்போது 196 குடும்பங்களைச்சேர்ந்த 611 பேர் வரையில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் மேற்படி கிராமத்திற்கான போக்குவரத்து வசதிகள் இன்மை, பிரதான வீதி புனரமைக்கப்படாமை என்பவற்றால் இப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதாவது, குறித்த கிராமத்தில் எதுவித அடிப்படை வசதிகளும் இன்மையால் கிட்டத்தட்ட 10 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பாண்டியன்குளம் அல்லது அதற்கு அப்பால் சென்று தமது தேவைகளை நிறைவு செய்யவேண்டிய நிலையில், குறித்த கிராமத்திற்கான பிரதான வீதி நீண்டதூரம் காட்டுப்பாதையாக காணப்படுவதனால் இரவு வேளைகளில் பயணம் செய்ய முடியாது காட்டு யானைகளின் தொல்லை அதிகளவில் காணப்படுகின்றது.

இவ்வாறு துன்பங்களை அனுபவித்து வரும் தங்களின் நிலையைக் கருத்திற்கொண்டு பிரதான வீதியைப் புனரமைத்து போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(9-315)

40 வருடங்களின் பின்னர் புனரமைக்கப்படும் வீதி

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச சபைக்குட்பட்ட உருத்திரபுரம் கிழக்கு நான்காம் குறுக்கு வீதி 40 வருடங்களின் பின்னர் 7.2 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி உருத்திரபுரம் கிழக்கு கிராமத்தில் உள்ள கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட 4 ஆம் குறுக்கு வீதி பல வருடங்களாக புனரமைப்பின்றி காணப்பட்டது.

வெள்ள வாய்கால்களாகக் காணப்பட்ட இவ்வீதியை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் நீண்டகாலமாக கோரி வந்த நிலையில் இவ்வருட முற் பகுதியில் கிளிநொச்சிக்கு வருகை தந்த மீள்குடியேற்றம் மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதியை நேரில் அழைத்து பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குறித்த வீதி தொடர்பில் விளக்கியிருந்தார்.

அதன் அடிப்படையில் குறித்த அமைச்சினால் 7.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கரைச்சி பிரதேச சபையினால் புனரமைப்புப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.(9-315)

"தகவல் அறியும் உரிமைச்சட்டம்" விழிப்புணர்வு செயலமர்வு

(மன்னார்)

தேசிய ரீதியில் நடைமுறையில் உள்ள தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயலமர்வு தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் ஞானோதய மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய மீனவர்கள், மீனவ சங்க தலைவர்கள், மீனவ தொழிலில் ஈடுபடும் பெண்கள், இளையோர், யுவதிகளுக்காக குறித்த தகவல் அறியும் உரிமை சட்டம் மற்றும் அது தொடர்பான நடைமுறை ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் சட்டத்தரணி கௌமிக்கா, தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு, கிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன், மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் சோதி குருஸ், மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் நான்கு மாவட்ட செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர். (9-285)

நீர் சுத்திகரிப்பு நிலையம் திறந்து வைப்பு

(நெளுக்குளம்)

வவுனியா றம்பைவெட்டியில் நீர் சுத்திகரிப்பு நிலையம் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தானால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சிறுநீரக நோய் தடுப்பு செயற்றிட்டத்தின் கீழ் சுமார் பதினைந்து இலட்சம் ரூபா நிதியிலும் வவுனியா பூனாவ கடற்படையினரின் பங்களிப்பிலும் றம்பைவெட்டி பிரதேசத்தில் அமைக்கப்பட்ட குறித்த நீர் சுத்திகரிப்பு நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.



வவுனியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் மாதர் அபிவிருத்தி சங்க சமாசத்தின் தலைவர் சுதாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா நகரசபை உபதவிசாளர் சு.குமாரசாமி, வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை உபதவிசாளர் மகேந்திரன் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை நேற்று வவுனியா மாவட்டத்தில் இச்செயற்றிட்டத்தின் கீழ் மூன்று இடங்களில் நாற்பத்து ஐந்து இலட்சம் ரூபா செலவில் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-299)

பாலியாற்றின் குறுக்காக விரைவில் தடுப்புச்சுவர் அமைக்குமாறு வேண்டுகோள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு வவுனிக்குளம் பாலியாற்றின் குறுக்காக தடுப்புச் சுவர் அமைப்பதற்கு ஐந்து மில்லியன் ரூபா நிதி தேவையென மாவட்டப் பிரதி நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் கீழுள்ள பாலியாற்றில் தொடர்ச்சியாக மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றமை, கரையோரங்களில் உள்ள மரங்கள் அழிக்கப்பட்டமை மற்றும் ஆற்றின் குறுக்காக தடுப்புச்சுவர்கள் இன்மை காரணமாக பாலியாறு அரிப்புக்குள்ளாகி ஆழமாகியுள்ளது.

இதனால் அயல் பிரதேசங்களில் உள்ள கிணறுகளில் குறிப்பிட்ட காலங்களில் நீர் இல்லாத நிலை காணப்படும் எனவும் பாலியாற்றின் குறுக்காக முக்கிய மான இடங்களில் மண் அரிப்பை தடுக்கும் விதத்திலும் நீரை தேக்கக் கூடிய வகையிலும் தடுப்புச்சுவர்களை அமைத்துத் தருமாறு பொதுமக்கள் மற்றும் விவசாய அமைப்புக்கள் கோரியுள்ளன.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த நீர்ப்பாசனத்திணைக்களம் முக்கியமான இடங்களில் இவ்வாறான தடுப்புச் சுவர்களை அமைக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

ஒரு இடத்தில் சுவர் அமைப்பதற்கு கிட்டத்தட்ட ஐந்து மில்லியன் ரூபா நிதி தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளது. (9-315)

பாரதம்

பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு தமிழர்களையும் விடுதலை செய்யுங்கள்!

அமித்ஷாவிடம் அற்புதம்மாள் கோரிக்கை

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்ற வாளிகளாக குற்றம் சுமத்தப்பட் டுள்ள பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேர்ர விடுதலை செய்யுமாறு மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிடம் அற்புதம்மாள் கோரிக்கை விடுத்துள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திரு மாவளவன் மற்றும் அற்புதம் மாள் ஆகியோர் நேற்றுக் காலை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை நேரில் சந்தித்து கலந்துரையாடினர். இதன்போதே இந்த கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது. (ஐ)

நம்பிக்கை வாக்கெடுப்பில் முதல்வர் எடியூரப்பா அரசு வெற்றி!

கர்நாடக சட்டப்பேரவையில் நடைபெற்ற நம்பிக்கை வாக் கெடுப்பில் முதல்வர் எடியூரப்பா அரசு வெற்றி பெற்றுள்ளது.

கர்நாடக சட்டப்பேரவையில் கடந்த வாரம் நடைபெற்ற நம்பி க்கை வாக்கெடுப்பில் முதல்வர் குமாரசாமி அரசு கவிழ்ந்ததை யடுத்து, கர்நாடக முதல்வராக எடி யூரப்பா பதவியேற்றார்.

அதனைத்தொடர்ந்து ஆளு நரின் அறிவுறுத்தலின்படி. முதல் வர் எடியூரப்பா அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

நேற்றுக் காலை 11 மணிக்கு சட்டப்பேரவை கூடிய நிலையில். நம்பிக்கை வாக்கெடுப்பு கோரும் தீர்மானத்தை முதல்வர் எடியூர ப்பா முன்மொழிந்தார்.

அதன்பின்னர் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற குரல் வாக்கெடுப்பில் முதல்வர் எடியூரப்பா அரசு வெற்றி பெற்றது. இதனை சபாநாயகர் ரமேஷ் குமார் அதிகாரபூர்வமாக சட்டப் பேரவையில் அறிவித்தார். (ஐ)

17 சட்டமன்ற உறுப்பினர்கள் தகுதி நீக்கம்

உயர் நீதிமன்றில் மனு தாக்கல்!

(கர்நாடகா)

கர்நாடகாவில் சபாநாயகரால் தகுதி நீக்கம் செய்யப்பட்ட 17 சட்டமன்ற உறுப்பினர்களில் 3 பேர் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

தகுதி நீக்கம் செய்யப்பட்ட காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களான ரமேஷ், மகேஷ் மற்றும் சுயேட்சை சட்டமன்ற உறுப்பினர் சங்கர் உள்ளிட்ட மூவரே நேற்று திங்கட்கிழமை உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

குறித்த மனுவில் சபாநாய கரின் தகுதி நீக்க உத்தரவை இரத்துச் செய்யவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கர்நாடகாவில் கர்ங்கிரஸ் மற்றும் மதச்சார்பற்ற ஜன்தா தளத்தின் அதிருப்தி சட்டமன்ற உறுப்பினர்கள் 15 பேரும் தங் கள் பதவிகளை இராஜினாமா செய்திருந்தனர்.

இந்தநிலையில். அவர்களது இராஜினாமாவை ஏற்கமறுத்த கர்நாடக சபாநாயகர் ரமேஷ்கு மார். 15 அதிருப்தி சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் 2 சுயே ட்சை சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 17 பேரை தகுதி நீக்கம் செய்து நேற்று முன்தினம் உத்த ரவிட்டிருந்தார். இதை எதிர்த்தே நேற்று உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள் ளது. (ஐ)

கிராமமொன்றில் தீவிரவாதி 60 பேர் பரிதாபமாக மர

(நைரோபி)

நைஜீரியாவில் கிராமமொன் றில் போகோஹராம் தீவிரவா திகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத் தாக்குதலில் 60 இற் கும் மேற்பட்டோர் உயிரிழந் தனர்.

நைஜீரியாவின் மைடுகுரி (Maiduguri) என்ற இடத்திற்கு அருகிலுள்ள புடு (Budu) எனும் கிராமத்தில் நேற்று முன்தினம் உறவினர் ஒருவரது இறுதிச் சடங்கில் பங்கேற்ற பின்னர் வீடு திரும்பிக் கொண்டிருந்த கிராம மக்கள் மீதே தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

உணவுத்திருவிழாவில் துப்ப ஐவர் உயிரிழப்பு; 11 பேர் ப

ஐவர் உயிரிழந்ததுடன் 11 பேர் படுகாயம் அடை

(வோஷிங்டன்)

அமெரிக்க - கலிபோர்னிய மாநிலத்தில் இடம்பெற்ற கலாசார உணவுத் திருவிழாவில் இனந் தெரியாத நபரால் மேற்கொள்ள ப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐவர் உயிரிழந்ததுடன். 11 பேர் படுகாயமடைந்துள்ளனர். 'The Gilroy Garlic Festival' எனப்படும் குறித்த பாரம்பரிய நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நிறைவை எட்டிய போது. திருவிழா திடலில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட் டது.

30 வயது மதிக்கத்தக்க வெள் ளையினத்தவர் ஒருவர் கைத்துப் பாக்கியுடன் திடலுக்குள் நுழை ந்து சரமாரியாகத் துப்பாக்கிப் பிர யோகம் மேற்கொண்டதாக சம்ப வத்தை நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்தார். இவ்வாறு இடம் பெற்ற இத்துப்பாக்கிச்சூட்டிலே

முகலாயர் காலத்தின் ந

(டில்லி)

கட்டுமானப் பணிக்காக குழி தோண்டியபோது கிடைத்த முக லாயர் கால நாணயங்களை. உத்தரப் பிரதேச பொலிஸார் மீட்டுத் தொல்பொருள் ஆய்வு க்கு அனுப்பி வைத்தனர்.

இந்தியாவின் உத்தரப் பிர தேச மாநிலம் மொராதாபாத் மாவட்டத்தின் முண்ட பாண்டே நகரைச் சேர்ந்தவர் குலாம் நபி. கட்டுமான ஒப்பந்தகாரரான இவர். தனது பணியாளர்கள் சிலருடன் சேர்ந்து மத்தியப் பிரதேச மாநிலம் சிம்லாவில் கட்டுமானப் பணி ஒன்றை எடுத் திருந்தார்.

அதற்காக குழி தோண்டிய போது. பழங்கால நாணயங்கள் கிடைத்துள்ளன. அவைகளை. ஒருவருக்கும் தெரியாமல் மறை த்து வைத்துள்ளனர்.

இந்நிலையில். பணி முடி ந்து அவர்கள் சொந்த ஊருக்குத் திரும் பிய பின்னர். அந்த நாணயங்களை பங்கிட்டு கொள்வது தொடர்பாக அவர் களுக்குள் தகராறு ஏற்பட்டுள்ளது.

இதைக் கவனித்த அக்கம் பக்கத் தினர், இது குறித்து பொலிஸாருக்கு

வெளிநாடு

வாதிகள் துப்பாக்கிச்சூடு! மரணம்; பலர் படுகாயம்

மோட்டார் சைக்கிள்களில் பயங்கர சத்தங்களை எழுப்பிய வாறு வந்த தீவிரவாதிகள், கிராம மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் 60 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் இன்னும் பலர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதேபோன்று போகோஹராம் தீவிரவாதிகள், கடந்த 2014 ஆம் ஆண்டு போர்னோ மாகாணத்திலுள்ள பெண்கள் பாடசாலையிலிருந்து 276 சிறுமிகளை கடத்திச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

துப்பாக்கிச்சூடு பர் படுகாயம்



அடைந்தனர். (ஜ)

ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது

(மொஸ்கோ)

ரஷ்யாவில் எதிர்க்கட்சி வேட்பாளர்களை நகர சபைத் தேர்தலில் போட்டியிட அனுமதிக்க வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 1,400 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் வெளிப்படையான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று கோரி ஆயிரக்கணக்கான எதிர்க்கட்சியினர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அனுமதிபெறாமல் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் பங்கேற்ற சுமார் 1,400 பேரை பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ)

ன் நாணயங்கள் மீட்பு

தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து அங்கு சென்ற பொலிஸார், குலாம் நபியிடம் இருந்த 698 நாணயங்களைக் கைப்பற்றி விசாரணை மேற்கொண்டனர்.

இது குறித்து, மொராதாபாத் லல்லன் சிங்கைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், "மொராதாபாத்தைச் சேர்ந்த குலாம் நபி என்ற ஒப்பந்தக்காரர் மூன்று தொழிலாளர்களுடன் சிம்லாவில் ஒரு இடத்தில் குழி தோண்டிக் கொண்டிருந்தபோது இந்த நாணயங்கள் கிடைத்ததாகக் கூறினார்.

அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட நாணயங்கள் 16 மற்றும் 17 ஆம் நூற்றாண்டு காலகட்டத்துக்கு இடைப்பட்டதாக இருக்கலாம்.

ஒரு சில நாணயங்கள் பேரரசர்கள் அக்பர் மற்றும் அவுரங்கசீப் காலங்களைச் சேர்ந்ததாக இருக்கலாம். மீட்கப்பட்ட நாணயங்களின் எடை 7.9 கிலோ. அவைகள், இந்திய தொல்பொருள் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன" என மேலும் தெரிவித்தார். (ஜ)

அமெ.அகதிகள் சிறையில் 3 இந்தியர்கள் 20 நாட்களாக தொடரும் உண்ணாவிரதம்

பலவந்தமாக சிகிச்சை

(வோஷிங்டன்)

அமெரிக்காவுக்கு அகதிகளாகச் சென்று டெக்சாஸ் எல்லையில் கைது செய்யப்பட்டு சிறையிலுள்ள இந்தியர்களில் 3 பேர் 20 நாட்களாக உண்ணாவிரதம் இருந்ததால் அவர்களுக்கு பலவந்தமாக சிகிச்சை அளிக்கப்பட்டது.

உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து அமெரிக்காவில் தஞ்சமடைய செல்லும் மக்களை அந்நாட்டின் சில மாநிலங்களில் உள்ள எல்லைப்பகுதியில் குடியுரிமைத்துறை அதிகாரிகள் கைது செய்து தற்காலிக சிறைகளில் அடைத்து வைத்துள்ளனர்.

அவ்வகையில், டெக்சாஸ் மாநில எல்லையில் கைது செய்யப்பட்டு எல் பாசோ பகுதியில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களில் இந்தியாவைச் சேர்ந்த சிலர் ஓராண்டுக்கு மேலாகியும் விடுதலை செய்யப்படாமல் இருப்பதை கண்டித்து கடந்த 9 ஆம் திகதியில் இருந்து 3 இந்தியர்கள் தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தனர்.

எங்களை நாடுகடத்துவது தொடர்பான வழக்குகளை நாங்கள் வெளியில் இருந்து சந்தித்துக் கொள்கிறோம்.

எனவே, உடனடியாக எங்களை விடுதலை செய்ய வேண்டும் எனத் தொடர்ந்து 20 நாட்களாக உண்ணாவிரதம் இருந்ததால் 3 இந்திய அகதிகளின் உடல்நிலை மிகவும் மோசமடைந்தது.

இதைத்தொடர்ந்து, தற்காலிக சிறையில் உள்ள வைத்தியர்கள் அவர்களை கட்டாயப்படுத்தி ஊசி மூலமாக கைகளில் குளுக்கோஸ் ஏற்றினர். இப்படி, சர்வதேச அகதிகள் பாதுகாப்புச் சட்டத்தை மீறும் வகையில் அவர்களுக்கு பலவந்தமாக சிகிச்சை அளிக்கப்பட்டது. (ஜ)

நீதிமன்றத்தின் அனுமதி கிடைத்தது; எல்லைச்சுவர் எழுப்பத்தயாராகும் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக அகதிகள் வருவதைத் தடுக்கும் வகையில் மெக்சிக்கோ எல்லையில் சுவர் எழுப்பும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் திட்டத்திற்கு இராணுவ நிதியைப் பயன்படுத்திக் கொள்ள அந்த நாட்டு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

மெக்சிக்கோவையொட்டிய எல்லை வழியாக ஏராளமானோர் அமெரிக்காவினுள் சட்டவிரோதமாக நுழைவதைத் தடுப்பதற்கு எல்லையில் பிரமாண்ட சுவர் எழுப்புவதற்கு நிதியை ஒதுக்கும்படி அமெரிக்க பாராளுமன்றத்திடம் ட்ரம்ப் கோரிக்கை வைத்தார்.

இதற்கு ஜனநாயகக் கட்சியினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனால் மெக்சிக்கோ எல்லையில் சுவர் எழுப்பும் விவகாரத்தில் ட்ரம்ப், அவசர நிலையைப் பிரகடனம் செய்தார்.

இதன் மூலம் இராணுவ நிதியை மெக்சிக்கோ எல்லையில் சுவர் எழுப்ப அவர் பயன்படுத்த முடியும்.

அதன்படி எல்லைச் சுவர் திட்டத்துக்கு 1.5 பில்லியன் டொலரை நிதியாக ஒதுக்க அமெரிக்க இராணுவத் தலைமையகம் ஒப்புதல் வழங்கியது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்க சிவில் உரிமைகள் ஒன்றியம் சார்பில் 20 மாகாணங்களின் அமெரிக்க மத்திய நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தன. இதில் கலிபோர்னியா மாநிலத்தின் மத்திய நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த நீதிபதி மெக்சிக்கோ எல்லையில் சுவர் எழுப்பும் திட்டத்துக்கு இராணுவ நிதியைப் பயன்படுத்துவதற்கு தற்காலிகத் தடை விதித்தார்.

இதை எதிர்த்து அரச தரப்பில் உயர் நீதமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்டது. இந்த மேன்முறையீட்டு வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், எல்லைச் சுவரின் ஒரு பகுதியைக் கட்டி முடிப்பதற்கு 2.5 பில்லியன் டொலர் இராணுவ நிதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதியளித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு, கலிபோர்னியா, அரிசோனா, நியூமெக்சிகோ மாகாணங்களில் தெற்கு எல்லைச்சுவர் கட்டப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

ட்ரம்பின் இனவெறி கருத்தால் மீண்டும் சர்ச்சை

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிறவெறியைத் தூண்டும் வகையில் கருத்துத் தெரிவித்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், அண்மையில் நாடாளுமன்ற பெண் உறுப்பினர்கள் 4 பேரை பூர்வீக நாட்டுக்குத் திரும்பிச் செல்லுமாறு கூறி சர்ச்சையில் சிக்கினார்.

இது பல்வேறு தரப்பிலும் கண்டனத்துக்கு வழிவகுத்தது. இந்தப் பரபரப்பு அடங்குவதற்குள் தற்போது மீண்டும் நிறவெறியைத் தூண்டும் வகையில் ட்ரம்ப் கருத்துத் தெரிவித்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மேரிலேண்ட் மாகாணத்தின் பால்டிமோர் நகரம் குறித்து ட்ரம்ப் தனது டுவிட்டரில், "பால்டிமோர், எலிகளால் கொறிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் சிதறிக் கிடக்கும் அருவருப்பான நகரம். மனிதர்கள் யாரும் அங்கு வசிப்பதற்கு விரும்ப மாட்டார்கள். அமெரிக்காவிலேயே அது மோசமான நகரம். மெக்சிக்கோ எல்லையில் இருக்கும் அகதிகளைக் காட்டிலும் மோசமானவர்கள் வசிக்கும் நகரம்" என்று தெரிவித்திருந்தார்.

பால்டிமோர் நகரைச் சேர்ந்த வரும் கறுப்பினத்தவருமான ஜனநாயகக் கட்சி எம்.பி. எலிஜா கம்மிங்ஸ் என்பவரை குறிவைத்தே ட்ரம்ப் இந்தக் கருத்தைப் பதிவிட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது. (ஜ)

வஞ்சனை மிக்க

முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் கையேந்தும் தலைமை வேண்டாம்

அபேதிஸ்ஸ தேரர் எதிர்ப்பு

(குருநாகல்)

வஞ்சனை மிக்க முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் கையேந்தும் சிங்கள அரசியல் தலைமைகளை இனியும் இந்த நாட்டுக்கு நியமித்துக் கொள்ளாதிருப்போம் என பேராசிரியர் மெதகொட அபேதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

விமல் வீரவன்ச எம்.பியால்

குருநாகலில் முன்னெடுக்கப்பட்டு வரும் வஹாப் வாதத்துக்கு எதிரான தொடர் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குற்றச்சாட்டுக்கு இலக்கான வர்களைப் பதவி விலகுமாறு கூறியவுடன் அனைத்து எம்.பி.க்களும் பதவி விலகுகின்றார்கள். இதனால், குறித்த குற்றச்சாட்டுக்கு அத்தனைபேரும் பொறுப்பாக மாறுகின்றார்கள். இவர்கள் குறித்து எதிர்காலத்தில் மக்கள் கவனமாக இருப்பது மட்டுமல்லாது, தீர்மானங்களையும் எடுக்க வேண்டும் எனவும் தேரர் தெரிவித்தார். (இ-7)

ஜனாதிபதி நேரத்தை அறிவித்தவுடன் முஸ்லிம் எம்.பிக்கள் அனைவரும் அமைச்சுப் பதவிகளை ஏற்பர்

(கொழும்பு)

இராஜினாமா செய்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மீண்டும் அமைச்சுப் பதவிகளை ஏற்பது என ஏகமனதாக தீர்மானம் எடுத்துள்ளதாகவும் இந்த நியமனத்தை பெற்றுக் கொள்வதற்கான நேரத்தை ஜனாதிபதி அறிவிப்பதே எஞ்சியுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று முன்தினம் மாலை அலரிமாளிகையில் நடத்திய விசேட சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

விரைவில் இந்த பதவி ஏற்பு நிகழ்வு இடம்பெறலாம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீனும் அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்பார் என

வும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

கொஹ்வலை துப்பாக்கிச்சூடு குறித்து 3 பொலிஸ் குழுக்கள் விசாரணை

(கொழும்பு)

கொழும்பு, கொஹ்வலைப் பகுதியில் ஜீப்பில் சென்ற இருவரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

இரவு நேர விருந்தொன்றுக்குச் சென்றுவிட்டு, திரும்பிக் கொண்டிருந்த நுகேகொடை பகுதியைச் சேர்ந்த இரு வர்த்தகர்களை இலக்கு வைத்தே இந்தச் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் இதன்போதே ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றையவர் படுகாயமடைந்ததாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

கொஹ்வலை - ஜம்முகஸ் முல்ல பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது. மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர், ஜீப் வண்டியில் பயணித்த இவ்விருவர் மீதும் துப்பாக்கிச் சூட்டை நடத்தி இருப்பதாக சந்தேகிக்கும் பொலிஸார். கொலையாளிகள் பயன்படுத்தியிருக்கலாம் எனச் சந்தேகிக்கும் இலக்கத் தகடற்ற மோட்டார் சைக்கிளொன்றை நுகேகொடை தெல்கந்த பகுதியில் வைத்து மீட்டனர்.

இந் நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் நுகேகொடை பொலிஸ் அத்தியட்சகரின் கீழும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவின் ஊடாகவும் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இது தொடர்பில் கொஹ்வலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கீழ் 3 விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளன. (இ-7)

சோபா உடன்படிக்கைக்கு எதிராக தேங்காய் உடைத்து வழிபாடு!

(திருகோணமலை)

உத்தேச சோபா உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவிலில் தேங்காய் உடைத்து வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

கிழக்கு மக்கள் அமைப்பினரின்ஏற்பாட்டில்நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்த வழிபாடு இடம்பெற்றது. திருகோணமலை நகரிலிருந்து ஆரம்பான பேரணி, திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவிலை சென்றடைந்தது.

இதன்போது திருகோணமலை நகர மத்தியில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டதுடன், சோபா உடன்படிக்கை தொடர்பாக மக்களுக்குத் தெளிவு படுத்தப்பட்டது. (இ-7)

இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

சங்கீத சங்கடம்

எனக்கு மிகவும் வேண்டப்பட்ட ஒருவர் என்னைத் தேடி திடீரென்று ஒரு நாள் வந்தார். என்ன விடயம்? என்று கேட்டேன். நாதஸ்வரம் வாசிப்பதற்கு கற்றுக் கொள்ளலாமா? என்று யோசிக்கின் றேன் என்றார். சங்கீதத்தை பல பேர் வாசிப்பதை பாத்திருப்பார் போல இருக்கின்றது. நான் மிகவும் பயந்து போய் விட்டேன். ஏனென்றால் அவருடைய சாமர்த்தியம் எவ்வளவு என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவரை உட்கார வைத்து மெதுவாக அட்வைஸ் செய்ய ஆரம்பித்தேன்.

இதோ பாருங்கள் உங்களுக்கு எதற்காக இந்த விபரீத ஆசை! சங்கீதம் என்பது ஒரு சுகமான அனுபவம். நாம் எல்லாம் சங்கீதம் கற்றுக் கொள்ள ஆசைப்பட்டு நாமும் கஷ்டப்பட வேண்டாம். சங்கீதத் தையும் கஷ்டப்படுத்த வேண்டாம் என்றேன்.

அவர் அதையெல்லாம் காதிலே வாங்குகின்ற மாதிரித் தெரிய வில்லை. எப்படியும் நாதஸ்வரம் வாசிக்கக் கற்றுக் கொண்டே ஆக வேண்டும் என்பது போல் பேசினார். சரி வேற வகையிலே முயற்சி செய்து பார்க்கலாம் என்று யோசித்து ஒருவர் எனக்குத் தெரிவித் திருந்த ஒரு கதையை அவரிடம் சொன்னேன்.

அந்தக் கதை என்னவென்றால் ஒரு ஊரிலே ஒரு கோயில். அந்தக் கோயிலிலே ஒரு ஸ்தல விருட்சம். அந்த மரத்திலே ஒரு பிரம்ம இராட்சதன். ஒரு காலத்திலே நிறையப் பாவம் எல்லாம் செய்து விட்டு சாபம் வாங்கி பிரம்ம இராட்சதனாக மாறியவன் அவன்.

சாப விமோசனத்திற்காக அந்த மரத்திலே காத்துக் கொண்டிருந்தான். நல்ல புத்தி ஞானமுள்ள ஆள்தான். ஏதோ போதாத காலம் பாவம் செய்துவிட்டு இப்படி ஆகிவிட்டான்.

பிரம்ம இராட்சதனான அவனை கண்ணாலே பார்க்க முடியாது. அவனுக்கு உருவம் கிடையாது. அந்தக் கோயிலிலுள்ள ஸ்தல விருட்சத்திலே அவன் இருந்து கொண்டிருந்தான். ஒரு பேய் போல் என்று வைத்துக் கொள்ளுங்களேன். அந்தக் கோயிலிலே தினமும் நாதஸ்வரம் வாசிக்கிற ஒருத்தர் வாசிக்கிறார் என்று கூட சொல்ல முடியாது ஊதுவார். முறையான பயிற்சி இல்லாதவர். நம்ம ஆள் போல் இவரும் திரென்று ஆசைப்பட்டுக்கற்றுக்கொண்டாரோ என்னமோ?

அவர் தினமும் காலை, மாலை கோயிலில் வாசிப்பார். பிரசாதம் கொடுப்பார்கள். வாங்கிச் சாப்பிடுவார். மறுபடியும் வாசிப்பார். இப்படியே அவர் காலம் ஓடிக் கொண்டிருந்தது. ஒரு நாள் அந்தக் கோயிலில் ரொம்ப நேரம் வாசித்து விட்டு இரவு வீட்டிற்கு புறப்பட்டார்.

அப்போது அந்த மரத்திலேயிருந்த பிரம்ம இராட்சதன் (பேய்) அவரிடம் பரிதாபமாக பேச ஆரம்பித்தது. இதோ பாரு... என்னை நீ கண்ணாலே பார்க்க முடியாது. இருந்தாலும் உன்னுடைய வாசிப்பை வேறு வழியில்லாமல் தினமும் நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். எனக்கு ஒரு உதவி செய்வாயா? இனிமேல் நீ வாசிப்பதை விட்டு விடவேண்டும் என்றது.

ஏன் அப்படி சொல்கின்றாய்? என்று கேட்டார் பரிதாபமாக! நான் ஏற்கனவே ஒரு பாவம் செய்து விட்டு பிரம்ம இராட்சதனாக மாறி சாப விமோசனத்திற்காக காத்துக் கொண்டிருந்தாலும் சங்கீத ஞானம் உள்ளவன்தான். நீ வாசிப்பது கொஞ்சம் கூட நன்றாகவில்லை.

என்னால் சகிக்கவே முடியவில்லை. இதேபோல் நீ தினமும் வாசித்து அதை நான் கேட்டுக் கொண்டு வந்தால் சாப விமோசனம் கிடைப்பதற்குள் இங்கேயே நான் செத்துப் போனாலும் போய்விடுவேன். இப்பவே தினம் உன் வாசிப்பைக் கேட்டு துரும்பாக இளைத்துப் போய் விட்டேன் என்றது. நீ சொல்வதெல்லாம் சரிதான். நான் வாசிப்பதை என்னாலேயே சகிக்க முடியவில்லை. இருந்தாலும் இதை விட்டால் எனக்கு வேற எந்தத் தொழிலும் தெரியாது. சாப்பாட்டிற்கே நான் இதைத்தான் நம்பி இருக்கின்றேன். இதை விட்டு விட்டு நான் என்ன செய்வது என்றார் அவர்.

உனக்கு சாப்பாட்டிற்கு ஏதாவது வழி செய்தால் இந்த வாசிப்பை விட்டுவிடுவாயா? என்று கேட்டது அது. விட்டுவிடுவேன் என்றார் அவர். அப்படியென்றால் நான் சொல்வதை கேள்! ஊர் ராஜாவின் மகளைப் போய் நான் பிடிக்கிறேன். தன் மகளுக்கு பேய் பிடித்திருக்கிறது என்று தெரிந்தவுடனே அந்த ராஜா ஊரில் உள்ள மந்திரவாதியை எல்லாம் கூப்பிட்டுப் பேய் ஓட்டுவார். நான்ஸ்ரீ யாருக்கும் அசைந்து கொடுக்காமல் இருந்து விடுகிறேன். கொஞ்ச நாள் கழித்து நீ அந்த அரண்மனைக்கு வா. நான் அரச குமாரிக்கு பிடித்திருக்கின்ற பைத்தியத்தை சரி செய்து விடுகி றேன் என்று சவால் விடு. பின் நாதஸ்வரத்தை வாசி. நான் அந்தப் பெண்ணை விட்டுவிடுகிறேன்.

உடனே ராஜா உன்னுடைய திறமையைப் பாராட்டி நிறைய பொன்னும் பொருளும் கொடுப்பார். அதை வைத்துக் கொண்டு நீயும் உன் பரம்பரையும் மகிழ்ச்சியாக காலம் தள்ளலாம் என்று யோனை சொல்லியது. இவரும் யோசித்துப் பார்த்தார். அது மிகவும் நல்லது என்று நினைத்தார். சரி என ஒத்துக் கொண்டார். இந்தப் பிளான் அப்படியே எல்லாம் நடந்தது. ராஜா நிறைய பரிசு கொடுத்தார். அவரும் நாதஸ்வரம் வாசிப்பதை விட்டு விட்டார்.

இந்தக் கதையை எதிரிலே உட்கார்ந்திருந்த நண்பரிடம் சொன்னேன். அப்படியும் அவர் நாதஸ்வரம் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசையை கைவிட்டதாக தெரியவில்லை.

சரி இவரை எப்படி சரி செய்வது என்று யோசித்துப் பார்த்தேன். கடைசியாக ஒரு விடயத்தை சொன்னேன். அதைக் கேட்டதன் பின் தான் சரி அப்படி என்றால் நான் நாதஸ்வரம் கற்றுக் கொள்கின்ற யோசனையை விட்டுவிடுகிறேன் என்று ஒத்துக் கொண்டார்.

நான் என்ன சொன்னேன் தெரியுமா? நீங்கள் நாதஸ்வரம் வாசிக்கக் கற்றுக் கொள்வது என்று முடிவு செய்தால் உங்களுடன் சுவ வாசிப்பதற்கு உதவியாக நான் தவில் வாசிக்கக் கற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். என்று சொன்னேன் அவ்வளவுதான்.

பழைமைக்கு அடையாளமாகவே பஞ்ச ஈஸ்வரங்கள் அமைந்துள்ளன

அமைச்சர் மனோ சுட்டிக்காட்டு

(பீகார்)

இலங்கையில் இந்து சமயத்துக்கு 3,000 வருடங்களுக்கு குறையாத வரலாறு இருக்கின்றது. எனவே எம் நாட்டுக்கு இந்து சமயம் புது வரவல்ல என்பதையும் இந்த இந்து . பௌத்த மகா சபைக்கு மிகத் திடமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

பீகாரில் நடைபெற்ற 'தர்ம-தம்ம' இந்து . பௌத்த மாநாட்டில் சிறப்புரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், 'பழைமைக்கு அடையாளமாக இலங்கையின் பஞ்ச ஈஸ்வரங்கள் அமைந்துள்ளன..

வடக்கில் நகுலேஸ்வரம், வடமேற்கில் திருக்கேதீஸ்வரம், கிழக்கில் திருக்கோணேஸ்வரம், மேற்கில் முன்னேஸ்வரம், தெற்கில் தான்தோன்றீஸ்வரம் ஆகியவை இலங்கை தீவின் நான்கு திசைகளிலும் கடலை எல்லைகளாக கொண்ட மாவட்டங்களில் அமைந்துள்ளன.

இந்த மாநாட்டின் 'தர்ம-தம்ம' என்ற தலைப்பு என்னை கவர்ந்து விட்டது. 'தர்ம' என்பது சமஸ்கிருதம். 'தம்ம' என்பது பாளி. இரண்டு சொற்களினதும் அர்த்தங்கள் ஒன்றாகும். 'தர்ம' என்று இந்துக்கள் சொல்வதை, 'தம்ம' என்று பௌத்தர்கள் சொல்கிறார்கள்.

இந்து, பௌத்த நெறிகளுக்கு இடையில் வேறுபாடுகள் மிகச் சில. ஆனால் ஒருமைப்பாடுகள் அநேகம். இந்தப் பகிரங்க உண்மையை கணக்கில் எடுக்க, இலங்கையில் நாம் தவறி விட்டோம்.

இலங்கையில் இப்போது போர் ஓய்ந்து சமாதான யுகம் மெல்ல ஆரம்பித்துள்ளது. இந்த போரில் சிங்களம் பேசும் பௌத்தர்களும், தமிழ் பேசும் இந்துக்களும் பிரதான இரு தரப்புகளாக போரிட்டார்கள் என்பதை ஒப்புக்கொண்டே ஆக வேண்டும்.

ஆகவே இன்று இலங்கையில் தேசிய ஐக்கியம் ஏற்பட வேண்டுமானால், முதலில் இந்துக்களும், பௌத்தர்களும்

ஐக்கியப்பட வேண்டும். இந்த அடிப்படையில் இலங்கையில் இந்து-பௌத்த ஐக்கியத்தை நாம் ஏற்படுத்துவோம்.

இதன் அர்த்தம், இலங்கையில் இருக்கின்ற ஏனைய சகோதர மதங்களான கத்தோலிக்கம், இஸ்லாம் இரண்டையும் புறந்தள்ளுவது என்பதல்ல. முதற் கட்டமாக, ஒருமைப்பாடுகள் நிறைந்த இந்து, பௌத்த மதத் தவர்கள் ஐக்கியப்பட்டால், அது அடுத்த கட்டத்தில், அனைவரையும் அரவணைக்கின்ற, இலங்கையின் தேசிய ஐக்கியத்துக்கும் வழி வகுக்கும் என நான் நம்புகிறேன் என மேலும் தெரிவித்தார். (7)

பாராளுமன்ற செலவுகள் தொடர்பில் சபாநாயகர் தெளிவுபடுத்த வேண்டும்

சி.பி.ரத்நாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைப் பாராளுமன்றத்தில் உணவு மற்றும் தேநீர் போன்ற செலவுகளுக்கு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற 225 உறுப்பினர்களுக்கு மாத்திரம் செலவு செய்வதில்லை என்பதை சபாநாயகர் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.பி. ரத்நாயக்க வலியுறுத்தினார்.

கினிகத்தேனை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற 225 உறுப்பினர்களும், இந்த முறைபாட்டினை தெரிவிக்கும் வகையில் பாராளுமன்றத்தில் உத்தியோகத்தர்கள் உள்ளனர். அதேபோல் பொலிஸார் இருக்கின்றனர். பாராளுமன்ற அமர்வு இடம்பெறுகின்ற போது ஊடகவியலாளர்கள் வருவார்கள்.

எனவே இவர்கள் அனைவரையும் கணக்கெடுப்பு செய்தால் 1500க்கும் மேற்பட்டவர்களுக்கு உணவு மற்றும் தேநீர்

என்பன வழங்கப்பட வேண்டிய தேவை இருக்கிறது.

இவர்களுக்கு காலை, மதியம், இரவு நேரத்திற்கான உணவும் தேநீரும் வழங்கப்படுகிறது. இதற்கான அனைத்துச் செலவுகளையும் பாராளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு மாத்திரம் அல்ல ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் சேர்த்தே செலவு செய்யப்படுவதாக சுட்டிக் காட்டினார்.

எனவே இதற்கான செலவை பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது சுமத்துவது பிழையான விடயம், சபாநாயகர் கரு ஜெயசூரிய பாராளுமன்றத்தில் இவ்வாறு தான் செலவு செய்யப்படுகிறது என்ற விடயத்தை நாட்டுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

மதுபோதையில் சாரத்தியம் ரூ.14 கோடி அபராதம்

பொலிஸ் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைதான சாரதிகளிடமிருந்து 14 கோடியே 26 இலட்சம் ரூபாய் அபராதத் தொகை பெறப்படவிருப்பதாகப் பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

மது போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்யும் விசேட தேடுதல் நடவடிக்கை கடந்த 22 தினங்களாக இடம்பெற்று வருவதோடு ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி வரை இந்த தேடுதல் முன்னெடுக்கப்பட இருப்பதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். கடந்த 27 ஆம் திகதி மட்டும் மது போதையில் வாகனத்தைச் செலுத்திய 5705 சாரதிகள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் நேற்று முன்தினம் காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் மாத்திரம் 208 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அதிகரித்துள்ள வாகன விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஜூலை 5 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 5 ஆம் திகதிவரை மது போதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்யும் விசேட வேலைத் திட்டத்தை பொலிஸார் ஆரம்பித்திருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட பொலிஸ் பேச்சாளர், மோட்டார் வாகன சட்டத்தின் 2019 ஆம் ஆண்டு 10 ஆவது இலக்க திருத்தச் சட்டத்தின் 216 பிரிவின் கீழ் அபராதமும் சிறைத்தண்டனையும் விதிக்கப்படுவதாகக் கூறினார். சாரதிகளுக்கு விதிக்கப்படும் தண்டனை தொடர்பில் விளக்கமளித்த அவர்,

மதுபோதையில் சாதாரண மோட்டார் வாகனங்களைச் செலுத்திய சாரதிகள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டால் அவர்களிடம் 25 ஆயிரம் ரூபா முதல் 30 ஆயிரம் ரூபா வரை அபராதம்விதிக்கப்படலாம். இல்லாவிட்டால் 3 மாதத்துக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது இரண்டு தண்டனைகளும் ஒருங்கே வழங்கப்படலாம். அவற்றுக்கு அப்பால் 12 மாதங்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் இடைநிறுத்தப்படும்.

மதுபோதையில் பயணிகள் போக்குவரத்து வாகனங்களைச் செலுத்தியிருந்தால் அந்த சாரதிகளிடமிருந்து 25 ஆயிரம் ரூபா முதல் 30 ஆயிரம் ரூபா வரை அபராதம் விதிக்கப்படலாம். இல்லாவிட்டால் 6 மாத சிறைத் தண்டனை அல்லது இரண்டு தண்டனைகளும் ஒருங்கே வழங்கப்படலாம். அவற்றுக்கு அப்பால் சாரதி அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படும்.

அதேநேரம், மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தி விபத்தை ஏற்படுத்தினால் விபத்தை ஏற்படுத்தியமைக்கான தண்டனைகளுக்கு அப்பால், மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தியமைக்காக ஒரு இலட்சம் முதல் ஒன்றரை இலட்சம் ரூபா வரையில் அபராதம் விதிக்கப்படுவதுடன் இரண்டு வருடம் முதல் 10 வருடங்கள் சிறைத் தண்டனை அல்லது இரண்டு தண்டனைகளும் வழங்கப்படலாம்.

இதற்கமைய மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமைக்காக கைது செய்யப்பட்ட 5705 பேரிடமிருந்து 14 கோடியே 26 இலட்சம் ரூபா அபராதத் தொகை அறவிடப்படும். 22 நாட்களில் மாத்திரம் இந்தளவு தொகையை அபராதமாக விதிக்க முடிந்திருப்பதுடன், ஓகஸ்ட் 5 ஆம் திகதிவரை இந்த விசேட செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

தமது இந்த விசேட வேலைத் திட்டத்தின் ஊடாக மது போதையில் வாகனத்தைச் செலுத்தும் சாரதிகளால் ஏற்படுத்தப்படவிருந்த 5705 வீதி விபத்துக்களைத் தடுக்க முடிந்திருப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (இ-ஜ)

அமைச்சுப் பதவியின்றி சிலருக்கு தூக்கம் வராது

விதுர விமர்சனம்

(ஹொரணை)

அமைச்சுப் பதவியின்றி சிலருக்கு தூக்கம் வராது என நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்கிரமநாயக்க விமர்சித்தார்.

ஹொரணையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'அமைச்சுப் பதவி தேவையில்லை என்கின்றவர்கள் மீண்டும் அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்கவுள்ளதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது.

அமைச்சுப் பதவி இல்லாமல் தூக்கம் வராத சிலர் உள்ளனர். அவர்களுக்கு அமைச்சுப் பதவி கட்டாயம் தேவை. மலசல கூடத்திற்கு செல்வதாயினும் அவர்களுக்கு அமைச்சுப் பதவி தேவை.

வாக்குகளை பெற்றுக்கொள்

வதற்காகவே அவர்கள் இவ்வாறு செயற்படுகின்றார்கள். மக்களை அந்தளவிற்கு கீழ் மட்டத்தில் வைத்துள்ளார்கள்.

ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளதாக அங்குமிங்கும் கேள்விப்படுகின்றோம்.

ஆனாலும் மீண்டும் திருடன் வருவதற்கு இடமளிக்க முடியாது' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

நினைவுப் பேருரை

(கொடிகாமம்)

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் வே.பாலசுப்பிரமணியம் அமரத்துவமெய்திய இருபத்தெட்டாவது ஆண்டு நிறைவாக நடத்தும் நினைவுப் பேருரை எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் மா.தவயோகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான தொழில்நுட்ப பீடங்கள் முன்னாள் பீடாதிபதி கணிதப் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா கலந்து கொண்டு வாழ்வின் ஆதாரங்கள் எனும் தொனிப் பொருளில் நினைவுப் பேருரையையும் நிகழ்த்தவுள்ளார். (5-114)

தொடர்மாடி வீடுகளின் (Condominium) கூட்டுச் சொத்துரிமையும் அதன் பராமரிப்பும்

13

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



❖ கிடைப்படம் (Ground Plan):- இது ஒரு சாதாரண நில அளவைப் படத்தில் காட்டப்படும் காணியின் எல்லைகள், கட்டட அமைவுகள், மற்றைய தகவல்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ள படமாகும்.

❖ ஒவ்வொரு உப-பிரிவிடப்பட்ட கட்டடப்பகுதிகளினதும் நிலைக்குத்துப்பகுதி **(vertical section).**

❖ பொதுவான அம்சங்கள் **(Common elements).** துணையலகுகள் **(accessory units)** ஆகியவற்றைக் காட்டுகின்ற உப-பிரிவிடப்பட்ட ஒரு தனியலகுக் குரிய படம்.

❖ கிடைப்படம் சம்பந்தமான விபரப்பட்டியல்

❖ தனியலகு சம்பந்தமான (அலகு இலக்கம், நிலப் பரப்பு போன்ற) விபரப்பட்டியல்.

❖ துணையலகுகள் சம்பந்தமான விபரப்பட்டியல்.

❖ பங்கு மதிப்பு **(Share Value)** சம்பந்தமான விபரப்பட்டியல்.

❖ பொதுவான அம்சங்கள் சம்பந்தமான விபரப்பட்டியல் என்பவையாகும்.

❖ இது சம்பந்தமான மேலதிக தகவல்கள் தேவைப்படின் கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகார சபையின் இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.

அரை கூட்டுரிமைப் படம் (Semi Condominium Plan)

அரை கூட்டுரிமைப் படம் **(Semi Condominium Plan)** என்பது அரை கூட்டுரிமை **(semi Condominium Property)** ஆதனத்திற்கான படமாகும். இதில் கொடுக்கப்பட வேண்டிய தகவல்கள் 2003 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க இருபிடிக்கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 5B இல் கொடுக்கப்பட்டுள்ளன.

முன்னேற்பாட்டுக் கூட்டுரிமைப் படம் (Provisional Condominium Plan)

முன்னேற்பாட்டுக் கூட்டுரிமைப் படம் **(Provisional Condominium Plan)** என்பது முன்னேற்பாட்டுக் கூட்டுரிமை **(Provisional Condominium Property)** ஆதனத்திற்கான படமாகும். இதில் கொடுக்கப்பட வேண்டிய தகவல்கள் 2003 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க இருபிடிக்கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 5A இல் கொடுக்கப்பட்டுள்ளன.

கொழும்பின் நகரின் மூலை முடக்கு எல்லாம் உயர்ந்த கட்டடங்கள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. தற்போது கொழும்பில் உள்ள ஒவ்வொரு நிலமும் தொடர்மாடி குடியிருப்புக்களுக்கும் மற்றும் பிற உயரமான கட்டடங்களுக்கும் ஒதுக்கப்படுகின்றன. ஆனால் பல கட்டடங்கள் அல்லது பல கட்டடங்களின் ஒரு பகுதி சரியான் முறையில் அனுமதி பெறாமலும் கட்டப்பட்டுள்ளன. அவ்வாறு கட்டப்பட்ட சில கட்டடங்கள் உடைந்து விழுந்திருப்பதை நீங்கள் கேள்விப்பட்டிருப்பிர்கள். உதாரணமாக இரு வருடங்களுக்கு முதல் வெள்ளவத்தையில் ஒரு தொடர்மாடி விழுந்து பல உயிர்களைக் காவுகொண்டது. ஒரு தொடர்மாடி கட்டடம் கட்டி முடித்தபின் அது காணிப் பதிவு அலுவலகத்தில் பதியப்பட வேண்டும்.

அவ்வாறு காணிப் பதிவு அலுவலகத்தில் பதிவதற்கு உள்ளூராட்சி சபையிடம் / நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் COC பெறப்படல் வேண்டும். COC பெறுவதற்கு கட்டடத்தின் நிர்மாணம் அனுமதிக்கப்பட்டுள்ள முறையில் நடைபெற்றுள்ளது என்பதை உறுதிப்படுத்த பல நிறுவனங்களிடம் இசைவுச் சான்றிதழ்கள் பெறப்படல் வேண்டும். இவ்வாறு பல நிறுவனங்கள் தொடர்புபட்டிருப்பதால் அனுமதி பெறுதல் இலகுவான காரியமல்ல. இதனால் பல தொடர்மாடி கட்டடங்கள் ஆவணம் அற்ற அடிப்படையில் ('No document' basis) கட்டப்பட்டுள்ளன.

2003 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க இருபிடிக் கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தச்) சட்டத்தில் **(Apartment Ownership (Amendment) Act; No. 39 of 2003)** கூட்டுரிமை ஆதனம் **(condominium property)** மூன்று வகையாக வகுக்கப்பட்டு பதிவாளர் நாயகத்தினால் பதிவு செய்யப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அவையாவன:

❖ கூட்டுரிமை ஆதனம் **(condominium property).** இதன்படி ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டுள்ள இருப்பிடிக் கூறுகளின் சொத்துரிமைகள் பதிவு செய்யப்படுகின்றன.

❖ அரை கூட்டுரிமை ஆதனம் **(semi condominium property).** இதன்படி ஓரளவு கட்டி முடிக்கப்பட்டதும் மிகுதி கட்டப்படவுள்ளதுமான இருப்பிடிக்கூறுகளின் சொத்துரிமைகள் பதிவு செய்யப்படுகின்றன.

❖ முன்னேற்பாட்டு கூட்டுரிமை ஆதனம் **(provisional condominium property).** இதன்படி கட்டுவதற்கு முன்னேற்பாடாக ஒதுக்கப்பட்டிருக்கும் இருப்பிடிக்கூறுகளின் சொத்துரிமைகள் பதிவு செய்யப்படுகின்றன.

காணிப் பதிவாளர் நாயகத்தில் பதிவு செய்ய முதல் கூட்டுரிமை ஆதன அதிகாரசபையில் அனுமதிச் சான்றிதழ் பெறப்படல் வேண்டும்.

தேவையான நிறுவனங்களிலிருந்து அனுமதிகள் பெறப்பட்டபின் ஒரு நொத்தாரிசு மூலம் உறுதிப் பத்திரம் எழுதப்பட்டு அது காணிப் பதிவு அலுவலகத்தில் பதியப்பட வேண்டும். கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் அனுமதி பெறுவதற்கான நடைமுறைகள் மற்றும் காணிப்பதிவு என்பவை படம்-1 மற்றும் படம்-2 இல் காட்டப்பட்டுள்ளன.

கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகார சபையில் சான்றிதழ் பெற விண்ணப்பம் சமர்ப்பித்தல்
படம்-1



முன்னர் கூறியது போல, கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் **(CMA)** அனுமதி பெறுவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து ஆரம்ப திட்டவரைபு இசைவுச் சான்றிதழ் **(Preliminary Planning Clearance from UDA)** பெறப்படல் வேண்டும். இச் சான்றிழ் பெறுவதற்கு கூட்டுரிமை ஆதன (நில அளவைப்)படம், காணியின் உறுதி, கட்டுடக்கலைவரைபடம் **(architectural design)** போன்ற ஆவணங்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதிபெற்றபின் உள்ளூராட்சி சபையின் அனுமதியைப்பெற்று பின்வரும் ஆவணங்களுடன் விண்ணப்பத்தை (3 பிரதிகளில்) கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

❖ கூட்டுரிமை ஆதன நில அளவைப்படம் / **Condominium (survey) plan**

❖ கட்டடத்திற்கான அனுமதி / **Approval of the building**

❖ கட்டடக்கலைவரைபடம் / **Architectural drawing**

❖ கட்டடப்பொறியியலாளர் சான்றிதழ்/**Structural engineering certificate.**

❖ மின் பொறியியலாளர் சான்றிதழ் / **Electrical engineering certificate.**

❖ தீ அணைப்புப் படையின் சான்றிதழ் / **Fire certificate (approved by the Fire Brigade)**

கூட்டுரிமைப் படத்தின் கட்டமைப்பு
Structure of Condominium Plan



❖ மின் பொறியியலாளர் சான்றிதழ் / **Electrical engineering certificate.**

❖ தீ அணைப்புப் படையின் சான்றிதழ் / **Fire certificate (approved by the Fire Brigade)**

(தொடரும்...)

செப்டெம்பர் 7 மாபெரும் எழுச்சிப் பேரணி

கட்சி பேதங்களை மறந்து அனைவரும் அணி திரளுங்கள்

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் செப்டெம்பர் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி குறித்து தமிழ் மக்கள் பேரவை நேற்றைய தினம் வெளியிட்ட ஊடக அறிக்கை இங்கு அப்படியே தரப்படுகிறது. (ஆ-ர்)

தமிழ் மக்கள் பேரவை அறைகூவல்

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் செப்டெம்பர் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி தமிழினத்தின் அவலத்தையும் பேரினவாத சக்திகளின் கபடத்தனத்தையும் உலகறியச் செய்கின்ற மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டமாகும்.

இலங்கை மண்ணில் பெரும்பான்மை இனத்தின் ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை ஏமாற்றி காலம் கடத்துகின்ற தந்திரோபாயத்தைத் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றனர்.

வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்தேறிய யுத்தம் தமிழின அழிப்புக்கானது என்பதைச் சர்வதேச சமூகம் ஏற்றுள்ள போதிலும் தமிழினத்திற்கு ஏற்பட்ட பேரிழப்புகளுக்கும் அவலங்களுக்கும் இன்னும் நீதி கிடைக்கவில்லை என்பதை நடுநிலை கொண்ட எவரும் ஏற்றுக்கொள்வர்.

நல்லாட்சியில் இனப் பிரச்சினைக்கான தீர்வு காணப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. ஆனால் எதுவுமே நடந்தாகவில்லை. மாறாகப் புதுப் புதுப்பிரச்சினைகளை உருவாக்கி, அவற்றின்பால் தமிழ் மக்களைத் திசை திருப்பி தமிழ் மக்களை உளவியல் ரீதியில் தாக்குகின்ற மிக மோசமான நடவடிக்கைகளை பேரினவாத ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் செய்து கொண்டே இருக்கின்றனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்று கூறி முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தமும் அப்படியே நின்று போயிற்று. அரசியலமைப்புச் சீர்திருத்தம் அமுலாகினால் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்று நம்பிய தமிழ் அரசியல் தரப்புகளும் இப்போது கைவிரித்து, இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ்மக்களை ஏமாற்றிவிட்டனர் என்ற உண்மையைப் பகிரங்கமாக ஏற்றுள்ளன.

இவைதவிர, காணாமல் போனவர்களின் உறவுகள் இன்றுவரை தங்கள் உறவுகள் எங்கே?, அவர்களுக்கு நடந்தது என்ன? என்று கேட்கின்றனர். மனிதவுரிமைகள் பற்றி அதிகமாகப் பேசப்படுகின்ற சமகாலத்தில்; காணாமல் போன எங்கள் தமிழ் உறவுகளுக்கு நடந்தது என்ன? என்பதைக் கூட அறிய முடியாத அளவில் எங்கள் அவலங்கள் அவதானிக்கப்படாதவையாக ஆக்கப்பட்டுள்ளன.

ஆட்சியாளர்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களின் தமிழின விரோத செயற்பாடுகளைக் கண்டும் காணாமல் விடுகின்ற துர்ப்பாக்கிய நிலைமை சர்வதேச சமூகத்திடம் இருப்பது வேதனைக்குரியது.

ஆயினும் இத்தகையதோர் நிலைமைக்குப் பின்னால், பேரினவாத ஆட்சியாளர்கள் தொடர்ந்து செய்து வருகின்ற அதர்மங்களும் அட்டூழியங்களும் வலுவான முறையில் சர்வதேசத்தின் பார்வைக்கும் கவனத்திற்கும் முன்வைக்கப்படவில்லை என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இவைதவிர, தமிழ் அரசியல் கைதிகள் தங்கள் விடுதலைக்காக எத்தனையோ தடவைகள் உண்ணாவிரதப் போராட்டங்களை சிறைகளில் முன்னெடுத்தனர். ஆனால் இன்றுவரை அவர்களுக்கு விடுதலை வழங்கப்படவில்லை என்றால், எங்கள் தொடர்பில் இலங்கை ஆட்சியாளர்களின் நிலைப்பாடு எவ்வாறாக உள்ளதென்பதை எவரும் புரிந்து கொள்ளமுடியும்.

இவையாவற்றுக்கும் மேலாக, தமிழர்களின் வரலாற்றுப்பெருமைமிக்க இடங்களை ஆக்கிரமிப்பதும் பௌத்த விகாரைகளை அமைப்பதும் அதனூடு தமிழர்களின் வரலாற்றுச் சான்றாதாரங்களை அழிப்பதும் குறித்த இடங்களில் ஏலவே பௌத்த விகாரைகள் இருந்துள்ளன என்றும் அவை பௌத்த சிங்கள வரலாற்றிடங்கள் என்றும் பொய்ப்பிரசாரம் செய்கின்ற கொடுமைத்தனம் வேகமாக அரங்கேற்றப்பட்டு வருகிறது.

இதன் உச்சமே கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் இருந்த பிள்ளையார் ஆலயத்தை உடைத்து பௌத்த விகாரை அமைக்கின்ற நடவடிக்கையாகும்.

இந்நிலையில் தடுக்கவும் தட்டிக்கேட்கவும் தமிழர்கள் நாதியற்றவர்கள் என்று நினைக்கும் பேரினவாதத்திற்குப் பதிலடி கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

அதிலும் ஒட்டுமொத்தத் தமிழ்மக்களும் ஒன்றுபட்டு தங்கள் உரிமைக்காகப் பேரெழுச்சி கொண்டெழுவர் என்பதை உலகிற்கு உறுதியாகச் சொல்ல வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம்.

இந்நிலையில் எமக்குள் இருக்கக்கூடிய அகமுரண்பாடுகளைத் தூக்கியெறிந்துவிட்டு அரசியல் பேதங்களை மறந்து, எம் தமிழினம் சுதந்திரத்தோடும் உரிமையோடும் வாழவேண்டும்; எங்கள் இனத்திற்கு அவலம் இழைத்தவர்கள் தண்டனை பெற வேண்டும்; இன்றுவரை கண்ணீரும் கம்பலையுமாய் அலையும் எங்கள் உறவுகளின் துயரம் தீர்க்கப்படவேண்டும்; தமிழர் தாயகம் ஆக்கிரமிப்பற்ற தமிழர் தேசமாக எழுந்து நிற்கவேண்டும் என்ற ஒரே இலக்குடன் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு செப்டெம்பர் 7 ஆம் திகதி நடைபெறும் மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணியில் பங்கேற்க வேண்டுமென தமிழ்மக்கள் பேரவை அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றது.

நமக்கிடையே இருக்கின்ற அரசியல் பேதங்களும் ஒற்றுமையீனங்களும் கருத்து மோதல்களும் எங்கள் இனத்திற்கு ஆபத்தாக முடியுமென்பதால், மீண்டும் மீண்டும் நாம் கேட்பது அரசியல் பேதங்களை மறந்து தமிழ் அரசியல் கட்சிகள் அத்தனையும் ஒன்றுபட்டு, மக்கள் இயக்கமாகிய தமிழ் மக்கள் பேரவை முன்னெடுக்கும் மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணியில் பங்கேற்க வேண்டும் என்பதாகும்.

இந்த ஒற்றுமை ஒட்டுமொத்தத் தமிழ்மக்களையும் பேரணியில் பேரலையாக ஒன்றுபட வைக்கும் என்பது எம் அசைக்க முடியாத நம்பிக்கை.

எதிர்வரும் செப்டெம்பர் 7 ஆம் திகதி வடக்கு-கிழக்கு உள்ளிட்ட தமிழர் தாயகம் தழுவியதாக யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணியில் தமிழ் மக்களின் மிகப்பெரும் சக்திகளாக இருக்கின்ற அனைத்துப் பொது அமைப்புக்கள், சமூக நிறுவனங்கள், மதபீடங்கள், மாணவர் அமைப்புகள், தொழிற்சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், விவசாய, கடற்றொழில் சங்கங்கள், சமாசங்கள் என அனைத்து அமைப்புகளும் ஒன்றாகத் திரண்டெழுந்து தமிழர்களின் எழுச்சிப் பிரவாகத்திற்கு உத்வேகம் கொடுக்க வேண்டும்.

இவற்றுக்கு மேலாக, தமிழ் இனத்திற்கு இழைக்கப்படும் அநீதி கண்டு கொதிப்படைகின்ற முற்போக்கு சக்திகள் சிங்கள- முஸ்லிம் சகோதரர்களிடம் இருக்கவே செய்கின்றன.

எனவே தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்கின்ற சிங்கள, முஸ்லிம் முற்போக்கு அமைப்புக்கள் செப்டெம்பர் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணிக்குத் தங்கள் தார்மீக ஆதரவை வழங்குவதோடு அவர்கள் கலந்து கொள்ளவும் வேண்டுமென இச் சந்தர்ப்பத்தில் தமிழ்மக்கள் பேரவை கேட்டு நிற்கிறது.

அன்பார்ந்த தமிழ்மக்களே, பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பு தமிழர் தாயகத்திற்குள் ஊடுருவி விட்டது. ஏற்கனவே படைத்தரப்பால் ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களை விடுவிக்க மனமின்றி காலம் கடத்தப்படுகிறது.

இந்த வேளையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு பேரணியாக எழுச்சிபெற்று எங்கள் அவலத்தை உலகறியச் செய்வோம். இது தமிழினம் வாழ்வதற்கான எழுகை.

உங்கள் ஒவ்வொருவரின் வரவும் நிச்சயம் சர்வதேச சமூகத்திடம் மிகப்பெரும் கவனயீர்ப்பை ஏற்படுத்தும் என்பதால் செப்டெம்பர் 7 ஆம் திகதி பேரலையாய் எழுந்து பேரணியில் கலந்து கொள்ளுங்கள் என தமிழ் மக்கள் பேரவை உங்களை அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றது.

வடக்கு - கிழக்கில் 1000 விகாரைகள் அமைக்க 2 கோடி ரூபா கப்பம் வாங்கிய கூட்டமைப்பு

டக்ளஸ் எம்.பி. பகிரங்கக் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று வலிகாமம் வடக்குதையிட்டி பிரதேசத்தில் தனியார் காணியில் பாரிய பௌத்த விகாரை அமைக்கப்படுகின்றது.

(யாழ்ப்பாணம்)

கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் வடக்கு-கிழக்கில் 100 விகாரைகள் அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்த போதும் அதற்கு எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காது 2 கோடி ரூபா இலஞ்சம் வாங்கி அந்த வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்கியிருந்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி.பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார்.

இதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கண்டுகொள்ளாது மௌனம் சாதித்து வருகின்றனர். கடந்த வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த கூட்டமைப்பினர் எவ்வாறு விகாரை விடயத்தில் எதிர்ப்புத் தெரிவிக்க முடியும். அதனாலேயே இவ்வாறு வடக்கில் ஆங்காங்கே இருந்த நிலை மாறி இன்று பரவலாக பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தொல்பொருள் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இவ்வாறு முளைத்துவரும் விகாரைகள் தொடர்பில் மக்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகின்ற போதிலும் அதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

காரணம் ஆராயப்படுகின்ற போது வரவு-செலவுத் திட்டத்தில் விகாரை கட்ட ஆதரவு தெரிவித்தவர்கள் எவ்வாறு அதை தடுப்பது என்கின்ற தடுமாற்றத்தில் உள்ளதை அவதானிக்க முழுகின்றது. எனவே இதற்கான முழுப்பொறுப்பையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஏற்க வேண்டும்.

மேலும் ஊடகங்கள் கண்ணாடி போன்று பிரதிபலித்தால் அடுத்த ஐந்து ஆண்டுகளில் தமிழ் மக்களின் அரசியல் உரிமை பிரச்சினையில் கணிசமானவற்றுக்கு தீர்வை எட்டிக் காட்டுவேன்.

ஊடகங்கள் உண்மைத் தன்மையுடன் உள்ளதை உள்ளபடி வெளிக்கொண்டு வருவதுடன் மக்களுக்கு சரியான வழிகாட்டுதல்களையும் வழங்க வேண்டும். அதேபோன்று உள்ளதை உள்ளபடி என்கின்ற போது குறிப்பாக கண்ணாடி போன்று செயற்பட வேண்டும்.

அதாவது சம்பவங்களையோ அல்லது செயற்பாடுகளை உள்ளபடி எடுத் துக் கூறாது இருட்டடிப்பு அவ தூறுகள் செய்வதைத் தவிர்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1790

Search for people, places and things

அஜய்

வாழ்க்கை எனக்கு சொல்லிக்கொடுத்தது இதுதான்... எப்போதும் நல்லவனாக மட்டுமே இருந்துவிடாதே.. கொஞ்சம் கெட்டவனாகவும் இருக்கப் பழகிக்கொள் அப்போதுதான் இந்த உலகம் உன்னை மதிக்கும்

மிதுன்

இருக்கிறதை வைச்சு சந்தோசப்பட்டுக்கிறது என்பது இதுதான்



கவின்

இளவரசி

சிலரின்
அன்பு
வார்த்தையில்
மட்டுமே
உள்ளது
அவர்களின்
செயல்களிலும்
மனதிலும்
இல்லை

அன்பரசி

பேருந்தின் கடைசி சீட்டைப் போலவே வாழ்க்கை திடீர் திடீரென்று தூக்கி அடிக்கிது

இளங்கோ

சில நேரங்களில் அடுத்தவர்களை எதிர்பார்ப்பதைவிட நம் வழியில் நாம் தனியாகச் செல்வதே சிறந்தது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

வெள்ளி விழா கண்ட யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 26 ஆவது வருடாந்த ஆய்வு மாநாடு நாளை ஆரம்பம்

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கமானது 1991 இல் அப்போதைய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரும் புகழ்பூத்த விஞ்ஞானப் பேராசானுமான பேராசிரியர் அழகையா துரைராஜாவின் எண்ணக்கருவில் அவராலும் அவரது சககால பல்கலைக்கழக பேராசிரியர்களாலும் உருவாக்கப்பட்டது. இச்சங்கத்தின் முதல் தலைவராகவும் பேராசிரியர் துரைராஜாவே தெரிவு செய்யப்பட்டார்.

யாழ்ப்பாண பிரதேசத்தில் விஞ்ஞான அறிவைப்பரப்புவதையும் விஞ்ஞான ரீதியிலான சிந்தனைகளை ஊக்குவிப்பதற்காகவும் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்தில் தூய விஞ்ஞானம், பிரயோக விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் மருத்துவ விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் என்று 4 உட்பிரிவுகள் உண்டு. ஒவ்வொரு உட்பிரிவும் தம்மளவில் பிரிவுத்தலைவர், செயலாளர், பத்திராதிபர் மற்றும் ஆறு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு நிர்வாக சபைக் கட்டமைப்பைக் கொண்டு விஞ்ஞான சங்கத்தின் எண்ணக்கருவை நிறைவேற்ற அயராது செயற்பட்டு வருகின்றன.

இவற்றுக்கு மேலதிகமாக விஞ்ஞான சங்கத்துக்கு ஒரு நிர்வாக சபை உள்ளது. அச்சபையில் தலைவர், கடந்த வருடத்தலைவர், அடுத்த வருடத் தலைவர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர், உப பொருளாளர், பத்திராதிபர் ஆகியோருடன் 4 பிரிவுகளின் பிரிவுத்தலைவர்களும் அங்கம் வகிப்பர்.

சங்கத்தின் ஆரம்ப காலம் முதலே மேற்படி நிர்வாகசபைக் கட்டமைப்பின் கீழ் இயங்கிவரும் விஞ்ஞான சங்கத்தில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மட்டுமன்றி பாடசாலை ஆசிரியர்கள், துறைசார் வல்லுநர்கள் மற்றும் ஆர்வலர்கள் எனப்பலரும் ஆயுட்கால அங்கத்தவர்களாக உள்ளனர்.

இதற்கு மேலதிகமாக மாணவர்களுக்காக மாணவர் அங்கத்துவமும் வழங்கப்படுகின்றது.

தனது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக கடுமையாக உழைத்து வருகின்றது. அதற்காக இச்சங்கம் பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்காக துறைசார் வல்லுநர்களின் பேருரைகளை காலத்துக்குக் காலம் நடத்தி வருகின்றது.

மேலும் பாடசாலை மாணவருக்கும் ஆசிரியர்களுக்கும் உதவும் முகமாக விஞ்ஞான ஆய்வுகூடப் பரிசோதனைகள், பாடத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள், பாடவிடயங்கள் தொடர்பான தெளிவூட்டல் நிகழ்வுகள் என்பவற்றை நடத்தி வருகின்றது.

சமூகத்துக்கு விஞ்ஞான அறிவைப் பரப்பும் முகமாக யாழ்ப்பாணத்தில் வெளிவரும் வலம்புரி நாளேட்டில் வாராந்தம் சுவாரஸ்யமான விஞ்ஞான கட்டுரைகளை வெளியிடுவதுடன் வாசகர்களுக்கிடையில் அது தொடர்பில் போட்டிகளை நடத்தி பரிசில்களையும் வழங்கி வருகின்றது. அத்துடன் விஞ்ஞான சங்கம் வருடாந்தம் "யாழின் தேடல்" மற்றும் "பிரயோக விஞ்ஞானச் சுடர்" என்ற இரண்டு விஞ்ஞான சஞ்சிகைகளையும் விஞ்ஞான சங்கத்தின் செய்திகள், செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் மற்றும் பயனுள்ள ஆக்கங்களை கொண்ட ஐந்து செய்தி மடல்களையும் வெளியிட்டு வருகின்றது.

பாடசாலை மாணவர்களிடத்தில் விஞ்ஞான ஆர்வத்தினை ஊக்குவிக்கும் முகமாக வருடாந்தம் "ரட்ணம் பவுண்டேசன், ஜக்கிய இராச்சியம்" முழுமையான நிதி அனுசரணையில் பாடசாலை விஞ்ஞான நிகழ்வுகளை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடத்தி வருகின்றது.

இந்நிகழ்வுகளில் வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கு இடையில் விஞ்ஞான கண்காட்சி, சுவரொட்டி வரைதல், விஞ்ஞான விநாடி வினா, பாடசாலைத் தோட்டம், இயற்கைக் கையேடு மற்றும் தமிழ், ஆங்கில மொழி பேச்சுப்போட்டி ஆகிய போட்டிகள் வெவ்வேறு வயதுப் பிரிவு மட்டங்களில் நடத்தப்படுகின்றன.

விஞ்ஞான சங்கத்தின் செயற்பாடுகளில் முத்தாய்ப்பானது அதனுடைய வருடாந்த ஆய்வு மாநாடாகும். வருடாந்தம் மே மாதத்தில் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் நடைபெறும் இந்நிகழ்வில் விஞ்ஞானத்தின் சிறந்த சமூகநலன் சார்ந்த ஆய்விற்கான பேராசிரியர் கந்தையா பாலசுப்ரமணியம் ஞாபகார்த்த தங்கப்பதக்கம் வழங்கப்படும். அதனை தொடர்ந்து பல்வேறு துறைசார் பேருரைகள், கலந்துரையாடல்கள் மற்றும் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிப்புகள் என்பன இடம்பெறும்.

இறுதி நாளில் விஞ்ஞான சங்கத்தின் நான்கு பிரிவுகளுக்குமான தனித்தனி பொதுக்கூட்டமும் தொடர்ந்து சங்கத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டமும் இடம்பெறும். மாலை நிகழ்வில் புதிய தலைவரின் பேருரையைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கலும் இடம்பெறும்.

இவ்வருடத்துக்கான 26ஆவது ஆய்வு மாநாடு மே மாதத்தில் இருந்த நாட்டு சூழ்நிலை காரணமாக ஜூலை 31, ஓகஸ்ட் 1,2 ஆகிய திகதிகளுக்கு பிற்போடப்பட்டது.

இம்முறை பேராசிரியர் பாலசுப்ரமணியம் விருது, நுளம்புகள் ஊடாக கடத்தப்படும் நோய்கள் தொடர்பான ஆய்வுகளை சிறப்பாக மேற்கொண்டு வரும் யாழ்.பல்கலைக்கழக விலங்கியல் துறை பேராசிரியர் சின்னத்தம்பி நோபிள் சுரேந்திரனுக்கு வழங்கப்படுகின்றது. நிகழ்வில் கணிதத்துறை பேராசிரியரும் யாழ்ப்பாண விஞ்ஞானச்சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினருமான பேராசிரியர் சிறிசற்குணராஜா விருது பெறுபவரை அறிமுகப்படுத்தி உரையாற்ற, தொடர்ந்து பேராசிரியர் நோபிள் சுரேந்திரன் விருது பெறும் தனது ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிப்பார்.

தொடர்ந்து விஞ்ஞானச்சங்கத்தின் வருடாந்த வெளியீடுகள் வெளியிட்டு வைக்கப்படும்.

தொடர்ந்து நடைபெறும் நிகழ்வுகளில் விஞ்ஞான சங்கத்தின் பிரிவுத் தலைவர்களின் தலைவர் உரைகளும் அழைக்கப்பட்ட துறைசார் வல்லுநர்களின் பேருரைகளும் இடம்பெறும். இரண்டாம் நாள் பகல் நிகழ்வாக "பசுமை எண்ணக்கரு ஊடாக தரமான வாழ்க்கையையும் நிலைபேண்தகு அபிவிருத்தியும்" என்ற தலைப்பில் சிறப்பு அழைப்பாளர்களின் உரைகளும் கலந்துரையாடல் நிகழ்வுகளும் இடம்பெறும். மாலை நிகழ்வாக அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளின் சமர்ப்பணம் இடம்பெறும். சமநேரத்தில் ஏழு இடங்களில் இடம்பெறும் இந்நிகழ்வில் 63 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இவ் ஆய்வுக்கட்டுரை சுருக்கங்களும் மற்றும் நிகழ்வில் நிகழ்த்தப்பட்ட உரைகளும் விஞ்ஞானச்சங்கத்தின் வருடாந்த ஆய்வு மாநாட்டு வெளியீடாக வெளியிடப்படும்.

வெள்ளிக்கிழமை காலை விஞ்ஞானச்சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இடம்பெறும். வழமையான அறிக்கை சமர்ப்பிப்புக்களைத் தொடர்ந்து 27ஆவது நிர்வாகசபையும் பிரிவுகளுக்கான நிர்வாகசபையும் தெரிவு செய்யப்படும்.

பிற்பகல் நிகழ்வில் விஞ்ஞானச் சங்கத்தின் 27ஆவது தலைவரின் தலைமை உரை இடம்பெறும். அதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட ஆங்கில மற்றும் தமிழ்மொழி மூலமான பேராசிரியர் கந்தையா குணரத்னம் ஞாபகார்த்த தங்கப்பதக்கத்துக்கான பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் உரைகள் இடம்பெறும். தொடர்ந்து பரிசில் பெற்ற பாடசாலை மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

இவ்வருடத்துக்கான பிரதான நிகழ்வுகள் யாழ்.பல்கலைக்கழக நூலக மண்டபத்திலும் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிப்பு நிகழ்வுகள் பல்கலைக்கழக பிரதான வளாகத்தின் வெவ்வேறு இடங்களிலும் நடைபெறும். பாடசாலை மாணவர்கள், ஆர்வலர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் என்று அனைவருக்கும் பயன்தரக்கூடிய இந்த நிகழ்வில் கலந்து பங்குபற்றுமாறு அனைவரையும் யாழ்ப்பாண விஞ்ஞானச்சங்கம் அழைக்கிறது.

கலாநிதி.இ.பிரசாந்தன்
செயலாளர்,
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்

48 மருந்துகளின் விலை குறைப்பு-ராஜித

(கொழும்பு)

முதல் கட்டத்தின் கீழ் 48 அத்தியாவசிய மருந்து வகைகளுக்கு விலை ஒழுங்குறுத்தலை மேற்கொண்டதன் மூலம் 3,600 ரூபாவாக இருந்த மருந்து ஊசியின் விலை 400 ஆல் குறைவடைந்துள்ளது.

தனியார் துறைகளில் மருந்து வகைகளின் விலைகளில் கொள்வனவு செய்வதில் பாரிய நிவாரணம் பொதுமக்களுக்குக் கிடைத்திருப்பதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

சுபாரதி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மருந்து வகைகளின் விலை

கள் குறைக்கப்பட்டதனால் இறக்குமதிச் செலவை 9,200 மில்லியன் ரூபாவாக குறைக்க முடிந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்மூலம் பொதுமக்களுக்கு வருடாந்தம் 4400 மில்லியன் ரூபாய் பெறுமதியான பயன்கள் கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

நுண்கடனால் 16 தம்பதிகள் விவகாரத்துப்பெறும் நிலை

பிரதேச செயலர் அதிர்ச்சித் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் முறையற்ற நுண்கடன் திட் டத்தால் 16 தம்பதிகள் விவகாரத்துப் பெறும் நிலையில் உள்ளதாக கரவெட்டிப் பிரதேச செய லர் எஸ்.தயாரூபன் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார். யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தகவல் வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் செயற்படும் சில நுண்நிதி நிறுவனங்கள் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தையும் குடும்ப வருமான நிலையையும் பார்க்காது கடன்களை வழங்கிச் செல்வதாகவும் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத குடும்பங்களால் பாலியல் இலஞ்சம் பெறப்படும் சம்பவங்கள் பல இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

நுண்கடனைப் பெற்றுத் திருப்பிச் செலுத்த முடியாத 16 குடும்பங்களைப் பார்க்கும் போத 32 வயதிற்குட்பட்டவர்களே குடும்பத் தலைவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் கடந்த வாரம் அள வெட்டிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட நிதி நிறுவனங்களை அழைத்து பொதுமக்களுக்கு கடன் வழங்கும் போது கிராம உத்தி யோகத்தரின் அனுமதியைக் கட்டாயம் பெற வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப் பட்டதாகவும் அதனை அவர்கள் ஏற்கத் தயார் எனவும் தெரிவித்ததாக பிரதேச செயலர் தெரிவித்தார்.

எனவே நுண்கடன் வழங்கும் நிதி நிறுவனங்கள் தொடர்பில் மாவட்ட மட்டத்தில் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டுமெனப் பிரதேச செயலர் கோரிக்கை முன்வைத்தார். (இ-10)

வீதம்பட்டி வேலூர் சந்தை கதைகேளு! தானாக சிரிப்பாய்



தெற்க செமதாங்கியில இருந்து வடக்கு ஜக்கார் பாளையம் போற இட்டேரி வரைக்கும் ரெண்டு மைல் தூரம், மேற்க வீதம்பட்டி இட்டேரில இருந்து கிழக்க புதூர் போற இட்டேரி வரைக் கும்னு ரொம்பப் பெரிய ஊர் வேலூர்.

மேற்கயே கொஞ்சம் தெற்க சாஞ்சாப்புல போனா வீதம்பட்டி, கொஞ்சம் வட க்க சாஞ்சாப்புல போனா ஜக்கார் பாளையம். கிழக்க சலவநாய்க்கன்பட்டிப் புதூர், கிழக்கயே கொஞ்சம் பக்க வாட்டில போனா வாகத் தொழுவு, சங்கமநாய்க்கன் பாளையம், அரசூர்னு பல ஊருகளுக்கு நடுவில சிற ப்பா இருக்குற ஊருதான் வேலூர்.

அந்த வழியா செஞ்சேரி மலைக்குப் போன வேல வன், இந்த ஊர் இருக்கிற இடத்தில தன்னோட வாக னமான மயிலை விட்டு இறங்கி தன்னோட வேலை யும் நட்டு வச்சுட்டு, சுத்து பத்து கிராமத்தைச் சேர்ந்த வியளுக்கு அருள்பாலிச் சதாகவும் அதனாலதான் இந்த ஊருக்கு வேலூர்னு பேர் வந்ததாகவும் ஒரு ஐதீகம்.

ஊருக்குள்ள ஏராளமான அரசமரம், வேப்பமரம், புளியமரம், புங்கமரம், ஆலமரம், ஆவரம்பூனு, ஒரே பசுமையாவும் பொலி வாவும் களைகட்டி இருக் கும் இந்த ஊர். தலைவா சல்ல இருக்குறது பெரிய விநாயகர் கோயில். முன் னாடி பெரிய மைதானம். மைதானத்தில அரசமரம், வேப்பமரம் ஒன்றா வள ர்ந்து இருக்குற ரெண்டு மேடைக. ஊர்சனங்க எல் லாம் ஒன்று விநாயகர் கோயில் திண்ணையில, இல்லாட்டி இந்த மேடை யிலதான் இருப்பாங்க. எப்ப வும் நிழலும் காற்றுமா குளு மையா இருக்கும் அந்தக் கோயிலடி.

கோயிலுக்கு வலதுபுறம் சந்தைப்பேட்டை. சுத்து பத்து கிராமங்களுக்கும் வாரா வாரம் திங்கட்கிழமை, இங்கதான் சந்தை. கோயி லுக்கு இடது புறம், திண் ணைப் பள்ளிக்கூடமா இரு ந்து வளர்ந்து இருக்குற பள் ளிக்கூடம். அந்தக் காலத் தில எல்லாம் பட்டம் படிச்ச வங்களைப் பார்க்கவே முடி யாதாம். ஆனா, இந்தப் பள் ளிக்கூடத்தில படிச்சவங்க அப்பவே பட்டம் வாங்கி இருந்தாங்களாம். அதில தாமோதரசாமி ஐயாவும் ஒருத்தர். "பாம்பைக் கண்டா படையும் நடுங்கும்!" ஆனா, அந்தப் பாம்புகூட தாமோ தரசாமி ஐயாவைக் கண்டா வணக்கம் போடுமாம். அந்த அளவுக்கு அவர் பண்பான வர். ரொம்ப நல்லவர். அப்பேர்ப்பட்ட நல்லவரை பெற்ற ஊர்தான் வேலூர்.

இப்படிப்பட்ட ஊர்ல சரவ ணசாமி ஐயான்னு ஒரு த்தர். அவரும் ரொம்ப நல் லவர், நிறைஞ்ச மனசுக்கு சொந்தக்காரர். தோட்டத்துல குடியிருந்துட்டு விவசாயம் பாக்குறவர். திங்கட்கிழமை ஊருக்குள்ள வந்து தானிய வியாபாரம் பண்ணுற அந்தி யூர் ஐயாகிட்ட, தான் விற்ற இராகி பத்து மூட்டைக்கு உண்டான தொகை ஆயி ரத்து முந்நூறு ரூவாவை வாங்கிட்டு சந்தைக்குப் போறார்.

சரவணன் ஐயாவுக்கு இயற்கையிலேயே குருவி கள், கிளி, மயிலு இப்படி பறவைகன்னா உசுரு. அன் னைக்குப் பாருங்க, அந்த சந்தைக்கு முன்னாடி இருக் குற "அரசமர, வேப்பமர" மேடையில ஒருத்தன் குருவி விற்றுக்கிட்டு இருந்தான். சந்தைக்கு வரப்போக இரு ந்த சனங்களும் கூடி நின்று வேடிக்கை. குருவிக்காரன் ரூபா ஐம்பதுன்னு ஏல த்தை ஆரம்பிச்சான். சரவ ணன் ஐயாவுக்குத்தான் பறவைகன்னா உசுரு ஆச்சே.

"இந்தக் குருவி சாதார ணக் குருவி இல்லீங்கோ, பேசும், பாடும், ஐம்பது ரூபா, ஐம்பது ரூபா!"

கூட்டத்துல இருந்த இனி யொருத்தர், "அறுவது ரூபா!"

சரவணன் ஐயா, "நூறு ரூபா!"

கூட்டத்துல இருந்த வேறொ ருத்தர், "நூற்றி ஐம்பது!"

இப்படியே ஏலம் விறு விறுப்பாப் போச்சு. சந்தை க்கு வந்த சனமெல்லாம் கூடி நின்று வேடிக்கை பாக்குது. சந்தையில பொரி காத்துல பறக்குது. கொய் யாப் பழத்தை, காக்காய்ங்க கொத்தித் திங்குது. ஆனா, விற்று வியாபாரம் பண்ண வந்தவங்க கடைய விட்டுப் போட்டு, இங்க வேடிக்கை பாத்துட்டு இருக்காங்க. அந்த அளவுக்கு ஒரே விறு விறுப்பான ஏலம். ஏலத் தொகை எண்ணூறு ரூபா ஆனவுடனே ஏலம் கேக்குற வங்க எண்ணிக்கை கொற ஞ்சு போச்சு. ரெண்டே பேருதான் இப்ப. அதுல நம்ப சரவணன் ஐயாவும் ஒருத்தர்.

சரவணன் ஐயா, "யார்றா அது, ஏட்டிக்குப் போட்டியா? இந்தா நான் சொல்லுறேன், எண்ணூற்றி ஐம்பது ரூபா!"

ரெண்டொரு நிமிசங் கழி ச்சு, "தொளாயிரம் ரூபா!" சர வணன் ஐயா, "யாரு கிட்ட? இந்தா தொளாயிரத்து ஒன்று!" மறு பக்கத்துல, "தொளாயிரத்து ஐம்பது!"

கோபத்துல சரவணன் ஐயா கூட்டத்தைப் பாத்து, "டேய், நீ யார்றா? வேணாம்! இந்தா சொல்லுறேன் ஆயி ரம் ரூபா!"குருவி விற்க வந்தவன், "சரிங்க ஐயா, கோபப்படாதீங்க... இனி இதுக்கு மேல யாரு எவ் வளவு குடுத்தாலும் குருவி உங்களுக்குத்தான், நீங்க சொன்ன அதே ஆயிரம் ரூபாய்க்கு!"

ஐயாவுக்கு ரொம்ப சந்தோசம். இராகி விற்ற காசில ஆயிரத்த எடுத்து குடுத்துப் போட்டு, குருவிய வாங்கும் போது, "என் னடா, குருவி கொழு கொழு ன்னு நல்லாத்தான் இரு க்கு, பேசுமல்லோ?"குருவி விற்றவன் துண்ட எடுத்து இடுப்புல கட்டிக்கிட்டு பணிவா பௌவ்யமா, "ஐயா, என்ன இப்படிக் கேட்டுப் போட்டீ ங்க? இந்நேரம், உங்ககூட ஏட்டிக்குப் போட்டியா ஏலம் கூவனதே குருவிதானுங்க..."

விடுகதைகளும் விடைகளும்

• எதையும் பேசும் எலும்பில்லாதவன். அவன் யார்?
நாக்கு

• பார்த்தது இருவர், பறித்தது இருவர், ஆனால் சுவைப் பது மட்டும் ஒருவன். அவர்கள் யார்?
கண்கள், கைகள், வாய்

• புகையும் நெருப்பும் இல்லாமல் எரியும். அது எது?
நெஞ்சு எரிச்சல்

• அந்தி வரும் நேரம், அவளும் வரும் நேரம், அவள் யார்?
நிலா

• வான் வழி வருவான், பாதாளம் வழியாய் போவான். அவன் யார்?
மழை

வாழ்க்கை தரும் பாடம்

• எதுவும் சில காலம்தான்.

• எதிர்ப்பார்ப்பை குறைத்துகொ ண்டால் ஏமாற்றம்ஒன்றும் பெரி தாக இருக்காது.

• நம்பு, யாரையும் முழுமையாக நம்பாதே. உன்னை மட்டும் வாழ் வில் நம்பு.

• சிந்தனை செய். கோபப்படாதே.

• வாழ்வது ஒரே ஒரு வாழ்க்கை. அதை அர்த்தமுள்ளதாக வாழ்ந் துவிட்டு போ.

சிந்தனைத்துளிகள்

• உன் மனம் ஒன்றே உன்னை வீழ்த்தக்கூடிய ஒரே ஆயுதம். அது தெளிவாக இருக்கும் வரை யில் நீ ஒருவராலும் வீழ்த்தப்படுவதில்லை.

• உனக்கு நீ நல்லவனாய் இருந்தால்போதும், மற்றவருக்கு நீ கெட்டவனாய் தெரிந்தால் அது உன் குற்றம் இல்லை. கண்ணில் பிழை என் றால் பிம்பமும் பிழையே. அது பார்க்கப்படுபவன் பிழையல்ல, பார்ப்பவன் பிழை.

• யாரை நீ வெறுத்தாலும் உன்னைமட்டுமாவது நேசிக்க கற்றுக்கொள். ஏனெனில் இந்த உலகி லேயே மிக மிகசிறந்த காதல் உன்னை நீநேசிப் பதுதான்.

• இன்பத்திலும் துன்பத்திலும் மனம்விட்டுபேச துணை இல்லாதபோது தான்தெரியும், உண் மையான் அன்பின் பெருமை.

விதைத்துக் கொண்டே இரு. முளைத்தால் மரம், இல்லையேல் உரம்

– சே குவேரா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

நகுலேஸ்வரத்து நந்தியில் தெய்வீகம் கண்டோம்

கீரிமலை நகுலேஸ்வரத்தில் இலட்சக்கணக்கான பக்தர்களின் வழிபாட்டுக்கும் பார்வைக்கும் உரித்தாக நின்று விளங்கிய நந்தி (காளை மாடு) ஜூலை மாதம் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (நேற்று முன்தினம்) ஏகாதசி திருநாளில் இப்பூவுலகு விட்டேகியது என்ற செய்தியை அறிந்தோம்.

அந்தச் செய்தியின் தாக்கம் இனம்புரியாத பதற்றத்தை, மனநெருடலைத் தந்து நிற்கிறது.

இது எதற்கானது என்று புரியவில்லை. ஆனால் இதனை எழுதும்போதும் கன்னத்தின் ஓரங்கள் நனைகின்றன.

இதை நாம் கூறுவது பலருக்கு விசித்திரமாக இருக்கலாம். ஆனாலும் இயற்கை என்பது விந்தை மிகுந்தது என்ற அடிப்படையில், நீங்களும் ஐந்தறிவு ஜீவராசிகளுக்குள்ளும் இரக்கம், கவலை, நன்றி என ஏகப்பட்ட பண்புடமைகள் இருப்பதைக் கண்டிருப்பீர்கள்.

அவ்வாறே யாழும் நந்தியின் உயிர் வாழ்வோடு தொடர்புபட்ட அனுபவத்தால் நந்திக்குள் இருந்த தெய்வீகத்தை உய்த்துணர முடிந்தது. அதுவே நம் நெருடலுக்குக் காரணம் என்று ணர்கிறோம்.

கீரிமலை நகுலேஸ்வரத்து நந்தியின் கதை மிகப்பெரியது. அதை விரித்துரைக்க இஃது நேரமன்று.

ஆனாலும் அதுபற்றிய சிறு குறிப்புரையேனும் உங்களை வந்தடைவது கட்டாயமானது.

கீரிமலை நகுலேஸ்வரத்து நந்தியின் உயிர் 25.03.2012 ஞாயிற்றுக்கிழமை அன்று பிரிந்திருக்க வேண்டும்.

ஆம், அந்தக் காளை மாட்டை வெட்டுவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகி விட்டன.

யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட கொட்டடியில் உள்ள கொல்களத்தில் அந்தக் காளை மாடு கட்டப்பட்டிருக்கிறது.

மறுநாள் சனிக்கிழமை மட்டுமே அதற்கு வாழுகின்ற உரிமை.

விடிந்தால் ஞாயிற்றுக்கிழமை கொல்களத்தில் காளை மாடு கொல்லப்படும். அதன் உடற் பாகங்கள் மாட்டிறைச்சிக் கடையில் தொங்கிக் கொள்ளும் இதுவே நடைமுறை. ஆனால், அதுதான் நடைபெறவில்லை.

காளை மாட்டின் தோற்றம், அதன் இரக்கமான பார்வை அந்தக் காளை மாட்டின் உயிரை எப்படியும் காப்பாற்றியாக வேண்டும் என்ற உணர்வை அனைவரிடமும் ஏற்படுத்துகிறது.

24.03.2012 சனிக்கிழமை வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் **காளை மாடு கதறுவது கேட்கவில்லையோ** என்பதாகத் தீட்டப்பட்டது.

அதன் அடிப்படையில், காளை மாட்டை வெட்டுவது நிறுத்தப்படுகிறது. காளை மாட்டை வெட்டுவதற்காக அதனை வாங்கியிருந்த முஸ்லிம் வர்த்தகர் யாழ்.மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடுக்கிறார்.

வழக்கின் தீர்ப்பு 02.05.2012 அன்று வெளிவருகிறது. காளை மாட்டை வெட்டுவதற்குத் தடை. கீரிமலை நகுலேஸ்வரத்தில் அதனை வாழவிடுங்கள் என்பதாகத் தீர்ப்பு அமைய,

யாழ்ப்பாணத்தில் இருந்து திறந்த வாகனத்தில் காளை மாடு நகுலேஸ்வரத்தை நோக்கிச் செல்கிறது.

என்னே அதிசயம். ஆலய முன்றலில் இறங்கிய காளை மாடு முன் செய் தவப் பயன்போல் நகுலேஸ்வரப் பெருமானை நோக்கிய வண்ணம் ஆலயத்துக்குள் செல்கிறது. இவையெல்லாம் நடந்து முடிந்த அற்புதங்கள்.

ஏழு ஆண்டுகள் நகுலேஸ்வரப் பெருமானின் ஆலயத்தில் வாழ்ந்திருந்த நந்தியம்பெருமான் 28.07.2019 ஞாயிற்றுக்கிழமை இவ்வுலகு விட்டேகியது என்பது மட்டுமே இனி மிச்சமாகும்.

ஆனாலும் அந்த நந்திக்குள் இருந்த தெய்வீக அற்புதம் இன்னமும் எங்களை இப்பிரபஞ்சத்தின்பால்; இறைவனின் திருவிளையாடலின்பால் வலுவான நம்பிக்கையை ஏற்படுத்தி நிற்கிறது என்பதுதான் உண்மை.

எமது இனத்தை அழித்த ஐ.தே.கட்சிக்கு த.தே.கூட்டமைப்பு ஆதரவளிக்கிறது

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் குற்றச்சாட்டு

(கரணவாய்)

இன்று அரசியல் நாடகம்தான் இடம்பெறுகிறது. நாம் திரும்பியும் ஏமாறக் கூடாது. நாங்கள் சிந்திக்காதுவிட்டால் எமது எதிர்காலம் இல்லாமல் இருக்கும் "ஐக்கிய தேசியக் கட்சி எமக்கு சரிவராது" அக் கட்சி எமது இனத்தை அழித்து கொடூரம் செய்தது. அக்கட்சிக்கு இன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உடந்தையாக இருக்கிறது எனத் தெரிவித்தார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்.

வல்வெட்டி விநாயகர் வித்தியாலய மைதானத்தில் நேற்று திங்கட்கிழமை (29) மாலை இடம்பெற்ற "மக்கள் மன்ற" நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை மாற்ற வேண்டிய தேவை இன்று ஏற்பட்டிருக்கிறது.

கம்பரெலிய என்பது எமது கிராமத்தை அழிக்கிற வேலை எனக் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் உள்ள இடங்களிலே கம்பரலியா அபிவிருத்தி வேலைகள் இடம்பெற்றன. மற்றைய இடங்களில் நடைபெறவில்லை.

பாகுபாடு பார்த்து வேலைகள் நடைபெறுகின்றன என குற்றஞ்சாட்டினார்.

யாரும் ஆட்சிக்கு வரலாம் ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி எமக்கு வேண்டாம்.

அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அடிமைகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை அடிமைகளாக்கப்பட்டு எங்களது அபிலாசைகளை அடகு வைத்து எங்களை எழுதிக் கொடுக்கிற நிலைக்கு வந்தாச்சு.

அதற்கு எதிராக இருக்கின்றவர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என அழைப்புவிடுத்தார்.

(ம-3,60)

ஹக்கீமின் வீட்டிலிருந்த 60 இலட்சம் பணம் திருட்டு

பொலிஸில் முறைப்பாடு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமின் வீட்டிலிருந்த 60 இலட்சம் ரூபாய் பணம் காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு கறுவாத்தோட்டம் பொலிஸில் நேற்று முன்தினம் இரவு ரவூப் ஹக்கீமின் மனைவி சானாஸ் ஹக்கீமினால் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

இந்நிலையில், கொழும்பு மத்திய பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் நிசாந்த டி சொய்சாவின் ஆலோசனைக்கு அமைய கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கீழ் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ம-3)

தலைமன்னாரில் கைது செய்யப்பட்ட ஆறு இந்திய மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(மன்னார்)

தலைமன்னார் கடற் பரப்பில் வைத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை(28) கடற்படையினரினால் கைது செய்யப்பட்டமன்னார் கடற்தொழில் திணைக்களத்தினூடாக நேற்று திங்கட்கிழமை(29) மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட 6 இராமேஸ்வர மீனவர்களையும் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் மாணிக்கவாசகம் கணேசராஜா உத்தரவிட்டார்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த குறித்த 6 மீனவர்களும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீன் பிடித்துக்கொண்டு இருந்த போது இலங்கை கடற் பரப்பில் வைத்து கடற்படையினர் கைது செய்தனர்.

கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் மன்னார் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் நேற்றுதிங்கட்கிழமை(29) குறித்த மீனவர்களை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த மீனவர்களை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ம-3,285)

மன்னாரில் கட்டுத்துவக்கு வைத்திருந்தவர் கைது

(கரணவாய்)

மன்னார் பகுதியில் கட்டுத்துவக்கினை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (28) இரவு பரப்பாங்கண்டல், குருவில் பகுதியில் கட்டுத்துவக்கினை ஒருவர் வைத்திருப்பதாக உயிலங்குளம் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார், கட்டுத்துவக்கினை மீட்டதுடன் அதனை வைத்திருந்த வட்டக்கண்டல் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரையும் கைது செய்தனர்.(ம-60.3)

வாக்குமூலம் பெறத் தேவையிருந்தால் தெரிவுக்குழுவில் முன்னிலையாவேன்

இராணுவத் தளபதி மகேஷ்

(கொழும்பு)

நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க வருமாறு எனக்கு உத்தியோகபூர்வ அழைப்பு வரவில்லை என இராணுவத்தளபதிமகேஷ் சேனநாயக்க தெரிவித்தார்.

எனினும் எண்ணிடம் மீண்டும் வாக்குமூலம் பெறவேண்டும் என்ற தேவை அவர்களுக்கு இருந்தால் தெரிவுக்குழு முன்னிலையில் ஆஜராவேன் என்றும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

இது குறித்து நேற்று திங்கட்கிழமை கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்று குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு இராணுவத் தளபதி நாளை புதன்கிழமை மீண்டும் அழைக்கப்படுவார் எனத் தெரிவுக்குழு உறுப்பினர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

- வளர்ச்சிக்குத் துணை செய்யும் அனைத்தும் நன்மை. வீழ்ச்சிக்குத் துணைபுரியும் அனைத்துமே தீமை. 3,60)
- சுயநலம் அற்றதே நல்லொழுக்கம். எந்த நிலையிலும் சுயநலத்தை மறக்கப் பழகுங்கள்.
- வீண் விவாதத்தில் ஈடுபட யாராவது உங்களை அணுகினால் அவர்களை விட்டு விலகிக் கொள்வதே விவேகமான செயல்.
- கோழையாகவும், வேடதாரியாகவும் இருக்காதீர்கள். உண்மை எங்கு இழுத்துச் சென்றாலும் அதைப் பின்பற்றிச் செல்லுங்கள்.

சந்திரன் அணியை வீழ்த்தி சம்பியனானது புதிய சூரியன்

பரந்தாமன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் அமரர் - பழனிநாதன் பிரபாகரன் இரண்டாம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு நடத்தப்பட்ட "பிரபா வெற்றிக் கிண்ணம்" 2019 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி மற்றும் பரிசில் வழங்கல் நிகழ்வு கடந்த 28 ஆம் திகதி 2 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெற்றது. இதில் புதிய சூரியன் அணி வெற்றி வாகை சூடியது.

இறுதிப்போட்டியில் சந்திரன் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து புதிய சூரியன் அணியினர் மோதினர்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற உதயசூரியன் அணியினர் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்து சந்திரன் விளையாட்டு கழகத்தினருக்கு துடுப்பாட்டத்தை வழங்கியிருந்தனர்.

இதனையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய சந்திரன் அணியினர் 11 ஓவர்கள் 4 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றனர். துடுப்பாட்டத்தில் சந்திரன் அணி சார்பாக கஜன் 23 ஓட்டங்களை பெற்றார்.

பந்துவீச்சில் புதிய சூரியன் அணி சார்பாக ருஷாந் மற்றும் கிருபா ஆகியோர் தலா மூன்று இலக்குகளைச் சரித்தனர்.

பதிலுக்கு 75 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய புதிய சூரிய அணியினர் 6 ஓவர்கள் ஐந்து பந்துப் பரிமாற்றங்களில் ஐந்து இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர். துடுப்பாட்டத்தில் றொசாந்த் 33 ஓட்டங்களைப் பெற்றதுடன் சந்திரன் அணி சார்பாக பந்து வீச்சில் கஜன் இரண்டு இலக்குகளை சரித்தரித்திருந்தார்.

போட்டியின் தொடர் நாயகனாக புதியசூரியன் அணியின் ருஷாந். சிறந்த துடுப்பாட்ட வீரனாக உதயசூரியன் அணியின் தங்கராசா. சிறந்த பந்து வீச்சாளராக புதிய சூரியன் அணியின் அஜெய். இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக புதிய சூரியன் அணியின் ருஷாந் தெரிவு செய்யப்பட்டனர்.

பரந்தாமன் விளையாட்டுக் கழகத் தலைவர் அமிர்தலிங்கம் அனுசன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் இலட்சுமிகாந்தன் சந்திரரூபன். சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செல்லையா பிரேமகாந், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் இரத்தினம் ஜெகதீஸ்வரன் பண்டாரவன்னியன் மகா வித்தியாலய அதிபர் ஆகியோர்கலந்துகொண்டனர். (க-28)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

பெண்களுக்கான கரப்பந்தாட்டம் சைனிங்ஸ் அணி சம்பியன்

றெயின்போ விளையாட்டுக் கழக ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்திய பெருவிளையாட்டுத் தொடரின் பெண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் சைனிங்ஸ் அணி நேதாஜி அணியுடன் மோதியது.

சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தி 25:18, 25:17 புள்ளிகள் மூலம் 2:0 என்ற நேர்செட் கணக்கில் சைனிங்ஸ் அணி வெற்றிபெற்று தொடர்ச்சியாக மூன்றாவது கிண்ணத்தை சுவீகரித்தது.

இறுதிப்போட்டியின் சிறந்த வீராங்கனையாக சைனிங்ஸ் வீராங்கனை அனுஷாவும் தொடரின் சிறந்த வீராங்கனையாக சைனிங்ஸ் வீராங்கனை கிருத்திகாவும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

சுப்பர் 8 இற்குள் நுழைந்தது குருநகர் பாடும்மீன் அணி

யாழ் லீக் அனுசரணையுடன் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம் மறைந்த கழக வீரர் சோபநாத் நினைவாக 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட தொடரின் இரண்டாவது போட்டியில் அச்செழு வளர்மதி அணியை 4-1 என்ற கணக்கில் வெற்றி பெற்று சுப்பர் எட்டுக்குள் தகுதி பெற்றது பாடும்மீன் அணி. பாடும்மீன் அணியின் வெற்றிக் கோல்களை சந்தன், கீதன் , ஜீவன் கெர்சோன் ஆகியோர் அடித்து அசத்தினர். (க-106)

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் வரிசையில் கடந்த 28 ஆம் திகதி நூற்றாண்டு விழா தலைவர் த. ஹரிசாந் தலைமையில் நடைபெற்ற சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளின் பதிவுகள் ... (க)

போதைக்கு எதிராக தனித்து...

சிறிசேன தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று திங்கட்கிழமை அழகிய சப்ரகமுவ நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் கித்துள் தொடர்பான சட்ட வரைவை வெளியிடுதல் ஆகியவற்றை முன்னிட்டு சப்ரகமுவ மாகாண சபை கட்டிடத் தொகுதியில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, சப்ரகமுவ மாகாண சபையினால் முன்னெடுக்கப்படும் 'எமது வீடு அழகானது' என்ற திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு, வீட்டு நிர்மாணப் பணிகளுக்கான அனுசரணை வழங்கப்பட்டதுடன், அவர்களுக்கான ஆவணங்களையும் ஜனாதிபதி வழங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து கித்துள் சார்ந்த உற்பத்திகள் உள்ளடங்கிய கண்காட்சியையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

இதன்போதே, போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பிலான தனது வேலைத்திட்டத்தில் மக்கள் தமக்கு ஆதரவினை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

எதிர்கால தலைமுறையினருக்காக சிறந்ததோர் நாட்டை கட்டியெழுப்புவதற்காகவே தான் அனைத்து தீர்மானங்களை மேற்கொள்வதாகவும் ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டார்.

மேலும், அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து நாட்டுக்காக மேற்கொள்ள வேண்டிய பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்ற முன்வர வேண்டும் என்றும் அவர் இந்த நிகழ்வின்போது கேட்டுக்கொண்டார். இந்த நிகழ்வில், வடக்கின் ஆளுநர் சுரேன் ராகவன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள், மதத்தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-3)

ஊடகங்கள்...

தால் நாடு ஒன்று இருக்கின்றதா? என்று சிந்திக்கும் விதமாக அமைந்துள்ளதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ஜனாதிபதி இதனைக் கூறினார்.

சில தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் இந்த செய்திகள் இன்று நேற்று அல்ல. பல நாட்களாக இவ்வாறுதான் இடம்பெற்று வருகின்றன. மிகவும் மோசமான, நாகரீக மற்ற சமூக செயற்பாடுகளை தொலைக் காட்சிகள் இவ்வாறு வெளிப்படுத்தி வருகின்றன.

இருப்பினும், ஊடகங்கள் காட்டும் நிலையில் அல்ல நாடு காணப்படுவதாகவும் அதனை விட சிறந்த நிலையில் உள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார். (ம-3)

எமது குடும்ப அரசியல் வரவை...

மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இரண்டு தடவை ஜனாதிபதி பதவி வகித்தவர் மீண்டும் போட்டியிட கூடாது என்று தனக்கும், இரட்டை குடியுரிமையினை கொண்டவர்கள் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட கூடாது என்று கோத்தபய ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷவிற்கு எதிராகவும், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வயது 35 ஆக அதிகரித்தமை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரை மையப்படுத்தியே அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மிக சூட்சமமான முறையில் குறைக்கப்பட்டுள்ளது. இதுவே இன்றைய அரசியல் அதிகார பிரச்சினைக்கு பிரதான காரணம். பிரதமர் ரணில் விக்ரமசிங்க மிகவும் சூட்சமமான முறையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஏமாற்றியுள்ளார். ஆகவே அதனை அவர் ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பொதுஜன பெரமுனவின் பெலியத்த பிரதேச தொகுதி அமைப்பாளர் கூட்டம் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்றது. இதில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-3)

அரசியல் அதி...

தேர்தலை நடத்துவது பொருத்தமற்றதாகும் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான வர்த்தமாணி அறிவித்தல் வெளியிடப்படும் என்று தற்போது குறிப்பிடப்படுகின்றது. அரசியல்தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும், ஜனாதிபதி தேர்தலின் தேர்தல் மீதான கவனத்தை திசை திருப்பவுமே தற்போது. இவ்வாறான பயனற்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-3)

பொதுமக்களை பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்

சாலிய பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுமக்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கத் தலைமையின் பொறுப்பாகும் என்று உச்சநீதிமன்ற சட்டத்தரணி சாலிய பீரிஸ் வலியுறுத்தியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுத்துக் கொள்ளத் தவறியதன் மூலம் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக கிறிஸ்தவ அருட்தந்தையர்களின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு இரண்டாவது நாளாக நேற்று தொடர்ந்தும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

உச்சநீதிமன்ற தலைமை நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் ஏழு நீதியரசர்கள் அமர்வின் முன்பாக நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது வாதிகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சாலிய பீரிஸ் ஆஜராகியிருந்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட சட்டத்தரணி சாலிய பீரிஸ், இச்சம்பவத்தின் மூலம் பாரிய உயிர் மற்றும் உடைமை இழப்புகள் ஏற்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதும் அதிகாரிகள் போதிய கவனம் செலுத்தவில்லை. அதன் காரணமாக பொதுமக்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கான பாதுகாப்பை வழங்குவது அதிகாரிகளின் கடமையாகும். பொதுமக்களைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஜனாதிபதியின் செயலாளர் இச்சம்பவம் தொடர்பில் அறிந்திருந்தமையை சத்தியப் பிரமாணம் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் நேரடியாக அரசாங்கத்தின் தலைமைத்துவம் பொறுப்புக் கூற வேண்டும். ஆனால் உரிய தரப்பினர் தங்கள் பொறுப்புகளை மீறிச் செயற்பட்டிருப்பது தெளிவான சாட்சியங்களின் அடிப்படையில் விளங்கிக் கொள்ள முடிவதாகவும் சட்டத்தரணி சாலிய பீரிஸ் தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (ம-3)

மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்படாமல் 5 ஜி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில்லை

கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. குறித்த கூட்டம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இணைத் தலைவர்களான பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், பராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஆகியோரின் இணை தலைமையில் ஆரம்பமாகியது. இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், திணைக்களம்சார் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்,

நேற்றைய கூட்டத்தில் கடந்த மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், மற்றும் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் 5ஜி தொழில்நுட்ப கோபுரங்கள் அமைக்கப்பட்டமை தொடர்பில் ஆராயப்பட்டது. குறித்த கோபுரம் உருத்திரபுரம் உள்ளிட்ட சில பகுதிகளில் நிர்மாணிக் கப்பட்டுள்ளதாகவும், அவை இங்கு அமைக்கப்படுவதற்கான நோக்கம் என்ன என்பது தெரியவில்லை எனவும் பாராளுமனற உறுப்பினர் சிறிதரன் கேள்வி எழுப்பினார். இவற்றுக்காக பிரதேச சபைகளிடம் அனுமதி பெறப்பட்டதா என அவர் பிரதேச சபை தவிசாளர்களிடம் வினவினார். அவ்வாறு பிரதேச சபைகளிடம் கோபுரங்கள் அமைப்பதற்கு பிரதேச சபைகளால் அனுமதி வழங்கப்படவில்லை என அவர்கள் தெரிவித்தனர். இவற்றினால் ஏற்படும் சாதக பாதகமான நிலை தொடர்பில் மக்களிற்கு விழிப்புணர்வு வழங்கப்படாது அவற்றை நடைமுறைப் படுத்த வேண்டாம் என அபிவிருத்தி குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் அரசாங்க அதிபர் தற்போது மாவட்டத்தில் உள்ள வரட்சியான நிலை தொடர்பிலும், பாதிப்புக்கள் தொடர்பிலும் தெரிவித்தார். தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் அரசினால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களில் முழுமை பெறாத திட்டங்கள் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிட்டிருந்தார். பேருந்து நிலையம், விளையாட்டு மைதானம், பூநகரி குளம், மாவட்ட கலாசார மண்டபம், பொதுநூலகம், A9 சமாந்தர வீதி, பூநகரிக்கான குடிநீர் ஆகியன இவ்வாறு முழுமை பெறாத திட்டங்களாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

படையினர் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களங்களின் கட்டுப்பாட்டில் உள்ள வட்டக்கச்சி விவசாய பண்ணை மற்றும் விவசாய பாடசாலை காணியை படையினர் விடுவிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. குறித்த 90 ஏக்கர் காணியில் 7 ஏக்கர் வரையான காணியிலேயே படையினர் இருப்பதாகவும். அவர்கள் அங்கிருந்து மக்களிற்கான பாதுகாப்பு பணிகளை முன்னெடுப்பதாகவும், அதேவேளை போதைப்பொருட்களை கட்டுப்படுத்துவதற்காகவும் அங்கு இருக்க வேண்டி உள்ளதாக கிளிநொச்சி படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ரவிப்பிரிய தெரிவித்தார். எனினும் குறித்த காணியை விடுவிப்பதில் எவ்வித பிரச்சினையும் தமக்கு இல்லை எனவும், உரிய முறைப்படி அறிவுறுத்தல் கிடைக்குமிடத்து அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார். (ம-3)

நகுலேஸ்வரத்து நந்தி இறையடி...

பெருக்கத்திற்காக திருநெல்வேலி கால் நடை வைத்தியசாலையில் பராமரிக்கப்பட்டுவந்த பிரஸ்தாப காளைமாடு ஏலத்தில் விற்கப்பட்ட போது, அதனை முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் வாங்கியிருந்தார்.

அதனை இறைச்சிக்காக வெட்டுவதற்கு முன்பாக, காளை மாட்டின் படத்துடன் துண்டுப்பிரசுரம் அச்சிட்டு வெளியிட்டதுடன் காளை மாட்டை கண்காட்சிப்படுத்தியுமிருந்தார்.

இதனையடுத்து, காளை மாடு கதறுவது கேட்கவில்லையோ என்று வலம்புரி நாளிதழ் தனது ஆசிரியர் தலையங்கத்தில் எழுதியிருந்தது.

ஆசிரியர் தலையங்கம் எழுதப்பட்டதையடுத்து காளை மாட்டை வெட்டுவதற்கு அன்றைய யாழ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தடைவிதித்தார்.

தொடர்ந்து யாழ்ப்பாண நீதிமன்றில் வழக்கு நடைபெற்ற நிலையில், குறித்த காளை மாட்டை யாழ்.வர்த்தக சங்கம் கொள்வனவு செய்து கீரிமலை நகுலேஸ்வரத்தில் வைத்து பராமரிக்குமாறு நீதிபதி ம.கணேசராசா தீர்ப்பளித்ததையடுத்து 02.05.2012 அன்று காளைமாடு கீரிமலை நகுலேஸ்வரத்துக்கு கொண்டு சென்று விடப்பட்டது.

கடந்த ஏழு வருடங்களாக இலட்சக்கணக்கான பக்தர்களின் தரிசனத்திற்குரிய நந்தியாக இருந்த காளை மாடு நேற்று முன்தினம் 28ஆம் திகதி பிற்பகல் 3.00 மணியளவில் இப் பூவுலகை விட்டேகியது.

இறையடி எய்திய நந்திக்கு அபிஷேகம் இடம்பெற்று, வெண்ணீறு பூசி, வெள்ளைநிற ஆடைகள் விரிக்கப்பட்டு வேத மந்திரங்கள் ஓதி, கீரிமலை புண்ணிய பூமியில் சமாதி வைக்கப்பட்டது.

கீரிமலை நகுலேஸ்வரத்தில் இதுகாறும் காட்சியளித்த நந்தியின் மறைவு பக்தர்கள் பலரையும் வேதனைப்படுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

வலிகாமம் வடக்கில் கொட்ட...

நேற்றை தினம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட வலி. வடக்குப் பிரதேச சபை உறுப்பினர் சஜீவன் குறித்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அநுராதபுரப் புற்று நோய் வைத்திய சாலையில் சேர்க்கப்படுகின்ற கழிவுகளும் மற்றும் ஏனைய மருத்துவக் கழிவுப் பொருட்களும் வலி வடக்குப் பிரதேசத்தில் எரிப்பதற்காகக் கொண்டு வரப்படுகின்றது.

1200 பாகை செல்சியஸ் வெப்ப நிலையிலேயே அவற்றை எரிக்க வேண்டும். ஆனால் தெல்லிப்பழை யிலுள்ள இயந்திரம் 850 பாகை செல்சியஸ் வெப்பத்தை வெளியிடுவது. இதனால் தெல்லிப்பழை புற்றுநோயாளர் வைத்தியசாலையில் அகற்றப்படும் மனித உடல் கழிவுகளையே எரிக்க முடியாமல் உள்ளது.

இந்த நிலையில் எப்படி, தெற்கிலிருந்து மனித உடல் பாகங்கள் இங்கு எடுத்து வரப்பட்டன? என வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சஜீவன் கேள்வியெழுப்பினார்.

மேலும் வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன், மனிதக் கழிவுகள் தெல்லிப்பழையில் தேக்கி வைக்கப்பட்டுள்ளதை ஏற்றுக் கொண்டதுடன், அவற்றை திருப்பியனுப்ப நடவடிக்கையெடுப்பதாக தெரிவித்தார். (ம-3,10)

மக்களின் பிரச்சினை தொடர்பில்...

டித்துறை மண்ணில் வைத்து கடுமையாக சாடினார் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கஜன் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் மக்கள் மன்ற நிகழ்வு வல்வெட்டி விநாயகர் வித்தியாலய மைதானத்தில் நேற்று திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது.

அங்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நான் தமிழர் பிரச்சினைக்கு என்ன தீர்வு என கதைக்க மாட்டேன். சம்பந்தன் ஐயா 40 வருடமாக உங்கள் பிரச்சினை குறித்தே பேசுகிறார்.

இப்போது தேர்தல் வரப்போகிறது. இங்கு இளைஞர்கள் வேலை வாய்பு வேண்டும் என்றால் ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்கிறார்கள்.

பாடசாலைகள், நெடுஞ்சாலைகளின் அபிவிருத்தி பற்றி பேசினால் அரசியல் தீர்வு வராது என்கிறார்கள்.

கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களிற்கு வாகனம், வீடு, சம்பளம் வேண்டும் என்றால் அப்பதான் அரசாங்கத்திடம் பேசுவார்கள்.

அவர்களிற்கு இளைஞர்களின் பிரச்சினை குறித்து பேச நேரமில்லை என கடிந்து கொண்டார்.

வடக்கு மக்களைப் போல தெற்கு மக்களுக்கும் பிரச்சினைகள் இருக்கிறது. யாழ்ப்பாணத்திலே பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை இருக்கிறது. பொலிஸ், அரசதிணைக்களங்களில் தமிழ் பேசக் கூடியவர்கள் இல்லை. வங்கிகளுக்கு சென்றால் அங்கு வட்டி அதிகம் யாழில் ஒரு அம்மா பெற்ற கடனைக் கட்ட முடியாமல் பிள்ளைகளுடன் தற்கொலை செய்தார் என நினைவுபடுத்தினார். இதற்கு அரசாங்கம் தீர்வு தர வேண்டும் என்றார்.

யாருக்கு வாக்களிக்க வேண்டும் என நான் கூறமாட்டேன். யாழ்ப்பாணத் தமிழ் மக்களிற்கு நல்ல அறிவு இருக்கிறது. அதைப் பயன்படுத்தி உங்களிற்காகவும், உங்கள் பிள்ளைகளிற்காகவும், நாட்டிற்காகவும் உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும். ஏமாறாமல் நல்லாக சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்றார்.

தமிழ் சிங்கள கலாசாரம் சமனானது. தமிழர் சிங்களவர் சிந்தித்துத்தான் முடிவு எடுப்பார்கள்.

திருமணம் என்று வருகிற போது நல்ல வேலைசெய்கிறாரா, நல்ல சம்பளம் எடுக்கிறாரா வீடு இருக்கிறதா, கோவிலுக்கு கூட்டிட்டு போவாரா எனப் பார்ப்பம் ஆனால் வாக்களிக்கும் போது அவ்வாறு பார்ப்பதில்லை. திருமணத்திற்கு தொழில் வருமானம் என பார்க்கிற நாங்கள் வாக்களிக்கும் போது சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

தெற்கிலும் இதே நிலைதான் அங்கு நாய் ஒன்றை வாங்கும் போது அதன் பாட்டன் யார் என்று பார்க்க வேண்டும். வாக்களிக்கும் போது அவ்வாறு பார்ப்பதில்லை.

30 ஆண்டுகள் யுத்தத்தால் பாடுபட்டோம் அந்த கசப்பான அனுபவத்தை எதிர்கால பிள்ளைகளிற்கு தர முடியாது.

எனவே பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய அபிவிருத்தியை செய்யக்கூடிய பிரதிநிதிகளிற்கு வாக்களிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (ம-60)

யாழ் நோக்கி பயணித்த சொகுசு பேருந்து...

லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பஸ்ஸில் பயணித்த 8 பேர் காயங்களுக்குள்ளாகி மதவாச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அதில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம், நல்லூர் - கல்வியங்காட்டுப் பகுதியைச் சேர்ந்த சதாசிவம் சுகந்தி (வயது 53), அவரின் மகளும் கிளிநொச்சி, கரியாலை நாகபடுவான் மகா வித்தியாலய ஆசிரியையுமான அஜந்தன் கோபிகா (வயது 30) மற்றும் செல்வநந்தன் பிமிநாத் (வயது 12), ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த சுகந்தியின் கணவர் சதாசிவம், கோபிகாவின் இரண்டு மகள்கள், பிமிநாத்தின் தாய் செல்வரஞ்சன் சத்யா மற்றும் பிமிநாத்தின் சகோதரர் ஆகியோரே படுகாயமடைந்துள்ளனர்.

ஜேர்மனியிலிருந்து வந்த செல்வரஞ்சன் சத்யாவின் குடும்பமும், யாழ்ப்பாணத்திலிருந்து தனியார் அதிசொகுசு பஸ்ஸில் கட்டுநாயக்க விமான நிலையம் வந்து அவர்களை அழைத்துச் சென்ற உறவுகளுமே இந்த விபத்தில் சிக்கியுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் மதவாச்சி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

விபத்தில் காயமடைந்த ஏனைய ஐவரும் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுராதபுரம் வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் செல்வரஞ்சன் சத்யா பலத்த காயமடைந்துள்ளார் என்று அனுராதபுரம் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி மற்றும் தனியார் அதிசொகுசு பஸ்ஸின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்னர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மதவாச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

மீண்டும் பதவியை ஏற்ற முஸ்லிம்...

களில் 4 பேர் மீண்டும் தமது அமைச்சுப்பதவியை பெற்றுக்கொண்டனர்.

இராஜாங்க அமைச்சர்களான எச்.எம்.எம்.ஹரிஸ், பைசல் காசிம், அலி சாஹிர் மௌலானா ஆகியோர் அமைச்சுப் பதவிகளை நேற்று ஏற்றுக்கொள்ளவில்லை.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் மற்றும் இராஜாங்க அமைச்சர் அமீர் அலி பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் ஆகியோர் அமைச்சு பதவிகளை பெற்றுக் கொண்டனர்.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பை யடுத்து தமது அமைச்சுப் பதவிகளை மீள ஏற்பதற்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

அமைச்சராக இருந்த ரிஷாத் பதியுதீன் மற்றும் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி, கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா ஆகியோரை பதவி விலகக் கோரி, அத்துரலிய ரத்தன தேரர் நடத்திய உணவு ஒறுப்புப் போராட்டத்தை அடுத்து, எழுந்த சூழ் நிலைகளால், அரசில் அங்கம் வகித்த முஸ்லிம் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் 9 பேர் பதவி விலகினர்.

எனினும் கபீர் ஹாசிம் மற்றும் எம்.எச்.ஏ. ஹலிம் ஆகிய இருவரும் பதவிகளை பொறுப்பேற்றுக்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

10 மாத இரட்டைக் குழந்தை...

நிஹாமுதீன் அஹமட் அமீஸா என்ற 26 வயதுடைய குழந்தைகளின் தாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக சம்மாந்துறை பொலிஸார், அம்பாறை தடயவியல் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சந்தேகிக்கப்படும் குழந்தைகளின் தாயார் மனநோயாளியாக காணப்படுவதாகவும் நிந்தவூர் ஆதார வைத்தியாசலைக்கு அனுமதிக்கப்பட்டு பின்னர் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிப்படுகிறது.

அத்துடன் வீட்டில் இருந்த குழந்தைகளின் தந்தையான அலி யார் சியாதுல் ஹக்கிடம் (வயது-36) விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

தெரிவுக்குழுவில் சாட்சி...

தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையாத எந்தவொரு விடயத்திற்கும் ஒத்துழைப்பு வழங்க தயாராகவுள்ளதாக கப்பற்துறை மற்றும் துறைமுகங்கள் அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.

அத்துடன் தெரிவுக்குழுவில் சாட்சியமளிக்குமாறு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டால் சாட்சியமளிக்கத் தயாராக வுள்ளதாகவும் அவர் கூறினார்.

மாத்தறை - வெலிகம, வரக்கப்பிட்டிய மற்றும் மீருப்ப பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட மக்கள் சேவை நிலையமான சேவாபியச கட்டடத்தை மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (ம-3)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

(9737) தொடர்பு: றாஜ் - 077 679 6623

ஆங்கில வகுப்பு

தரம் 02; 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken With Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். (9734)

தொடர்புகளுக்கு : 076 707 0069 M.Suren

A/L - 2020

மாணவர்களுக்கான புவியியல்

PAPER CLASS

ஆசிரியர் : N.BABU

• அலகு ரீதியிலான வினா - விடை மீட்டல்

• புதிய, தனிப் பாட அனுமதி வழங்கப்படும்.

ஆரம்பம் - 03.08.2019

DMI ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். C.C.A சுன்னாகம் ஆட்ஸ் அக்கடமி புத்தூர் (9747)

T.P : 077 936 5087

ஆவது உ ஓம் சக்தி

31 வருட கல்விச் சேவையில்...

ஆரம்பம் 31.07.2019 (நாளை) புதன்கிழமை - பி.ப. 3.30 மணி

3 ஆம் தவணைக்கான வகுப்புக்கள்

தரம் 3 முதல் O/L வரை

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

புதிய **நாவலர்** கல்வி நிலையம் (C-7150)

ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம். T.Phone : 077 459 8440

விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

DELIVERY IN 3-5 DAYS

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி

0768226240 V2 TRAVELS

துரித தபால்கள் பொதிகள் சேவை

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு UK - 600/= Germaney - 700/= France - 700/=

திருமுருகன் கொம்நெற்

321, K.K.S.Road, Jaffna.

கிளை : திருநெல்வேலி, நெல்லியடி. 0777 554 528 (C-7109)

வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியில் இயங்கிவரும் ஏலிம் சிறுவர் இல்லத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றது.

01. சிறுவர் பராமரிப்பாளர் (13 வயதுக்குட்பட்ட ஆண்கள்) - இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

02. சிறுவர் பராமரிப்பாளர் (13 வயதுக்குமேற்பட்ட ஆண்கள்) - ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

03. சமையலாளர் - ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

நிபந்தனைகள்

35 வயதிற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும்.

இல்லத்தில் தங்கியிருந்து வேலை செய்ய கூடியவராய் இருத்தல் வேண்டும்.

ஆர்வமுடையோர் விண்ணப்ப சுயவிபரக்கோவையை இரு நபர்களின் சிபார்சுடன் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தவிசாளர்
ஏலிம் சிறுவர் இல்லம், மெமோறியல் ஒழுங்கை,
மானிப்பாய் தொ்.பே. இல : 072 768 1144 (9744)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
2020 ஜனவரி பரீட்சைக்கான

aat (SriLanka)
(AA1, AA2, AA3)
Qualification :- G.C.E. O/L 6 Passes
Medium - Tamil & English
ஆரம்பம் :- 03.08.2019

Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
021 222 3382,
021 222 9149 (C-7147)

SPOKEN ENGLISH

கள பயிற்சியுடன் கூடிய 3 மாதக்கற்கைநெறி

தொழில்புரிவோர், தொழில்தேடுவோர், பல்கலை மாணவர்கள் பட்டதாரிகள் மற்றும் இளைஞர் யுவதிகள் இணையமுடியும்! (C-7140)

முதலாவது சனி, ஞாயிறு பிரிவு ஆரம்பம் : 03.08.2019 சனி

1. காலை 08-10 2. மாலை 03-05

அனுமதி, புத்தகங்கள் மற்றும் சான்றிதழ் இலவசம்

ஆங்கிலத்தில் ஒரு சொல் தெரியாதவர்களும்கூட 3 மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசலாம்!

ஆங்கிலம் பேசமுடியாவிட்டால் இருப்பணம் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்

SAAMSON இங்கிலீஸ் வேக் செம் 403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர். 077 621 4567 021 222 4282

பயிற்சியுடன் உடனடி **வேலை வாய்ப்பு**

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, மருதங்கேணி, புத்தூர்

● பயிற்சிக்கால கொடுப்பனவு 7'500/-
● சம்பளம் -15'000/- (C-7017)

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0768226243 v2vacancies@gmail.com

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.